


கல்கி
ALKI 27-1-1957
4 அண
சர்வகலா சாலை இதழ்

பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்

உபயோகிக்கும் பெண்மணியை

—அவன் விரும்புகிறான் என்பதை அவன் மறைப்பதில்லை





முகத்தைக் கழுவியபின், எப்பொழுதும், அற்புத குணம் வாய்ந்த பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உபயோகியுங்கள். இது சருமத்தைப் பாதுகாக்கும் இயற்கை எண்ணெய்களின் நஷ்டத்திற்கு ஈடு கட்டி, உங்கள் சருமத்தைப் புதுமையுடனும் மாசற்றதாயும் வைக்கும். பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் சரும துவாரங்களினூடுருவிச் சென்று அழுக்கை அகற்றி, உங்கள் சருமத்தை முற்றிலும் சுத்தமாக வைக்கும்.



இலவச புஸ்தகம்

அழகுபற்றிய குறிப்புகள் கொண்ட Lovelier with Pond's என்ற எமது புஸ்தகத்தை வரவழையுங்கள். பி. ஓ. பாக்ஸ் நம்பர் 1612, பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு எழுதவும்

P.4 440(A)

மக்களின் வாழ்நிலை வளர்நிலை

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு, விவசாய உற்பத்தி கணிசமாய் அபிவிருத்தி யடைந்தது. இவைகளின் உற்பத்தி பெரிய, சிறிய பாசனத்திட்டங்கள், உயர்தர இயற்கை உரங்கள், ரசாயன உரங்கள், திருந்திய விதைகள், மண்வளப் பாதுகாப்பு போன்ற புது விவசாய முறைகள் முதலியவைகளைக் கையாண்டு இரண்டாவது திட்ட காலத்தில் இன்னும் அதிகரிக்கப்படும். இரண்டாவது திட்ட லட்சிய எல்லையை நாம் அடைந்து விட்டால் நம் தேவைகள் பெருமளவுக்கு கைகூடிவிடும்.

வயது வந்த ஒருவர் உபயோகிக்கும் உணவு தான்யம் தற்போதைய 17·2 அவுன்ஸிலிருந்து 18·3 அவுன்ஸுக்கும், சர்க்கரை உபயோகம் 1·4 அவுன்ஸிலிருந்து 1·7 அவுன்ஸுக்கும் உயரும். இவற்றைத் தவிர பருத்தி 23 லட்சம் டன்களும், சணல் 15 லட்சம் பேல்களும் அதிகரிக்கும்.


இரண்டாவது திட்ட மொத்த முதலீட்டில் 11.8 சதவிகிதம்—அதாவது ரூ. 568 கோடி விவசாயத்திற்காகவும் சமுதாய நல திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சமுதாய நலத் திட்டங்கள் தேசீய விஸ்தரிப்பு சேவைகளுடன் ஒன்றுபட்டு எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். மேலும் மீன்வளம், பண்ணைகள் அமைப்பு, கால்நடைப் பராமரிப்பு, காடுகள் பாதுகாப்பு போன்றவைகளை விருத்தி செய்வதாலும் அத்தியாவசியத் தேவைகளான மின்விசை, தண்ணீர் வசதிகளை அளிப்பதாலும் ஏற்படும் நன்மைகளால் சுயமுயற்சி ஊக்குவிக்கப்படும்.

இரண்டாவது திட்ட காலத்தில் 210 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு மேலாகவே பாசன வசதி பெறும். திட்ட முடிவில் மொத்தம் 880 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். கிராமங்களை மின்விசைமயமாக்கவும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான மின்விசையை ஈடுகட்ட தற்போதைய உற்பத்தி சக்தி அளவான 34 லட்சம் கி. வாட் 69 லட்சம் கிலோ வாட்டுக்கு அதிகரிக்கப்படும். சுருங்கக் கூறின், இரண்டாம் திட்டத்தில் செலவாகும் ஒவ்வொரு ரூபாயிலும் மூன்று அணுவுக்கு மேலாகவே பாசனம், மின்விசைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது

ஐந்தாண்டுத் திட்டம்

சமுதாய சுபிட்சத் திட்டம்



DA/56/194 Tm

கல்கி சர்வகலாசாலை இதழ்


பொருளடக்கம்

மலர் 16 | இதழ் 26

1957 ஜனவரி 27

துன்முகி ஸு | தை 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.


CLACK



மலர் 16
இதழ் 26

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி௵
தைமீ 14உ

நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்!

பாரத தேசம் கண்டும் கேட்டும் அறியாத ஓர் அதிசயம்!

காங்கிரஸ் மகா சரித்திரத்திலேயே இதுவரை நடைபெறாத ஓர் அற்புதம்!

ராஜ்ய சட்டசபைகளுக்கும், டில்லி லோக சபைக்கும் தங்களைக் காங்கிரஸின் பேரால் ஒரு அபேட்சகராக நிறுத்த மாட்டார்களா? என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த காலம் மலையேறிப்போய் விட்ட மகா அற்புதம்!

"தயவுசெய்து என்னைக் காங்கிரஸின் பேரால் தேர்தலில் நிறுத்திவிடாதீர்கள். எனக்குச் சொந்த வேலைகள் பல இருக்கின்றன!" என்று சொல்லிக் காங்கிரஸின் பேரால் தேர்தலில் நிற்க வைத்தவர்கள் தேர்தலில் இருந்து விலகி ஓடும் அதிசயம்!

இந்த அதிசய சம்பவங்கள் வேறு எங்கோ நடைபெற்று வருவதாகத் நினைக்க வேண்டாம். எல்லாம் நமது அருமைத் தமிழ் நாட்டிலேதான் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது நமக்கு ஒருபுறம் அளவுகடந்த துயரம் ஏற்படுகிறது. மற்றொருபுறம் இன்று காங்கிரஸ் உள்ள நிலையில் இப்படி நடைபெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற ஆறுதலும் ஏற்படுகிறது.

நாம் எதற்காக இவ்வளவு வருத்தமும் துயரமும் அடைகிறோம் என்பதை நேயர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம்.

காந்தி மகான் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெயரால், எத்தனை எத்தனையோ தேசபக்தர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து போற்றிய காங்கிரஸின் பெயரால் பொறுக்கப்பட்ட அபேட்சகர்கள் தமிழ்நாட்டில் படும் பாட்டைப் பார்த்துத்தான் வருத்தப்படுகிறோம்.

மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் நிற்பதைப் பெரிய பாக்கியமாகப் போற்றிக் கொண்டாடும்போது, தமிழ் நாட்டில் காங்கிரஸின் பெயரால் தேர்தலில் நிற்பதைக் கௌரவக் குறைவாக நினைக்க முன்வந்து விட்டார்கள்!

இப்படிக் காங்கிரஸின் பெயரால் தேர்தலில் நிற்பதற்கு முன் வராதவர்கள், காங்கிரஸ் கொள்கைகளைக் கை விட்டுவிட்டார்களா? இல்லை. பண்டித ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் நம்பிக்கை இழந்து விட்டார்களா? இல்லை.

ஆனால் தற்போது இருக்கும் தமிழ்நாட்டுக் காங்கிரஸில் இருக்க அவர்களுக்குப் பிடிக்கவில்லை; தமிழ்நாட்டுக்காங்கிரஸ் கமிட்டி அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்திருக்கும் போக்கு பிடிக்கவில்லை. இதனால் தாங்கள் இதுவரையில் மிகக் கண்ணியமாக நினைத்து வந்த பதவிகளைத் துறக்கிறார்கள். இரவு பகல் என்று பாராமல் தொண்டாற்றிப் பெற்ற தங்கள் ஜில்லா காங்கிரஸ் தலைமைப் பதவியையும், தாலூக்கா காங்கிரஸ் காரியதரிசி பதவியையும் ராஜினாமா செய்து வருகிறார்கள்.

இது எதைக் காட்டுகிறது? தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனம் எவ்வளவு சீரழிந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. காங்கிரஸ் எந்தப் புனிதமான கொள்கையின் அடிப்படையில் இதுகாறும் தொழிற்பட்டு வந்ததோ அந்தக் கொள்கையை இழந்து வகுப்புவாதிகளின் ஸ்தாபனமாகி விட்டது என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாடு காங்கிரஸின் இந்த அவல நிலையைப் பார்த்து உண்மையான காங்கிரஸ்காரர்கள், காந்தி மகானிடமும், பாரத தேசத்திடமும் பக்தி கொண்டவர்கள், உலகத்தில் பண்டித ஜவாஹர்லால் நேருவின் புகழுக்கு மாசு ஏற்படக்கூடாது என்று எண்ணுபவர்கள், மனம் நொந்து போகிறார்கள். தமிழ்நாட்டுக் காங்கிரஸுடன் தங்களுக்கு இருக்கும் உறவைக் கத்திரித்துக் கொள்கிறார்கள்.

இன்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனம் பிளவுபட்டு நிற்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி என்ற பெயரில் ஒரு கட்சியையே ஆரம்பித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமை காங்கிரஸுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் ராஜாஜி அவர்கள் ''காங்கிரஸுக்கு நல்ல எதிர்க் கட்சி வேண்டும்'' என்று கூறினார். ராஜாஜி என்ன கூறினார் என்பதைப் புரிந்து கொள்ளாத தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் ''ராஜாஜி காங்கிரஸுக்குள் எதிர்க்கட்சி வேண்டும் என்கிறாரே!'' என்று ஆத்திரப் பட்டார்கள். காங்கிரஸுக்கு என்று ராஜாஜி கூறியதைக் காங்கிரஸுக்குள் என்று விபரீதமாகப்புரிந்துகொண்டு வேதனைப்பட்டார்கள். அவ்வாறு பேசிய தலைவர்களே இன்று தமிழ்நாடு காங்கிரஸுக்குள் எதிர்க்கட்சியை உண்டாக்கி விட்டார்கள்.

இந்த நிலையில் தமிழ்நாட்டுப் பொது மக்கள்எந்தக் கட்சியை ஆதரிப்பது, யாருக்கு வோட்டுப் போடுவது என்ற குழப்பமான நிலைமையில் இருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களோ மக்கள் மத்தியில் ஒரு பயத்தை உண்டாக்கித் தங்களுக்கே வோட்டுப் போடச் சொல்லுகிறார்கள்.

''இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால்தான் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். காங்கிரஸைத் தவிர வேறு யாராவது ஆட்சிக்கு வந்து விட்டால் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது'' என்று மக்கள் மனத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒரு பீதியை உண்டுபண்ணுகிறார்கள்.

நாட்டு நலனில் அக்கறையுள்ள எந்த மக்கள் ஆட்சிக்கு வந்தாலும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்கள் இன்னும் சிறந்த முறையில் இன்னும் துரிதகாலத்தில் நடைபெற்றே தீரும்.

அதனால் காங்கிரஸின் பெயரால் நிற்கும் அபேட்சகர்களுக்குத் தான் வோட்டுப் போட வேண்டும் என்பது முக்கியமல்ல. நல்லவர்களுக்கு வோட்டுப் போடவேண்டும். யோக்கியர்களுக்கு வோட்டுப் போடவேண்டும். மக்கள் நன்மையிலும், நாட்டின் நலத்திலும் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கும் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கே வோட்டுப் போடவேண்டும்.

அன்று காங்கிரஸுக்காகக் காந்தி மகான் சொன்னார், பாரத நாட்டின் ஒப்பற்ற தலைவர் சொன்னார், சீலத்தின் உறைவிடம், ஒழுக்கத்தின் சிகரம், தியாகத்தின் கடல் என்றெல்லாம் போற்றப்பட்ட மாபெரும் தலைவர்கள் சொன்னார்கள் என்று காங்கிரஸின் பெயரால் நின்றவர்களுக்கு வோட்டுப் போட்டோம்.

இன்று சுயநலம் கொண்டவர்கள், வகுப்பு வாதிகள், ஒழுக்கத்தைப் போற்றாதவர்கள், தியாகத்தை வெறுப்பவர்கள் காங்கிரஸ் மகா சபையின் பெயரால் மக்களிடம் வோட்டுக் கேட்பதற்கு வருகிறார்கள்.

அன்று பயன் கருதாமல் தொண்டாற்றிய உத்தமத் தியாகிகள் கொண்ட ஸ்தாபனமாக இருந்தது காங்கிரஸ். காங்கிரஸ் தலைவர்கள் மக்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும் உண்மைத் தலைவராகவே இருந்தார்கள்.

இன்று காங்கிரஸ் குறுகிய மனம் படைத்தவர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது! சின்ன புத்தி படைத்தவர்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது! ஆகையால் மீண்டும் காங்கிரஸைத் தூய்மைப்படுத்தி அதற்கு நல்ல வழிகாட்டி அழைத்துச் செல்லும் பொறுப்பு பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அன்று நிறத்தையும் சின்னத்தையும் பார்த்து மட்டும் தேர்தல் பெட்டியில் வோட்டுப் போட்டோம். அந்தக் காலம் மாறி விட்டது. இன்று தகுதியும், திறமையும், ஒழுக்கமும், கடமை உணர்ச்சியும் கொண்ட அபேட்சகர்களைப் பார்த்து, வோட்டுப் போடும் காலம் வந்து விட்டது. ஆகையால் பொது மக்கள் தங்கள் கடமையை உணர்ந்து, தங்கள் கண்ணினும் இனிய சுதந்திரத்தை உணர்ந்து, தங்கள் உயிரினும் மேலான வாக்குச் சீட்டுகளை உபயோகிக்க வேண்டும்.

மொத்தத்தில் இந்தத் தடவை, நல்ல காங்கிரஸ்காரர்களைச் சட்ட சபைகளுக்கு அனுப்பும் மகத்தான பொறுப்பு பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது!

காங்கிரஸ் என்னும் புனிதச் செடி காந்தி மகான் போன்ற உத்தமத் தலைவர்களின் தியாகத்தால் வளர்க்கப்பட்ட செடி. மேலோர்கள் வெஞ்சிறையில் வெந்தும்; செக்கடியில் நொந்தும்; கல் உடைத்து வேதனைப்பட்டும் தங்கள், கண்ணீரால் அந்தச் செடியை வளர்த்தார்கள். அது இப்பொழுது ஓங்கி வளர்ந்திருக்கிறது. அந்தச் செடி வகுப்புவாத காங்கிரஸ் புல்லுருவிகளினால் பட்டுப் போகாமல் காப்பாற்ற வேண்டிய கடமையை உடையவர்கள் வாக்குரிமை பெற்ற பொதுமக்கள்.

பல்கலைக் கழகத் திருவிழா


பல்வேறு புனித ஆலயங்களுக்கும் கும்பாபிஷேகங்கள் நடக்கின்றன. கலை ஸ்தாபனங்களுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும் வெள்ளி விழா, தங்க விழா, வைர விழாக்கள் கொண்டாடப் படுகின்றன.

இதெல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமான அற்புதத் திருவிழா இவ் வாரம் கல்கத்தாவில் நடந்தது. சென்னைமா நகரிலும் பம்பாயிலும் நடக்கப் போகிறது.

சென்னையிலும் பம்பாயிலும் கல்கத்தாவிலும் பல்கலைக் கழகங்கள் ஆரம்பமாகி நூறு ஆண்டுகள் ஆகின்றன. 1857-ம் ஆண்டு ஆரம்பமான அக் கலைக் கோவில்களுக்கு நூறாவது ஆண்டு விழா கொண்டாடுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் பெருமையையும் அளிக்கும் விஷயம் அல்லவா!

கல்கத்தா பல்கலைக் கழகத்தின் நூறாவது ஆண்டு விழா இம்மாதம் 19ந் தேதியிலிருந்து

வண்டி எந்தப் பக்கம் போகும்?



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்துள்ள முறையில் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ள காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸை விட்டு விலகிச் சென்று தனிக் கட்சி ஆரம்பித்திருக்கிறார்கள்!

24ந் தேதிவரை விமரிசையாக நடந்தேறியது. சென்னையில் ஜனவரி மாதம் இருபத்தெட்டாம் தேதியிலிருந்து பிப்ரவரி மாதம் முதல் தேதி வரையிலும், பம்பாயில் பிப்ரவரி நாலாம் தேதியிலிருந்து ஒன்பதாம் தேதி வரையிலும் கலைக் கோவில்களின் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்த விழாக்களில் கலந்து கொள்வதற்காக கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு, பெர்மிங்காம் முதலிய உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த துணை வேந்தர்களும் பேராசிரியர்களும் மற்றும் பல பண்டிதர்களும் பிரமுகர்களும் இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்கள்.

மேற்படி நூற்றாண்டு திருவிழாக் காட்சிகளைப் பொதுமக்கள் கண்டு களிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

சென்ற நூறு ஆண்டுகளில் சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளிவந்தவர்களில் எத்தனை பேர் பேராசிரியர்களாகவும், பொருளாதாரப் பண்டிதர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், கலைநிபுணர்களாகவும் திகழ்ந்து பல்வேறு துறைகளிலும் மக்களுக்குத் தொண்டு புரிந்திருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட முடியுமா? அவர்களுடைய தொண்டையும் தியாகத்தையும் எண்ணிப் பார்ப்பவர்கள் மெய் சிலிர்க்காமல் இருக்க முடியாது.

எதிர்காலத்திலும் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவரும் நவ பாரதத்தின் இளம் புதல்வர், புதல்விகள் சுதந்திரத்தையும் மக்களின் கபிட்ச வாழ்வையும் பேணிப் பாதுகாக்கும் சிறிய சிற்பிகளாக விளங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத் திருவிழாவை ஆரம்பித்து வைப்பதற்காகப் பாரதப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு இங்கு விஜயம் செய்கிறார். அந்த விழாவில் கலந்து கொள்வதற்காகத் திரு சி. டி. தேஷ்முக் போன்ற மற்றும் பல பிரமுகர்களும் பேரறிஞர்களும் விஜயம் செய்கிறார்கள்.

பல்கலைக் கழகத் திருவிழா வெகு விமரிசையுடனும் வெற்றிகரமாகவும் நிறைவேற விரும்புகிறோம். சென்னை சர்வகலாசாலை சென்ற நூறு ஆண்டுகளில் டாக்டர் பட்டம் கொடுத்துக் கௌரவித்த அறிஞர்களின் திருவுருவப் படங்களை வேறு பக்கத்தில் பெருமையுடன் வெளியிட்டிருக்கிறோம்.

*　　　*　　　*

தஞ்சமென்று வணங்கிடும் தெய்வம்
　தரணி மீதறிவாகிய தெய்வம்....
தெய்வம்யாவும் உணர்ந்திடும் தெய்வம்
　தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்....
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
　கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.

இவ்விதம் கவிச்சக்கரவர்த்தி பாரதியார் பரவசத்துடன் தோத்திரம் செய்துள்ள கலைத் தெய்வமே, சர்வகலாசாலை இதழாகத் திகழும் இவ்வாரத்திய "கல்கி"யின் அட்டையை அலங்கரிக்கின்றது. அறிவுத் தெய்வம் அருங்கலைக் களஞ்சியங்களை அள்ளிக் கொடுத்து அருள் புரியும் தோற்றத்துடன் காட்சியளிப்பதை மகிழ்ச்சியுடன் வெளியிட்டுள்ளோம்.



மலர் அன்னை புகழ் பாடுவோம


பாரதியார்

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டிலிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியினாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழி லுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடையுற்றாள்.
இன்பமே வடி வாகிடப் பெற்றாள்.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்!
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ ?
போனதற்கு வருந்துதல் வேண்டா,
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்!





கலைமகள் கோயில்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

'என்ன, சிந்தனையில் அழுந்திவிட்டாய்?' என்றது குரல். பேசியது யார் என்று திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணோம்.

சிரிப்பொலி கேட்டது. மறுபடியும் அந்தக் குரல் பேசியது :

'கலைமகளை அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி என்பதைத் தான் விழுந்து விழுந்து படித்திருக்கிறாயே! கலைமகள் கொலுவீற்றிருக்கும் இங்கே, அவள் பாதத்தின் அடியிலே, நூறு வருஷமாக நிற்கிறேன். கல்தான். ஆனாலும் என்ன? கல்லும் சொல்லாதோ கவி?'

ஆம், சென்னை மாகாணக் கல்லூரியின் தென் கிழக்கு மூலையில், மண்ணிலே புதைந்து, தலையை மட்டும் வெளியிலே நீட்டிக் கொண்டிருந்த குத்துக்கல் ஒன்றுதான் பேசியது.

'எத்தனை வருஷமாக இங்கே இருக்கிறாய்?' என்று கேட்டேன்.

'நூறு வருஷத்துக்குமேல் ஆச்சு.'

'அப்படியானால் எங்கள் பல்கலைக் கழகம்—நூறு வருஷமாகத் திகழும் இந்தக் கலைக் கோயில்—இது பிறந்து வளர்ந்த கதையெல்லாம் உனக்குத் தெரியும் என்று சொல்.'

'ஏன் தெரியாது? சொல்லட்டுமா?' என்று ஆவலோடு கேட்டது அந்தக் கல்.

பனி விழத் தொடங்கிவிட்டது. காற்று சில்லென்று வீசியது. 'நானும் உன்னோடு சேர்ந்து கொண்டு இந்தக் கதையைக் கேட்கிறேனே' என்று சொல்லிக் கொண்டு, கடல் நீலப் பரப்பிலிருந்து வெளியே வந்தான் சந்திரன். கல் பேசியது :

'இப்போது சென்னை ராஜ்யம் என்று வழங்கும் இந்தப் பிரதேசம் சென்னை மாகாணமாய் இருந்த அந்தக் காலம். ராஜ்யத்தைவிட, மாகாணம் பெரியதாக இருந்தது என்றால் வேடிக்கையாக இல்லையா? அந்தக் காலத்தில், அதாவது நூற்றுப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன்பு, இங்கே சென்னையில் கவர்னராக இருந்தது யார் தெரியுமா?'

'தெரியாது' என்று தலை அசைத்தேன்.

'இது கூடத் தெரியாதா? நான் சொல்லுகிறேன். அவர் பெயர் எல்பின்ஸ்டன் பிரபு. ஆமாம், அவர்தான் 1837-ல் இருந்து 1842 வரையில் இங்கே கவர்னராக இருந்தவர். அந்தப் புண்ணியவான் போவதற்கு ஒரு வருஷத்துக்கு முன், அதாவது 1841-ம் ஆண்டில், 'பல்கலைக் கழக உயர்நிலைப்பள்ளி' (High School of the Madras University) என்ற கலாசாலை ஒன்றை நிறுவினார். முதன் முதலில் சர்வகலாசாலை ஒன்றுக்கு இங்கே வித்திட்டவர் அவரே.'

'அதென்ன, அப்படிச் சொல்லுகிறாய்? நமது நாட்டில் இதற்கு முன் பல்கலைக் கழகங்கள் இருந்ததில்லையா? நாலந்தா, தக்ஷசீலம், காசி முதலிய இடங்களில் எவ்வளவு பெரிய சர்வகலாசாலைகள் இருந்தன! தென்னாட்டிலும் அவற்றிற்குக் குறைவா? பாண்டியர்கள் மதுரையில் சங்கம் வளர்த்தார்கள். காஞ்சியில் பல்லவர்கள் கடிகாஸ்தானங்கள் நிறுவினார்கள். சோழர்கள் எழுப்பிய பெருங் கோயில்களை ஒட்டி எத்தனை பெரிய கல்வி நிலையங்கள் ஓங்கி வளர்ந்தன?'

'ஓ, நீயும் சரித்திரம் படித்திருக்கிறாயா?' என்றது கல். 'ஆனால், அப்பனே, அதெல்லாம் பழங்காலத்தில். இடைக்காலத்தில், அங்கங்கே கல்வி வளர்ந்தது என்றாலும் நாலந்தா, தக்ஷசீலம் போன்ற பெரு நிலையங்கள் இல்லாமல் போய் விட்டன. சமயம், தத்துவம், இலக்கியம், கலை இவற்றை ஏதோ குரு—சிஷ்ய பரம்பரையின் மூலமாக, நாட்டில் அங்கங்கே காத்து வந்தோம் என்பது உண்மைதான். என்றாலும், அறிவின் எல்லாத் துறைகளையும் பேணி வளர்த்து, எல்லோருக்கும் அதில் பங்களிக்க முற்பட்ட மத்திய ஸ்தாபனங்கள் — நூற்றுக்கணக்கான ஆசிரியரும் மாணவரும் ஒன்று சேர்ந்து அறிவைப் பெருக்கவும் பரப்பவும் பாடுபடும் பல்கலைக் கழகங்கள் — நாட்டிலே இல்லை. அதோடு, மேல்நாடுகளில் அமோகமாக வளர்ந்து வந்த கலைகளை, பஞ்ச பூதத்தின் நுட்பங்களைக் கூறும் விஞ்ஞானக் கலைகளை, நமது நாட்டிலும் வளர்ப்பதற்குக் கல்வி நிலையங்கள் தேவையாக இருந்தன. இந்தத் தேவையை, நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டில், நிறைவாக்க நினைத்தார் எல்பின்ஸ்டன் பிரபு.

நல்ல வேளையில்தான் பல்கலைக் கழக உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார். பன்னிரண்டு வருஷத்தில் இது ஒரு கல்லூரி ஆயிற்று.

இந்த நிலையில், 1854-ம் ஆண்டில் ஸர் சார்லஸ் வுட் என்பவர் இந்தியாவின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றி இங்கிலாந்துக்கு நீண்ட அறிக்கை ஒன்று அனுப்பினார். அந்த அறிக்கையில் கண்ட குறிப்பின்படி மூன்று பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் நிறுவப் பெற்றன. இது நடந்தது 1857-ல். பம்பாய், கல்கத்தா, சென்னை இம் மூன்று நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் தோன்றின. அப்போது எல்பின்ஸ்டன் பிரபு தொடங்கிய பள்ளி, மாகாணக் கல்லூரி என்ற பெயரோடு சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த ஒரு கல்லூரி ஆயிற்று.

சென்னைப் பல்கலைக் கழகம், லண்டனில் உள்ள பல்கலைக் கழகத்தின் அமைப்பைக் கொண்டது. லண்டன் கழகம் அதன் பொறுப்புக்களையும், செயலாற்றும் முறைகளையும் பெருக்கிக் கொண்டே வந்தது. ஆனால் சென்னைக் கழகமோ, பல வருஷங்களுக்கு, தொடங்கியபோது பெற்ற அமைப்போடு நின்றது. அதாவது, அங்கங்கே மாகாணத்தின் பல்வேறு இடங்களில் தோன்றிய கல்லூரி

டாக்டர் பட்டம்



வில்லியம் மில்லர்



திவான் பகதூர்
எஸ் சுப்பிரமண்ய அய்யர்



திருவாங்கூர் மகாராணி



மகாமகோபாத்யாய
உ வே. சாமிநாதய்யர்



ஸர். ஸி. சங்கரன் நாயர்



ஜே. எச் ஸ்டோன்



மக்பெயில்



திவான்பகதூர்
வேங்கடரத்னம் நாயுடு




ஸர். பி எஸ். சிவஸ்வாமி
அய்யர்

பெற்ற அறிஞர்கள்



வி. எஸ். ஸ்ரீனிவாச
சாஸ்திரி



அக்பர் ஹைதரி



ராஜா அண்ணாமலைச்
செட்டியார்




ஸர் ஸி. வி. ராமன்




ஸர் ஜான் இ. வாலிஸ்



ஸர் கே. ராமுண்ணி
மேனன்



டாக்டர்
அளகப்ப செட்டியார்



ராஜாஜி



அட்லி

களை இணைக்கும் மத்திய ஸ்தாபனமாகவும் பல தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்தும் நிலையமாகவும் மட்டும் அது இயங்கி வந்தது. நேரடியாக, மாணவர்களுக்கு அது கல்வி புகட்ட முற்படவில்லை. கல்விப் பயிற்சி கல்லூரிகளில்தான் நடைபெற்றது. இதற்கான பாடத் திட்டங்களை மட்டும் பல்கலைக் கழகம் வகுத்தது. கல்லூரிகளின் நிர்வாகத்தில் தலையிடாமல், பொதுவான மேற்பார்வையை மட்டும் ஏற்றது. கல்லூரிகளில், தேர்வுகளுக்கான பாடங்கள் போதிக்கப்பட்டு வந்தனவே யல்லாமல், ஆராய்ச்சியோ, ஒவ்வொரு அறிவுத் துறையிலும் மிக உயர்ந்த நிலையைத் தொடும் முயற்சியோ நடைபெறவில்லை. மெட்ரிகுலேஷன் (பல்கலைக் கழகத்தில் சேர்வதற்கு முன் தேறவேண்டிய பரீட்சை), பி.ஏ., சட்டம், வைத்தியம், இயந்திரக்கலை இவை சம்பந்தமான தேர்வுகளை மட்டும் பல்கலைக் கழகம் நடத்தி வந்தது.

1871-ம் ஆண்டில், அரசாங்கத்தார் நடத்திய ஐந்து கல்லூரிகளும், தனிப்பட்டோர் முயற்சியில் நடந்த ஏழு கல்லூரிகளும் இருந்தன. காலத்தின் தேவைக்கு ஏற்ப, பாடத் திட்டங்களை அவ்வப்போது பல்கலைக்கழகம் மாற்றி வந்தது. தேர்வுகளும் மிகக் கட்டுப்பாடான முறையில் நடந்தன. சென்னைப் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பற்றி, அன்னியர்கள்கூட எப்போதும் உயர்வாகவே எண்ணி வந்திருக்கிறார்கள். 1860-ல் பட்டமளிப்பு விழாவில் பேசிய ஜே. டி. மெயின் என்ற ஆங்கிலேயர் 'சென்னைப் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெற்றுச் செல்கின்றவர்கள், பரந்த ஞானமும் நுட்பமான அறிவும் பெற்றே செல்கின்றார்கள்' என்று பெருமையோடு கூறினார்.

இருந்தாலும், பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் அன்றைய அரசாங்கத்தின் நேரடியான ஆதிக்கத்தில் இருந்தது. இதனால் நாட்டின் நிலைமைக்கு ஏற்றவாறு, கழகம் இயங்குவதில் தடை ஏற்பட்டது. 1904-ம் ஆண்டில் பல்கலைக் கழகத்தின் பொறுப்பும், கடமையும் உரிமையும் சிறிது விரிவாக்கப்பெற்றன. மாணவர்களுக்குக் கல்வி போதிக்கும் பணியை, பல்கலைக் கழகங்கள் நேரடியாகவே மேற்கொள்ளுவது நலம் என்ற கொள்கை வற்புறுத்தப் பெற்றது. இதனால், பல கல்லூரிகள் இணைந்த சென்னைப் பல்கலைக் கழகம்போல் அல்லாது, நேரடியாகக் கல்விப் பயிற்சி தரும் பல்கலைக் கழகங்கள் சில தோன்றின. சென்னைக் கழகத்தைப் பொறுத்தமட்டில், அதோடு இணைக்கப் பெற்ற கல்லூரிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு முன்னினும் விரிவாகியது. கல்லூரிகளில் உள்ள கட்டட வசதிகள், மாணவர் விடுதி வசதிகள், ஆசிரியர் தகுதி, விஞ்ஞான கூடங்கள், புத்தகசாலை இவற்றின் தகுதி - இவற்றை யெல்லாம் நுணுக்கமாகக் கண்காணித்து, தகுந்த முறையில் வைத்திருக்கும் பொறுப்பை, பல்கலைக் கழகம் மேற்கொண்டது. அதோடு, பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ், ஆராய்ச்சித் துறைகளை அமைக்க வேண்டும் என்ற கொள்கையும் தோன்றியது.

'சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம்', 1923-ம் ஆண்டில், சென்னைச் சட்டசபையில் நிறைவேறியது. இதிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய சகாப்தம் தோன்றியது. இந்தச் சட்டத்தின்படி, சென்னை கவர்னர் பல்கலைக் கழகத்தின் வேந்தர் ஆவார். சென்னை அரசாங்கக் கல்வி மந்திரி இணைவேந்தர் ஆவார். இருந்தாலும் இவர்கள் இருவரும் நிர்வாகத்தில் நேரடியாகத் தலை இடுவதில்லை. நிர்வாகப் பொறுப்பு துணை வேந்தர் ஒருவர் கையில் ஒப்படைக்கப் பெற்றது. பல் கலைக் கழகம் விரிவான அளவுக்குச் சுதந்திரம் பெற்றது.

இந்த முப்பத்து மூன்று வருஷங்களில், சென்னைப் பல்கலைக் கழகம் வெகு வேகமாக வளர்ந்து வந்திருக்கிறது. ஆராய்ச்சித் துறைகள் பல, கழகத்தின் நேர் மேற்பார்வையில் அமைக்கப் பெற்றன. இன்று பல ஆராய்ச்சி இலாகாக்கள் சிறந்த முறையில் அறிவை வளர்த்து வருகின்றன.

உதாரணமாக, 'தமிழ் ஆராய்ச்சித் துறை இருக்கிறதே.'

'ஆமாம், அதன் தலைவர் நமது சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தானே ?'

'ஆம். அவருடைய தலைமையில் அந்தத் துறை அருமையான பணியாற்றி உள்ளது. அவருக்கு முன் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை தலைமையில் 'தமிழ் அகராதி' ஒன்று வெளிவந்தது உனக்கு ஞாபகம் இருக்குமே? தமிழின் பெருமையை, தமிழ்த்துறை மாத்திரம் இல்லை, ஹிந்தி ஆராய்ச்சித் துறையும் வளர்த்து வருகிறது.'

'அப்படியா ?' என்றேன்.

'ஆம். அந்தத் துறையின் தலைவர் இரு சங்கரராஜு நாயுடு ஒரு தமிழர். திருக்குறளை ஹிந்தியில் அற்புதமாக மொழிபெயர்த்திருக்கிறார். ஜர்மன் தேசத்து மாணவர் ஒருவருக்கு, ஹிந்தி இலக்கணமும், தமிழ் இலக்கியமும் வழங்கி இருக்கிறார். தமிழ்ப் புலவர்களோடு, ஹிந்திப் புலவர்களை ஒப்பிட்டு இலக்கியப் பரிவர்த்தனையை நடத்தி வருகிறார். ஸம்ஸ்க்ருதத் துறையில் டாக்டர் வே. ராகவன் தலைமையில் 'அட்டவணைகளின் அட்டவணை' என்ற முக்கியமான ஆராய்ச்சி சாதனத் தொகுப்பு ஒன்று தயாராகி வருகிறது. உலகம் முழுவதிலிருந்தும், பயனுடைய இம்முயற்சிக்குப் பாராட்டு வந்திருக்கிறது. கன்னடத்திலும், மலையாளத்திலும்...'

'மொழிகள் இருக்கட்டும், விஞ்ஞானக் கலைகளில் நம்முடைய சாதனைகள் ?'

'கணித மேதை ராமானுஜம், டாக்டர் ஸர் சி. வி. ராமன், டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், அமெரிக்காவில் விஞ்ஞான நிபுணராக விளங்கும் டாக்டர் சந்திரசேகர், விவசாய நிபுணர் வேங்கடராமன்...இன்னும் எத்தனையோ பேரறிஞர்கள் நம்முடைய சென்னைப் பல்கலைக் கழக விஞ்ஞான மாணவர்கள். கிண்டியில் நடைபெற இருக்கும் நூற்றாண்டு விழா விஞ்ஞானக் கண்காட்சியைப் போய்ப் பார்த்துவிட்டு வா. விஞ்ஞான வளர்ச்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பங்கும், விஞ்ஞானக் கல்வியில் அது காட்டிவரும் கவனமும் நன்கு தெரியும்.'

'பொருளாதாரம், வரலாறு, சங்கீதம் ?'

'அவற்றிலும் ஒன்றும் குறைவில்லை. நமது பல்கலைக் கழகந்தான் முதன் முதலில் நமது நாட்டில் இசை ஆராய்ச்சித் துறை ஒன்றை நிறுவியது. உனக்குத் தெரியுமா? பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொது இயற்கலைத் துறைகள், விஞ்ஞானத் துறைகள் இவற்றின் உதவியைச் சென்னை அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடி, உதவியும் இங்குள்ள நிபுணர்களிடமிருந்து பெற்றிருக்கின்றன. இந்திய விவசாய ஆராய்ச்சி மத்திய நிலையம், காட்டுவள ஆராய்ச்சிநிலையம், டாடா ஆராய்ச்சிநிலையம், விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம் இவை போன்ற பல ஸ்தாபனங்களுக்கு நமது பல் கலைக் கழக நிபுணர்கள் உதவி இருக்கிறார்கள்.'

'பேஷ், பேஷ்! இந்த ஆராய்ச்சி எல்லாம் நடத்துவதற்கு விஞ்ஞான கூடங்களும், சிறந்த புத்தகசாலையும் வேண்டுமே?' என்று வினவினேன்.

'இருக்கின்றன' என்று பெருமையோடு தலை அசைத்தது அந்தக் கல். 'கிண்டியில் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் மிகப் பெரிய தொழில் நுட்பக் கலைக் கல்லூரி நடைபெற்று வருகிறதல்லவா? அங்கே, ரசாயன இயந்திரக் கலை, நெசவுத் தொழிற் கலை, தோல் தொழிற் கலை இவற்றுக்கான ஆராய்ச்சிக் கூடங்கள் உள்ளன. இவற்றை ஒட்டி மற்றைய விஞ்ஞானக் கூடங்களும் அமைந்திருக்கின்றன. பல்கலைக் கழகப் புத்தக சாலை இதோ பக்கத்தில் இருக்கிறது. அது வளர்ந்த வரலாறு சுவையான ஒரு கதை.

புத்தகசாலையைத் தனித்துறையாக்கி, அதற்கு நிபுணர் ஒருவரைத் தலைவராக நியமித்து, புத்தகசாலையை வளர்ப்பதில் முனைந்த முதல் இந்தியப் பல்கலைக் கழகம் நமது சென்னைப் பல்கலைக் கழகந்தான். முதன் முதலில் நன்கொடையாக வந்த சில நூல்கள் மட்டுமே புத்தக சாலையில் இருந்தன. பிறகு புத்தகசாலைக் கட்டடத்துக்கும், ஆண்டு தோறும் புது நூல்கள் விலைக்கு வாங்குவதற்கும் அரசாங்கத்தின் உதவி கிடைத்தது. இது தவிர 1926-ல் இருந்து 1938-ம் ஆண்டு வரையில், சுமார் 30,000 நூல்கள் நன்கொடையாகக் கிடைத்தன. 1925ல் நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்கள் முப்பதாயிரம். 1944-ல் லட்சத்து இருபதாயிரம். இன்று சுமார் லட்சத்து எழுபதாயிரம் நூல்களுக்கு மேல் உள்ளன.

புத்தகசாலைக் கலையை இந்த நாட்டில் வளர்த்த தனிப் பெருமை சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு உண்டு. இவ்வளவு பெரிய புத்தகசாலையாக இருந்தும், யாரும் நேரடியாக உள்ளே சென்று புத்தகங்களைத் தாங்களே எடுத்துப் படிக்கலாம். எந்த நூலையும் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களில் படிப்போருக்குக் கிடைக்கும்படியான அற்புதமான ஏற்பாடு நடைபெற்று வருகிறது. வெறும் புத்தகக் கிடங்காக இல்லாமல், அறிவொளி வீசும் கலைமகள் பீடமாக உள்ளது நமது பல்கலைக் கழகப் புத்தகசாலை.'

'எல்லாம் வெறும் ஏட்டுக் கல்விதானே? எல்லோரும் புத்தகப் புழுக்கள்தானே?' என்று நான் கேட்பதற்கு முன் என் கேள்விக்குப் பதில் அளித்தது கல்.

'கல்லூரிகளில் உடற்பயிற்சி போதனை கட்டாயமாக இன்று நடைபெறுகிறது. கல்லூரிகளுக்கிடையே பல விளையாட்டுப் போட்டிகளை ஆண்டுதோறும் பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது. சென்னையில் பல்கலைக் கழக மாணவர் மண்டபம் ஒன்றும் அதோடு இணைந்த உடற் பயிற்சித் திட்டங்களும் உள்ளன. ஒரு மாணவனும் வெறும் புத்தகப் புழுவாக ஆக முடியாது. பல கல்லூரிகளில் என். ஸி. ஸி. படைகள் திரட்டப்பெற்று ராணுவப் பயிற்சி தரப் பெறுகிறது.

இந்தப் பெரும் வளர்ச்சிக்காக, கடந்த முப்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர் எங்கள் துணை வேந்தர் டாக்டர் ஆ. லக்ஷ்மண சாமி முதலியார். பல ஆண்டுகள் ஸின்டிகேட் சபை உறுப்பினராயும் கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாகத் துணைவேந்தராகவும் அவர் சேவை செய்திருக்கிறார்' என்று பெருமிதத்தோடு கூறி முடித்தது குத்துக்கல். 'ஆம், ஆம்' என்று பரந்து கிடக்கும் நீலக் கடல் ஆரவாரம் செய்து ஆமோதித்தது.

பிரார்த்தனைக் கூட்டம்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

ஜனவரி 25-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

இசையரசு எம். எம். தண்டபாணிதேசிகர் அவர்கள் பாடுவார்கள்

நாகஸ்வர இன்னிசை · தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள்,—சாரதா வித்தியாலய மாணவிகளின் நூற்பு யக்ஞம், கீதை பாராயணம், துதிகீதங்கள் ராமநாம பஜனை

பிரார்த்தனைக் கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் கலந்து கொள்ளுகிறார்கள்.

சர்வகலாசாலையின் சுதந்திரம்

டாக்டர் ஏ. லக்ஷ்மணசுவாமி முதலியார்

நமது சென்னை சர்வகலாசாலையின் நூற்றாண்டு விழா நடக்கும் இச் சமயத்தில் என் மனம் இயல்பாகவே பழைய நினைவுகளில் சஞ்சரிக்கிறது. எனக்கும் இந்தச் சர்வகலாசாலைக்கும் ஏற்பட்ட நீண்ட நெடிய தொடர்பை நினைத்தால் எனக்கு வியப்பாகவும் மலைப்பாகவும் இருக்கிறது.

1923-ல் சர்வகலாசாலைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம்தான் சர்வகலாசாலையின் செனட் சபையில் பட்டம் பெற்றவர்களும் அங்கம் வகிக்கலாம் என்று இடம் அளித்தது. அந்தச் சட்டம் வந்தவுடனேயே நான் செனட் சபையில் அங்கத்தினனாகி விட்டேன். 1923-ம் ஆண்டு டிசம்பர் மாதம் செனட் சபைக்குப் பட்டம் பெற்றோர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்குப் பிறகு ஒன்றரை வருஷத்திலேயே அதாவது 1925-ம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே சிண்டிகேட் சபைக்கு அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். அப்பொழுதிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகள் இந்தச் சர்வகலாசாலையில் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது.

சென்ற ஐம்பது ஆண்டுகளில் இச் சர்வகலாசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களையும் அவர்களுடன் நான் அளவளாவி அடைந்துள்ள பயன்களையும் எண்ணாமலிருக்க முடியவில்லை. மக்பெயில், பெட்ராம், கார்டி, ராமுண்ணி மேனன், ஸர் வேங்கடரத்தினம் நாயுடு, சத்தியமூர்த்தி, குப்புசாமி சாஸ்திரி, சாரநாதன், காண்டெத் போன்ற எத்தனை அறிஞர்களுடைய தொ டர்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடன் சாச்சை செய்வதே அறிவுக்கு ஒரு விருந்து. இவர்கள் காலத்தில்தான் சர்வகலாசாலையில் பல கல்விச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதனால் இவர்கள் காலத்தைப் 'பொற்காலம்' என்று கூறுவேன். வைஸ்ராய் கர்ஸானின் பிடியிலிருந்து விடுபட்டவுடன் சர்வகலாசாலைகளை நல்ல முறையில் அமைக்கவும் திட்டம் வகுக்கவும் இவர்கள் அத்தனைபேரும் பெருதவியாக இருந்தனர்.

* * *

நமது சர்வகலாசாலை நெடுங்காலம் பரீட்சைகள் நடத்தும் ஒரு ஸ்தாபனமாகத்தான் இருந்தது. 1921லிருந்துதான் சர்வகலாசாலையில் பல ஆராய்ச்சிப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு, நம்முடைய சர்வகலாசாலை உண்மை சர்வகலாசாலையாக விளங்கத் தொடங்கியது. அதிலும் சமீபத்தில் சென்ற பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளில் எத்தனை ஆராய்ச்சிப் பிரிவுகள் தோன்றி விட்டன! கலை, விஞ்ஞானம், புராதன இலக்கியம் ஆகிய பிரிவுகளில் மட்டுமன்றி, ஆசிரியப் பயிற்சி, வைத்தியம், பொறிஇயல், விவசாயம், மிருக வைத்தியம், லலித கலைகள், வர்த்தக நிர்வாகம் ஆகிய துறைகளுக்கும் மிக கௌரவமான இடம் நமது சர்வகலாசாலை அளித்திருக்கிறது.

இதன் காரணமாகக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. ''கல்லூரிகளில் இடமில்லை'' என்று வருஷந்தோறும் மக்களின் கூக்குரல் பெருகி வந்தது. இந்த இட நெருக்கடியைச் சமாளிக்க ஷிப்டு முறை ஒன்றுதான் வழியோ, அதற்கு இடங் கொடுக்க வேண்டி நேரிடுமோ என்று பயந்தேன். நல்ல வேளை. நம் தமிழ் நாட்டில் தர்ம சிந்தனையுள்ள பிரபுக்களுக்குப் பஞ்சமில்லை. அவர்களின் சகையினால் சென்ற பதினைந்து ஆண்டுகளில் நாற்பது கல்லூரிகளுக்கு மேல் தோன்றி விட்டன. அவற்றில் பன்னிரண்டு பெண்கள் கல்லூரிகள். இவை தவிர பத்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளும், பல தொழில் துறைக் கல்லூரிகளும் தோன்றியிருக்கின்றன.

இத்தனை கல்லூரிகள் ஏற்பட்டு விட்டன; ஆண்டுதோறும் கல்லூரிகளில் சேர்ந்து மேல் படிப் ப் பயிலும் மாணவர்களின் தொகையும் பெருகி வருகிறது. இவற்றின் காரணமாகக் கல்லூரிப் படிப்பின் தரம் குறையாமலிருக்கிறதா என்று கேட்டால் என்னால் சரியாகப் பதில் சொல்ல முடியாது. இந்த நாட்டிலும் வெளிநாட்டிலிருந்து வரும் பல பேராசிரியர்களிடமும் நம் மாணவர்களைப் பற்றி விசாரித்ததில் நமது மாணவர்களின் தரம் அப்படி யொன்றும் குறைந்து விடவில்லை என்று தான் சொல்லுகிறார்கள். ஆனால் என்னுடைய சொந்தக் கருத்து என்னவெனில் இன்னும் நமது தரம் உயர்ந்து ஆகவேண்டும் என்பதே. இது எப்படிச் சாத்தியம்? பொது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தரம் உயர்வதற்கு முயன்றால் கல்லூரிப் படிப்பின் தரமும், மாணவர்களின் தரமும் உயர்ந்து விடும் என்பது உறுதியான கருத்து.

இன்றையச் சூழ்நிலையில், ஏதேச்சாதிகாரம் நிலவும் நாடுகளில் மட்டுமன்றி ஜனநாயக நாடுகளிலும் மக்கள் செல்வாக்குப் பெற்ற அரசி



டாக்டர் ஏ. எல். முதலியார் (சென்னை சர்வகலாசாலையின் உப அத்யக்ஷகர்)



பம்பாய் சர்வகலாசாலையின் ஓர் அரிய தோற்றம். மேலே இருப்பவர்தான் அந்தச் சர்வகலாசாலையின் உப அத்யக்ஷர் திரு ஜான் மத்தாய். அடுத்த மாதம் பம்பாய் சர்வகலாசாலையும் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

யல் தலைவர்கள் சர்வகலாசாலைகளையும் கல்லூரிகளையும் சும்மாவிடத் தயாராயில்லை. தங்கள் கருத்துக்களைப் பிரசாரம் செய்ய அவையே தகுந்த இடம் என்று கருதுகிறார்கள். கல்வித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசியல் கலப்பற்ற சுதந்திரம் வேண்டும். அதை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதை உணர்வதில்லை. அதற்கு மாறாகச் சிலர் இது வெறும் மூட நம்பிக்கை என்கிறார்கள். ஆனால் கார்டினல் நியூமன் "சர்வகலாசாலைப் படிப்பின் பயனே உணர்ச்சி வசப்படாத அமைதியும் அறிவுமாகும்" என்று கூறுகிறார்.

சர்வகலாசாலையில் கல்வி பயின்றவர்கள் நியூமன் வகுக்கும் லட்சிய வாழ்வு வாழாவிட்டாலும் மேல் படிப்புக்காக ஏற்பட்டுள்ள சர்வகலாசாலை போன்ற ஸ்தாபனங்களாகிலும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அந்தலட்சியத்தைக்கடைப்பிடிக்கலாம். மனித முயற்சியின் விளைவாக ஏற்படுத்தப் பட்டுள்ள ஸ்தாபனங்கள் குறைபாடுகளுக்கு இலக்காகலாம். அதற்காக அரசியலார் தலையிட வேண்டும் என்பதில்லை. அரசியல் தலைவர்கள் குறைபாடுகள் அற்றவர்களா? அல்லவே? அவர்கள் இன்று சிறந்தது என்று கருதும் கொள்கை நாளை தவறு என்று மாறிவிடக் கூடும். அதனால் கல்வி விஷயங்களில் அரசியல் தலைவர்களும், அவர்களின் நோக்கங்களும் கலவாமலிருப்பதே நலம். ஏனெனில் ஒரு சிலரின் குறைபாடுகள் பலர் தலையில் சுமக்க வைப்பது தவறல்லவா! ஆகவே, சர்வகலாசாலைகளை ஆட்டிப் படைக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. இப்பொழுது உள்ள நிலைமை மாறிச் சர்வகலாசாலைகளை ஆட்டி வைக்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டென்று எப்பொழுதாவது தீர்மானிக்கப் பட்டால் அதை விட வினை வேறில்லை. சர்வகலாசாலைக்கும் கல்வித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் அளிக்கப் பட்டுள்ள சுதந்திரம் பொறுப்பற்ற தன்மையதல்ல; தீவிர ஆலோசனையின் பேரில் அளிக்கப்பட்டதாகும்!

சென்னை பட்டமளிப்பு விழாப் பிரசங்கம்—1948

சுதந்திர பாரதத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்குப் பயிற்சியும் அறிவும் ஆற்றலும் பெற்ற தலைவர்கள் தேவை. அத்தகைய பயிற்சி உங்களுக்கு இருக்கிறது. சர்வகலாசாலைப் படிப்பு என்பதே அத்தகைய கல்வி பெறுவது என்பதுதானே பொருள்; கணக்கற்ற மக்களுக்கு இத்தகைய வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகவே உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பை பொக்கிஷமாகக் கருத வேண்டும். எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் எத்தகைய கஷ்டமான நிலையிலிருந்தாலும் உங்கள் தினசரி வாழ்க்கை முறை பிறருடைய சிந்தனைக்கு விருந்தாக அமைய வேண்டும்; பேசுவதற்குரிய அரிய பொருளாக விளங்க வேண்டும். உங்களைப்போல் பிறரும் நடந்து கொள்ள வேண்டும் என்று ஆவலூட்டுவதாக இருக்க வேண்டும். தேசத்தின் நான்கு எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு ராணுவப் படை வீரர்களைச் சேர்ந்தது. நீங்களோ பாரத நாட்டுப் பண்பாட்டின், ஒழுக்கத்தின் பாதுகாப்புப் படை வீரர்கள். உலகத்துக்குப் பாரதம் எத்தகைய உயர்ந்த லட்சியத்தை வழங்கக் கூடும் என்பதே உங்கள் கவலையாக இருக்கவேண்டும். இன்று இளைஞர்களாக இருப்பவர்களே, நாளை இந் நாட்டுப் பிரஜைகள்! இந்த வாக்கியத்தைப் பலமுறை உபயோகப் படுத்திப் பொருள் இழந்து விட்டாற் போல் தோன்றலாம். ஆனால் சமீபத்தில் அரசியல் சுதந்திரம் பெற்ற இந் நாட்டின் மக்களாகிய நீங்கள், இந்தப் பழமொழியை வலிமையுடையதாக்கி, மகத்தான உண்மை என்று நிரூபிக்க வேண்டும். இதுவே இன்று உங்களுக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பு.

—ராஜாஜி


1956 DODGE

with jet-fin styling


The 1956 Dodge with its new FORWARD LOOK and incorporating new features takes you to new standards of performance. Look at these features:

- ★ New 12-volt electrical system gives quicker, easier starting, longer spark plug life, plenty of current
- ★ Maximum vision with new horizon windshield wrapped around top and bottom
- ★ New safety door latch for passenger protection
- ★ Redesigned sealed beam headlights extend zone of lighting on left side by 80 feet
- ★ Independent hand brake provides real emergency brake function
- ★ Safety-rim wheels, tubeless tyres and many other features

New Pep with Increased Horsepower
The 6-cylinder engine is of proved dependability and economy.



Upswept fin tails give the impression of speed to every line of the car



Progressively Manufactured by:
THE PREMIER AUTOMOBILES LTD.
KURLA, BOMBAY

Dealers:
M/s. ADDISON & Co. (Private) Ltd.
MOUNT ROAD -. MADRAS

என் கல்லூரி அனுபவங்கள்

சகோதரி சுப்புலக்ஷ்மி

சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா நடக்கும் இந்தச் சமயத்தில் நான் 1908-11 வருஷங்களில் ராஜதானிக் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் படித்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன. அக் காலத்தைப் பற்றி எழுதினால் இந்தக் காலத்து மாணுக்கர்களுக்கு அதைப் படிப்பதில் சுவாரஸ்யம் ஏற்படும் என்று எண்ணிச் சில அனுபவங்களை எழுதுகிறேன்.


என்னை மெட்ரிக்யுலேஷன் வரை படிக்க வைக்க வேண்டும் என்றுதான் முதலில் என் பெற்றோர்கள் எண்ணினார்கள். ஆனால் நான் படிப்பில் நல்ல தேர்ச்சி பெற்று வருவதைக் கண்ட அவர்கள் கல்லூரிப் படிப்பையும் நான் முடிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அந்தக் காலத்தில் ராஜதானிக் கல்லூரியில் நான்கு ஐந்து கிறிஸ்தவ மாணவிகள் மாத்திரமே இருந்தனர். ஆகவே அங்கு என்னை அனுப்பத் தைரியமில்லாமல், ஜார்ஜ் டவுனில் உள்ள பிரஸன்டேஷன் கான்வென்ட் காலேஜில் (காலேஜ் பகுதி பிறகு மூடப்பட்டு விட்டது) எப். ஏ. வகுப்பில் என்னைச் சேர்த்தார்கள். அங்கு நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதைக் கண்டு தைரியமடைந்து, ராஜதானிக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் என்னைச் சேர்த்தார்கள். எப். ஏ. படித்த இரண்டு வருஷ காலம் கான்வென்டில் எத்தனை உற்சாகத்துடன் இருந்தேனோ அதற்குச் சற்று மாறுதலான அனுபவம்தான் பி.ஏ. படித்த காலத்தில் ஏற்பட்டது. ஏன்? 'ஒரு பிராமணப் பெண்ணும் கல்லூரியில் பி. ஏ. படிக்கிருளாம்! என்ன அதிசயம்! என்ன ஆச்சரியம்!' என்று பேசின காலம் அது.

நானும், மேரிராஜம் என்னும் ஒரு கிறிஸ்தவப் பெண்ணும் ரிக்ஷாவில் எழும்பூரிலிருந்து வருவோம். எங்களைப் பார்ப்பதற்கு ஆங்காங்கு சிறுகூட்டங்களே இருக்கும். கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒருவர் பிற்காலம் வக்கீலாக இருந்த போது என்னிடம் என்ன சொன்னார், தெரியுமா? "நீங்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தது எங்களுக்கெல்லாம் ஒரு அதிசயம். நாங்கள் சிலர் கிறிஸ்தவக்கல்லூரியிலிருந்து திருவல்லிக்கேணிக்குச் சற்றுச் சீக்கிரமாகவே வந்து பைக்ராப்ட்ஸ் தெருவில் உங்களைப் பார்ப்பதற்காக உங்கள் ரிக்ஷாவின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்போம். சிலருக்கு அதிசயம், சிலருக்குப் பரிகாசம், சிலருக்குப் பொறாமைகூட. இப்படிப் பலவித உணர்ச்சிகளுடன் நாங்கள் பார்ப்பது வழக்கம்" என்றார்.

கல்லூரியிலேயே ஒரு தத்துவ ஆசிரியர் இருந்தார். நாங்கள் சிலர் எங்கள் அறையிலிருந்து நீண்ட தாழ்வாரம் வழியாக நடந்து சென்று விஞ்ஞான வகுப்பு அறைகளுக்கு நுழையும் வரையில் அவருடைய அறையின் வெளியில் வந்து, இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு அதிசயம் எதையோ பார்ப்பது போல் எங்களையே பார்த்துக் கொண்டு நிற்பார். கல்லூரியில் உள்ள மாணுக்கர்கள் சிலர் மரியாதையாக இருப்பார்கள். பலர் ஆங்காங்கு சிறு சிறு கூட்டங்களாக நின்று கொண்டு நாங்கள் வகுப்பறைக்குப் போக வழிவிடாமல் வேண்டுமென்றே வழியை மறைத்துக் கொண்டு நிற்பார்கள். ஒடிந்த நாற்காலிகளை எங்கள் மேஜைக்கருகில் போட்டு நாங்கள் உட்கார முடியாமல் திண்டாடுவதைக் கண்டு களிப்பார்கள். என் பெயரைச் சுவர்களில் எழுதுவதுடன், மேஜைகளின் மேலும் செதுக்கி வைப்பார்கள். ஏற்கனவே என் சுபாவம் பயமும், வெட்கமும், கூச்சமும் கொண்டது. மாணவர்களின் இந்த விஷமச் செயல்கள் என்னுடைய பயத்தை இன்னும் அதிகப்படுத்தின. என் சக மாணவிகளின் தைரியச் சொற்களால் நான் கல்லூரி வாழ்க்கையை ஒருவிதமாகப் பூர்த்தி செய்தேன் என்று சொல்லலாம்.

நான் கல்லூரியில் சேர்ந்த மறுவருஷம் விவாகமாகாத ஒரு இந்துப் பெண் ஜூனியர் எப். ஏ. வகுப்பில் வந்து சேர்ந்தாள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பிற்காலம் உபஅத்யட்சகராக இருந்த ஸர் ரங்கநாதன் கல்லூரியில் அப்போது ஒரு உதவிப் பேராசிரியராக இருந்தார். அவர் சற்று ஹாஸ்யப் பிரியர். "பெண்களுக்குள்ள அடக்கம் இயற்கையா, செயற்கையா?" என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதும்படி சொன்னார். மேற்குறிப்பிட்ட இந்துப் பெண் 'அடக்கம் என்பது பெண்களுக்கு இயற்கையிலேயே அமைந்தது அல்ல. பெரியவர்களுடைய உபதேசத்தாலும் பழக்க வழக்கத்தாலும் செயற்கையில் ஏற்பட்டதே. ஆண்களைப் போலவே பெண்களை வளர்த்தால் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் தலைநிமிர்ந்து நடப்பார்கள்' என்றெல்லாம் எழுதினதைத் திரு ரங்கநாதன் வகுப்பில் படித்தபோது மாணுக்கர்கள் யாவரும் கைத்தட்டல், கால் தட்டலுடன் ஆர்ப்பரித்து ரஸித்தார்கள். இது நடந்தது பெண்களுக்கான அறைக்குப் பக்கத்து அறையில். இந்த ஆர்ப்பாட்டத்துக்குக் காரணம் என்னவென்று நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது அந்த மாணவியே வந்து சேர்ந்து விஷயத்தைச் சொன்னபோது அவளை நாங்கள் சிலர் கண்டித்தோம். கௌசல்யா, மிஸ் ஹலண்டு (லேடி ராமராவ்) ஷிட்டா ஸாலரஸ் (டாக்டர் ஸாலரஸ்) ஆகிய நாங்கள் பெண்களுக்கு இயற்கையிலேயே நாணம், அடக்கம், வணக்கம் எல்லாம் உண்டு, அது செயற்கை அல்ல என்று வாதித்தோம்.

இன்னும் ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. முதல் வருஷமே மாணவிகள் (சுமார் பத்துப்பேர்) சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். நான் அதில் சேரக் கண்டிப்பாக மறுத்து விட்டதால் மற்றவர்களும் நானில்லாமல் படம் எடுத்துக்கொள்ள விருப்பம் இன்றி அந்த எண்ணத்தை விட்டு விட்டார்கள். மறு



கல்கத்தா சர்வகலாசாலையும் இவ்வருஷம் தனது நூறாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது. அந்தச் சர்வகலாசாலையின் முகப்புத் தோற்றமும் அதன் உப அத்யக்ஷகர் திரு சித்தாந்தா அவர்களும்.

ளுடம் எப்படியோ என்னை ஒப்புக்கொள்ளச் செய்து விட்டார்கள். நகரு புகைப்படக் கம்பெனிக்குச் சென்று படம் எடுத்துக் கொண்டோம். இது விஷயம் மாணவர்களுக்குத் தெரியவேண்டாமென்று, கம்பெனியிலிருந்த நெகட்டிவைக் கூட வாங்கி வந்து விட்டோம்! மற்றக் கல்லூரி மாணவர்கள் ஒருவருக்கும் இது விஷயம் தெரியாமல் நாங்கள் படம் எடுத்துக் கொண்டு விட்டதாக எங்களுக்கு அளவு கடந்த பெருமை! இது நடந்து சுமார் இருபது வருடங்களுக்குப் பிறகு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. பெங்களூரில் சோப் தொழிற்சாலையைப் பார்க்க நான் போனபோது அதன் தலைவர் என்னுடைய கல்லூரியில் படித்த மாணவர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அத்துடன், "அப்போது நடந்த ஒரு தமாஷ் சம்பவத்தைச் சொல்லட்டுமா!" என்றார். "இதோ, நீங்கள் யாவரும் கல்லூரியில் எடுத்துக் கொண்ட புகைப்படம். பள்ளி மாணவர்களுக்குத் தெரியக்கூடாது என்று விரும்பினீர்கள். ஆனால் ஒன்றிரண்டு பேருக்கு விஷயம் தெரிந்து புகைப்படக் கம்பெனிக்காரருக்கு லஞ்சம் கொடுத்துச் சில படங்கள் வாங்கிக் கொண்டுதான் நெகட்டிவ் உங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது" என்றார். இந்தமாதிரி எத்தனையோ சம்பவங்கள்!

நான் கல்லூரியில் சேர்ந்த மறுதினமே மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் என்னைச் சந்தித்து அன்போடு ஆசீர்வதித்தார்.


"உங்கள் பெரிய தகப்பனார் ஹூக்கிட் சீநிவாசய்யர் எனக்கு நிரம்ப வேண்டியவர். அவருடைய தம்பி புதல்வியாகிய நீங்கள் இந்தக் கல்லூரியில் சேர்ந்திருப்பது சந்தோஷம். நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும். ஏதாவது தேவையானால் என்னைக் கேட்கலாம்" என்று எனக்குத் தைரியம் சொல்லிவிட்டுச் சென்றார். எழும்பூரில் பி. டி. பள்ளியில் நான் படித்தபோது, தமிழ்ப் பாடம் அங்கு கிடையாது. ஆக, இரண்டாவது மொழியாக லத்தீன் படித்தேன். எப். ஏ. வகுப்பிலும், கான்வெண்டிலும் தமிழ் கிடையாது. தமிழ்ப் பண்டிதர் ஒருவரை 1 மணி முதல் 2 மணி வரைக்கும் இடை வேளையில் எனக்குத் தமிழ் கற்பிக்க அனுமதித்தார்கள்.

ஆகவே, கல்லூரியில் ஐயர் அவர்களிடம் தமிழ் பாடம் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பெரிய பாக்கியமாகும். "உபாத்தியாயர்களை உண்டாக்க முடியாது. அவர்கள் பிறக்க வேண்டும்" என்ற பழமொழிப்படி பாடம் கற்பிக்கும் திறமை அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தது. அவரிடம் பாடம் கேட்டதின் பலனாக எனக்குத் தமிழில் மிகுந்த ஆர்வமும் தமிழ் நூல்களைப் படித்து ரஸிப்பதில் விருப்பமும் உண்டாயிற்று.

ஆரம்பத்தில் கல்லூரித் தலைவராய் இருந்த மிஸ்டர் ஸ்டோன் எங்களுக்கு ஆங்கிலப் பாடம் எடுப்பது வழக்கம். அவரிடமும் கற்பிக்கும் திறமை இயற்கையிலேயே அமைந்திருந்தது. அவரிடம் கேட்ட சில ஆங்கிலப் பாடங்கள் இப்பொழுதும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன.

சில உபாத்தியாயர்கள் எங்களைக் கவனிக்க மாட்டார்கள். நாங்கள் இருக்கும் பக்கமே திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். தெரியாத பாடங்களை அவர்களிடம் சென்று கேட்பதற்கு எங்களுக்குப் பயம், வெட்கம். எப்படியோ கல்லூரிப் படிப்பைக் கடவுள் அனுக்கிரகத்தினால் வெற்றியுடன் முடித்துக் கொண்டு திருப்தியான பெருமூச்சுடன் கல்லூரியை விட்டு வெளிவந்து சேர்ந்தேன்.


அமிர்தாஞ்சனம்
வலிகளுக்கு
ஒப்பற்ற
நிவாரணி
AMRUTANJAN
Pain Balm
Amrutanjan Limited
MADRAS-BOMBAY
அமிர்தாஞ்சன் லிட்., சென்னை-4 இதர இடங்கள்-பம்பாய்-1 கல்கத்தா-7
AL-66-6 TAL


விரைவில் குணமளிக்கும்
ஹானியற்ற
மூலநோய், ரத்தப்போக்கு
நோய்கள், ரத்தக்கடுப்பு,
வெடிப்புகள், பிளவைகள்,
எரிச்சலூட்டும் ஆணி
முதலிய நோய்களினின்றும்
ஹெடன்ஸா மெழுகு மிக
மிருதுவாகவும் துரிதமாகவும்
நிவாரணம் தரும்.
நிவாரணி!
ஹெடன்ஸா
ஜெர்மனியில்
தயாரிக்கப்
பட்டது
எங்கும்
கிடைக்கும்
Hadensa
DC 2-1
ஸ்டாக்கிஸ்டுகள்:
தாதா & கம்பெனி, சென்னை-3 :: அமர்சந்த் சோபாசந்த், சென்னை-3

ஈழநாட்டுப் பிரயாணம் ③

குயில்களும், கிளிகளும், குலவுபல சாதிப் புட்களும் இனிய பூங்நரல் எடுத்துச் சிரித்தன! பாம்புகள் படமெடுத்துச் சீறிச் சிரித்தன! குரங்குகள் எழுந்து நின்று கூத்தாடிச் சிரித்தன! மாடுகள் சிரித்தன! சிங்கம், புலி, கரடி, சிறுத்தை எல்லாம் சிரித்தன! ஒட்டகம் சிரித்தது! ஒட்டைச் சிவிங்கியோ சத்தம் இல்லாமல் சிரித்தது! யானையும், குதிரையும் சிரித்தன! பன்றியும், கழுதையும் இன்னும் பல காட்டு மிருகங்களும் சிரித்தன! காண்டா மிருகம் கனைத்துச் சிரித்தது! கங்காரு குதித்துச் சிரித்தது! ஆமை அசைந்து சிரித்தது! நீர்யானையும், முதலையும் நீட்டி முழக்கிக்கொண்டு சிரித்தன!

இதையெல்லாம் பார்த்த மனிதர்களோ 'சிரிக்கலாமா, வேண்டாமா?' என்று சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் "குபீர்!" என்று சிரித்தனர். மனிதர்கள் சிரித்ததைப் பார்த்ததும் "நீங்கள்கூடச் சிரிப்பீர்களா?" என்று கேட்டது ஒரு பச்சைக் கிளி.

காட்டு

பச்சைக் கிளி வாய் திறந்து பேசியதைக் கேட்ட மனிதர்கள் திகைத்து நின்றார்கள்.

"இவர்கள் எல்லாம் தமிழ் பேசும் மனிதர்கள் போலிருக்கிறது. அதுதான் பதில் கூறாமல் மௌனமாக இருக்கிறார்கள்" என்றது ஒரு இலங்கைக் கிளி.

இலங்கைக் கிளியின் துடுக்குத்தனத்தைப் பார்த்தும் கூடச் சிறிதும் கோபம் கொள்ளாமல் 'கலீர்' என்று சிரித்தனர் அங்கிருந்த அன்புத் தமிழர்கள்.

"ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டது தூரத்தில் இருந்த ஒரு சிங்கள நாட்டுச் சிட்டுக் குருவி.

"தமிழ் நாட்டில் அமிழ்தினும் இனிய தமிழ் மொழி ஆட்சி மொழியாகிவிட்டதை எண்ணிச் சிரிக்கிறார்கள்" என்றது தமிழ் நாட்டின் பாடும் குயில்.

"இல்லை, ஈழநாட்டில் தமிழ் ஆட்சி பீடத்தில் இருந்து இறக்கப்பட்டதை எண்ணிச் சிரிக்கிறார்கள் போலிருக்கிறது" என்றது அநுராதபுரத்துக் குரங்கு.

பாடும் குயில் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். குரங்கு சொன்னதைக் கேட்ட போதோ ஒருகணம் வெட்கித் தலை குனிந்தார்கள். 'ஈழநாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை என்பதை எண்ணி இந்தக் குரங்குகூட அல்லவா நம்மைப் பார்த்துக் கேலி செய்யும்படி ஆயிற்று!' என்று ஈழத்தமிழ் மக்கள் கலங்கிப் போனார்கள்.

அதே நேரத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. காக்கிச் சட்டை அணிந்து அங்கு வந்த ஒரு காவற்காரன் குரங்குக்குச் செம்மையாக இரண்டு பூசைகள் கொடுத்து அழைத்துப் போனான். இதைப் பார்த்த இதர மிருகங்களும் பறவைகளும் சிரிப்பதை நிறுத்தின!

இந்த அதிசயமான சம்பவம் எங்கே நடந்தது, தெரியுமா? ஆம்; பறவைகளும் மிருகங்களும்கூடச் சிரிக்கும், கேலி செய்யும் என்பது மட்டுமல்ல, நெருங்கி உறவாடும்; உதவியும் செய்யும் என்றெல்லாம் கொழும்பு நகரில் உள்ள பிரசித்தி பெற்ற விலங்கு வனத்தில் அதாவது மிருகக் காட்சிச் சாலையில் இருந்த போது நாங்கள் அறிந்து கொண்டோம். சிங்கள சர்க்காரின் கொடுமைகளுக்கு உள்ளான தமிழர்கள் சிலர் எங்களோடு விலங்கு வனத்துக்கு வந்து







மிருகங்கள் சிரித்தன!

இருந்தனர். அவர்களுக்கு ஈழ நாட்டின் விலங்கு வனத்தில் இருக்கும் மிருகங்களும் பறவைகளும்கூடத் தமிழர்களைப் பார்த்துக் கேலி செய்வதாகத் தோன்றியதில் ஆச்சரியமில்லை. ஈழ நாட்டில் உள்ள இருபத்தைந்து லட்சம் தமிழ் மக்களின் நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

பறவைகளும் காட்டு மிருகங்களும் சிரிக்கின்ற இந்தப் புகழ் பெற்ற கொழும்பு விலங்கு வனத்துக்குள் செல்வதற்கு முன்பாக இந்த உலகில் விலங்குவனம் எப்பொழுது உண்டாயிற்று, யார் உண்டாக்கினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவோம்.



விலங்கு வனத்தின் கதை

பறவைகளையும், இதர காட்டு மிருகங்களையும் ஒன்று சேர்த்துவைத்திருக்கும் வனத்துக்குத்தான் 'விலங்கு வனம்' என்று சொல்லுவார்கள். விலங்கு வனத்தில் பறவைகளும் மிருகங்களும் அதனதன் இயற்கைக்கு ஏற்றவாறு இருப்பதற்கான சூழ்நிலையை அமைத்திருப்பார்கள். திறந்த வெளியில் திரிய வேண்டிய மிருகங்களுக்குக்கூட அதற்குத் தகுந்தபடி திறந்த வெளிகளும் அமைத்திருப்பார்கள்.

இவ்வாறெல்லாம் இந்த உலகில் முதன் முதலில் செய்தது யார், தெரியுமா? பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜார்டின்டிஸ் பிளாண்டஸ் என்ற நிபுணர். நூற்று ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், 1804-ம் ஆண்டில் பாரிஸ் நகரில் அவர் ஒரு விலங்கு வனத்தை ஏற்படுத்தினார். ஆனாலும் அவருக்கு முன்பாகவே இரண்டாயிரம் ஆண்டுகளாக இறந்த மிருகங்கள், பற



பகீரதன்

வைகளின் உடல்களையும் சேர்த்து வைத்துப் பார்த்து மகிழும் வழக்கம் உலகில் இருந்து தான் வந்தது. மன்னர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் இது ஒரு சிறந்த பொழுது போக்காகவே இருந்து வந்திருக்கிறது.

ஜார்டின்டிஸ் பிளான்டஸ் வெறும் வேடிக்கைக்காக, பொழுதுபோக்குக்காக விலங்கு வனத்தை ஏற்படுத்தவில்லை. பறவைகளையும் மிருகங்களையும் ஒரு இடத்தில் சேர்த்து வைத்து அவைகளின் வாழ்க்கை முறைகளை எல்லாம் ஆராய்ந்து வந்தார். மிருகங்களால் மனிதர்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும், தன்மைகளையும் தெரிந்து கொள்வதற்கு முயன்று வந்தார். இதற்காக அந்தத் தனி மனிதர் அந்தக் காலத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து வந்தார். இதன்மூலம் மிருகங்களைப் பற்றிய எத்தனை எத்தனையோ உண்மைகளை எல்லாம் கண்டு உலகுக்கு வழங்கினார். இவ்வாறு அவர் ஆரம்பித்த விலங்குவனம்தான் இப்பொழுது உலகில் பல இடங்களிலும் பரவி இருக்கிறது. பாரதநாட்டில் திருவாங்கூர், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் நல்ல விலங்கு வனங்கள் இருக்கின்றன. இவைகளைப் போலவே சிறப்புடையது கொழும்பு நகரில் இருக்கும் விலங்குவனம். ஆனாலும் சென்னை நகரில் இருப்பதைவிடப் பெரியது.

விலங்கு வனங்களால் உலகத்து மக்கள் பல விதங்களில் பயன் பெற்று வருகிறார்கள். உலகின் பல பகுதிகளில் இருக்கும் மிருகங்களையும், பறவைகளையும் ஒரே இடத்தில் எந்த விதமான பிரயாணத் தொல்லைகளும், கஷ்டங்களும் இல்லாமல் பார்த்து மகிழ்ந்துவிட முடிகிறது. ஒவ்வொரு மிருக வனத்திலும் மிருகங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தேர்ந்த பல நிபுணர்கள் இருக்கிறார்கள். மிருகங்களின் உடல் அமைப்பு, ஆகாரம், அதன் வாழ்க்கை முறை, அதற்கு வரும் வியாதிகள் முதலியவைகளை எல்லாம் பற்றி விசேஷப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இந்த விலங்கு வனங்கள் மிகப் பெரிய உதவியாக இருக்கின்றன. மிருகங்களின் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் விலங்கு வனத்துக்குள் சென்று விட்டால் ஏதோ சொர்க்கத்துக்குள் சென்று விட்டதாகவே மகிழ்ந்து போவார்கள். பிறவி எடுத்ததன் பயனை அடைந்து விட்டதாக ஆனந்தப்பட்டுப் போவார்கள். அத்தகைய வனவிலங்கு பறவைகளின் சொர்க்கமாகத் திகழ்ந்து வரும் கொழும்பு விலங்கு வனத்துக்குள் இப்போது செல்வோம்.

கொழும்பு விலங்கு வனம்

கொழும்பு நகரில் விலங்கு வனம் அமைந்திருக்கும் இடம் மிக அற்புதமானது. இயற்கையாகவே அமைந்துள்ள மலைகளும், சோலைகளும், குளங்களும் கொண்டவை. பூஞ்சோலை போல் தோற்றமளிக்கும் அழகு நிறைந்த விலங்கு வனத்தின் வாசலில் நின்று பார்த்தால் பழைய காலத்து மன்னர்களின் அரண்மனைத் தோட்டங்கள்தான் நமக்கு நினைவுக்கு வரும். விலங்கு வனத்துக்குள் செல்வதற்கு வசதியாக அருமையான சாலைகளும், நாம் வழிதவறாமல் போவதற்கு வழிகாட்டி உதவுவதற்கு அவசியமான அம்புக் குறிகளும் இருக்கின்றன.

இதோ இந்த அம்புக் குறியைத் தொடர்ந்து செல்வோம். அம்புக்குறி இடது பக்கம் திரும்புகிறது. பறவைகள் வனம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆமாம்; சிங்கள எழுத்தில்தான் எழுதியிருக்கிறார்கள். இங்கெல்லாம் சில ஆண்டுகளுக்கு முன்கூடத் தமிழில் எழுதி இருந்தார்களாம். தமிழ் இருக்கட்டும். பறவைகளைப் பார்ப்போம். இந்தப் பகுதி பறவை வனம்தான் என்பதைப் பறவைகளின் கலகலத் தொனியே எடுத்துக் கூறி விடுகிறது.

இரண்டு பக்கங்களிலும் மலர் குலுங்கும் செடிகளும், பச்சைப் பசேல் என்ற புல் வெளிகளும் நிறைந்த இடத்துக்கு மத்தியில் சிறிய பாதை செல்கிறது. அந்தப் பாதை வழியே சென்ற போது ''ஹலோ!'' ''ஹலோ!'' என்ற பெண் குரல் கேட்டது; திடுக்குற்று நின்று குரல் வந்த திசையைப் பார்த்தேன். அங்கு யாரும் இல்லை.

என் நிலைமையைப் புரிந்து கொண்டு, உடன் வந்த நண்பர் புன்னகை புரிந்தார்.

''தங்களைக் கூப்பிட்டது வேறு யாருமில்லை; அதோ உட்கார்ந்திருக்கிறதே அந்தப் பறவை தான்'' என்று உயரே மரத்தின்மீது உட்கார்ந்திருந்த பறவையைக் காண்பித்தார்.

ஆமாம்; உண்மையிலேயே ஒரு பறவை அங்கு உட்கார்ந்திருந்தது. அது பறவை வனத்துள் வருகிறவர்களைப் பார்த்து உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தில் ''ஹலோ!'' ''ஹலோ!'' என்று இனிய குரலில் முகமன் கூறி வரவேற்கிறது. நல்ல வேளை; அந்தப் பறவை ஆங்கிலத்தில் பேசியதோ, பிழைத்ததோ! அது மட்டும் தமிழில் பேசியிருந்தால் சிங்கள அரசாங்கம் அதைச் சும்மா வைத்திருக்குமா? ஒன்று அந்தப் பறவையைச் சிங்களம் பேச வைத்திருக்கும். அல்லது இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் அந்த இடத்தைவிட்டு வெளியேற்றியிருக்கும்!

இந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான பறவை இனங்கள் இருக்கின்றன. அடடா! பறவைகளின்தான் எத்தனை விதங்கள்; கொட்டைப் பாக்கு அளவுள்ள சின்னஞ்சிறு பறவையில் இருந்து பெரிய மாடு அளவு உள்ள மிகப் பெரிய பறவைகள் வரையில் இங்கு இருக்கின்றன. அங்குள்ள பறவைகளின் நிறங்களும் ஆயிரம் ஆயிரம் வகைகள். அதன் குரல்களும் அப்படியே. பல விந்தைக் குரல் படைத்த இந்தப் பறவைக் கூட்டங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பசியே எடுக்காது! வெள்ளை வெளேர் என்று இருக்க பறவையைப் பற்றிக் கூறுவதா? தங்க நிறம் படைத்த குருவியைப் பற்றிச் சொல்வதா? தோகை விரித்து நின்ற வெள்ளை மயிலையும், புள்ளி மயிலையும் பற்றிக் கூறுவதா? எதைப் பற்றிக் கூறுவது? ஆகையால் இத்துடன் நிறுத்திக் கொண்டு பாம்பு வனத்துக்குள் செல்வோம்.

கண்ணாடிப் பெட்டிக்குள்ளும், தண்ணீர் தொட்டிகளுக்குள்ளும், பலப் பலவிதமான செயற்கைப் புற்றுகளுக்குள்ளும் விதம் விதமான பாம்புகள் இருக்கின்றன. சின்னஞ்சிறு கண்ணுக்குத் தெரியாத பாம்பிலிருந்து



ஜனவரி 17உ. ஸிரியா ஜனாதிபதி திரு சுக்ரிஸால் குவாட்லி பாரத நாட்டுக்கு விஜயம் செய்தார். அவரை வரவேற்கப் பாரதத்தின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத், உதவி ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஆகியோர் புதுடெல்லி பாலம் விமான நிலையத்துக்குச் சென்று ஸிரியா ஜனாதிபதியையும் அவரது மனைவியையும் மகளையும் வரவேற்ற காட்சியைப் படத்தில் காணலாம்.

ஆனையே விழுங்கும் பெரிய மலைப் பாம்பு வரை வகை வகையான பாம்புகள் இருக்கின்றன. உலகின் பல பாகங்களில் உள்ள பயங்கர விஷப் பாம்புகள் வேறு இருக்கின்றன. அவை தம் இடத்தை விட்டு வர முடியாது என்று நன்றாகத் தெரிந்த போதிலும் நமக்குப் பயமாகத்தான் இருக்கிறது.

இந்தப் பாம்புகளுக்கு வேளை தவறாமல் தண்ணீர் வைத்து ஆகாரம் வைத்து அவற்றை நோய் நொடி வராமல் காப்பாற்றும் அதிசயத்தைக் குறித்து வியந்து கொண்டே அடுத்த பகுதிக்குப் போய்ச் சேருவோம்.

"இதென்ன, காட்டுக்குள் வந்து விட்டோமா!" என்ற பிரமை ஏற்பட்டு விட்டது, கரடிக் குகைகளைப் பார்த்தபோது. ஏழெட்டுக் கரடிகள் குதித்துக் கொண்டும் கும்மாளம் அடித்துக் கொண்டும் தண்ணீரில் மூழ்கி விளையாடிக் கொண்டும் சுதந்திரமாக இருந்தன. விலங்கு வனத்துக்குள் கரடியைப் பார்ப்பது போலவே தோன்றவில்லை. காட்டு மத்தியில் நின்று கரடிகளைப் பார்ப்பது போலவே இருந்தது. அவ்வளவு தத்ரூபமாக இயற்கையாகக் கரடிக் குகைகளை அமைத்திருக்கிறார்கள். இவற்றில் பல தேசத்துக் கரடிகளும் இருக்கின்றன. உலகம்தான் எவ்வளவு விசித்திரமானது; அதில்தான் எத்தனை விதமான விசித்திரப் பிராணிகள்!

இதுவரை விலங்கு வனத்துக்குள் இருந்த நாம் ஏதோ மந்திர சக்தியினால் ராமாயண காலத்து இலங்காபுரிக்கே போய் விட்டது போலத் தோன்றியது. அவ்வளவு அபூர்வமான காட்சிகள் தென்படுகின்றன.

வட்ட வடிவமாகவும், வரிசை வரிசையாகவும், பலவித கோணங்களிலும் உள்ள கூண்டுகளுக்குள் நூற்றுக்கணக்கான குரங்கு இனங்களைக் காண்கிறோம். அவை செய்யும் ஜால வித்தைகளைப் பார்த்து மகிழ்கிறோம். ஒரு இடத்தில் கருங்குரங்கு ஊஞ்சல் ஆடுகிறது. மற்றோர் இடத்தில் வேறு வகையான குரங்கு தன்னுடைய நீளமான வாலின் நுனியால் மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத் தொங்குகிறது. இன்னொரு இடத்தில் பெரிய மனிதக் குரங்கு மனிதனைப் போலவே சைக்கிள் விடுகிறது! சிகரெட் பிடிக்கிறது! கைகொட்டிச் சிரிக்கிறது!

அதோ சிறுவர்களும், பெரியவர்களும் கும்பலாக உட்கார்ந்திருக்கிறார்கள். கை கொட்டிச் சிரிக்கிறார்கள். 'ஆகாகா' என்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்திருப்பதற்கு வசதியாகப் படிப்படியாக நாலு பக்கத்திலும் படி வரிசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் படி வரிசைகளுக்கு மத்தியில் வட்ட வடிவமாக ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்தில் நாலு ஐந்து யானைகள் வேடிக்கை காண்பித்துக் கொண்டிருக்கின்றன. சின்னஞ்சிறு யானையிலிருந்து படிப்படியாக உயர்ந்து மிகப் பெரிய யானை வரையில் ஆறு யானைகள் சேர்ந்து நின்று காலைத் தூக்கி வணங்குகின்றன. ஒன்றின் வாலை ஒன்று பிடித்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறது. இவ்வாறு எத்தனை எத்தனையோ வித்தைகள் செய்கின்றன. அந்தக் குட்டி யானை செய்யும் வித்தைகளைப் பார்த்துக் கூடி இருக்கும் மக்கள் மகிழ்ச்சி நிறைந்த ஆரவாரம் செய்கிறார்கள்.

சென்னை நகர விலங்கு வனத்துக்கும் கொழும்பு நகர விலங்கு வனத்துக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். கொழும்பு நகரில் உள்ள விலங்குகள் எல்லாம் கொழு கொழு என்று நன்றாக இருக்கின்றன. வனத்துக்குள் மிருகங்களை ஒரு இடத்தில் அடைத்து வைத்திருப்பதுடன் அவர்கள் திருப்தி படையவில்லை. அவைகளுக்குப் பல பல வேடிக்கைகளையும் விளையாட்டுகளையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாள் மாலையிலும் அந்த மிருகங்கள் வேடிக்கை காட்டுகின்றன. இதனால் விலங்குவனத்துக்கு வேடிக்கை பார்க்க வரும் கூட்டம் அதிகமாகிறது. நல்ல வருமானமும் கிடைத்து வரு

பாருங்கள்!

ஒரு 'கோடக்' காமிரா உபயோகிப்பது

மிதமான விலையுள்ள இந்த உயர்தர 'கோடக்' காமிராக்களி

இந்த சேர்த்தியான 'கோடக்' காமிராக்களில் எதைக் கொண்டும் அழகான படங்
எடுக்கலாம். கீழ் கூறியவாறு செய்யவும்:

1. எடுக்கப்போகும் காட்சியின் பிரதிபிம்பத்தை வியூபைண்டரில் பார்க்கவும்
2. காட்சியிலிருந்து குறைந்தது 6 அடி தூரத்தில் நிற்கவும்
3. பித்தானை மெதுவாக அழுத்தவும்




வீட்டிற்குள் படங்கள் எடுக்கவோ அல்லது பகட்டான வர்ணப்படங்கள் எடுக்கவோ, ஒரு பிளாஷ்ஹோல்டரைப் பொருத்தி, பல்பை மாட்டி, குறிபார்த்து மேற்கூறியவாறு படம் எடுக்கலாம். எவ்வளவு சுலபம் பாருங்கள்!
கோடக் கம்பெனியார் மிதமான விலையுள்ள பலதரப்பட்ட அற்புதமான காமிராக்களை வழங்குகிறார்கள். இங்கு ஒரு சிலவையே காண்பிக்கப்பட்டுள்ளன. எந்த கோடக் வியாபாரியிடமும் இன்னும் எத்தனையோ இருப்பதைக் காணலாம். உங்களால் கொடுக்கக்கூடிய விலைக்கு உங்கள் தேவைக்குத்தகுந்த காமிராவைத் தேர்ந்தெடுக்க அவர் உதவி புரிவார்!

ப்ரௌனி 'க்ரெஸ்டா' காமிர
போர்ட்ரெய்ட் எடுக்க க்ளோஸ்
அப் லென்ஸ், வெளிப்புறக் காட்
சிகளை சேர்த்தியாக எடுக்க பில்ட
ப்ளாஷ் இணைக்க வசதி. இ
மூன்று விசேஷ அம்சங்களும்
இந்த அழகிய காமிரா கொண்
எவ்வித காட்சிகளையும் எளி
சேர்த்தியாக படம் எடுக்கலா

விலை	.. ..	ரூ. 31/
கேஸ்	.. ..	ரூ. 5/
ப்ளாஷ்ஹோல்டர்		ரூ. 31/


'ப்ரௌனி' 127 காமிரா



கைக்கு அடக்கமாயிருப்பதற்கு விலையுயர்ந்த மினியேச்சர் காமிரா போல் உருவாக்கப்பட்ட இதைக் கொண்டு சேர்த்தியான படங்களை சுலபமாக எடுக்கலாம். இதற்கு ஒரு ஐ-லெவல் வியூபைண்டர் உள்ளது. இது தூக்கிச் செல்லுவதற்கு இலேசானது. கழுத்தில் மாட்டிக்கக்கூடிய பின்னிய கயிறு உள்ளது.

விலை	..	ரூ. 18/12
கான்வஸ் கேஸ்	..	ரூ. 3/8

விக்ல்-



விலைகளில் விற்பனை வரி அடங்கவில்லை

கிறது. மிருகங்களையும், விலங்கு வனத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள முடிகிறது.

அதோ, ஆசை பெற விழிக்கும் மான் கூட்டங்கள்! மான்கள் என்றால் மான்கள்தான். ஆகா! மான்களில்தான் எத்தனை எத்தனை வகைகள்! அதன் கொம்புகளில்தான் எத்தனை விதங்கள்! கிளைக் கொம்புகள், சாதாரண கொம்புகள், திருகி விட்டிருக்கும் கொம்புகள், முடிச்சுவிட்டிருக்கும் கொம்புகள். இவைகளைப் பார்க்கும்போது மனத்தில் ஏதோ இனந் தெரியாத ஒரு மகிழ்ச்சியே ஏற்படுகிறது. அவற்றின் கண்களைப் பார்க்கும்போதே நமது மனத்தில் ஒரு தனி இன்பம் ஏற்படுகிறது. கவிஞர்கள் பெண்களின் கண்களைப் பார்த்து மான் விழி என்று சொன்னார்களே அதன் முழுப் பொருளையும் இங்குதான் தெரிந்து கொள்ள முடிகிறது. மான் கூட்டத்தையும், அவைகளைப் பார்க்க வந்திருந்த மங்கையர்களையும் சேர்த்துப் பார்த்தபோது தான் கவிஞர்கள் கூறியது முற்றிலும் உண்மை என்பதை உணர்ந்து அநுபவிக்க முடிகிறது.

இன்னும் அஞ்சக் கூரல் பழகும் புலிகளையும் தன்னிச்சையுடன் அலைந்து கர்ஜிக்கும் சிங்கங்களையும் பார்த்து மகிழ்கிறோம்.

ஆப்பிரிக்கா தேசத்து அதிசயப் பிராணியான கங்காருவும் இருக்கிறது. நாலரை டன் எடையுள்ள பயங்கரமான நீர் யானைகள், சிறு சிறு குன்றுகளைப்போல் காட்சி தரும் ஆமைகள், ஆளையே விழுங்கி ஏப்பம் விடும் முதலைகள் எல்லாம் இருக்கின்றன.

ஓரிடத்தில் கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைரங்களைப் போலவும், நட்சத்திரங்களைப் போலவும் ஒளி வீசி மின்னுவது தெரிகிறது. ஒரு பெட்டியில் ரத்தினமே சொரிகின்றதோ என்று எண்ண வேண்டியிருந்தது. இன்னொரு பெட்டியில் மரகதம் துள்ளுகிறதோ என்று தோன்றியது. இன்னும் சில இடங்களில் தங்கத் துண்டுகள் உயிர் பெற்றுத் தாவிப் புரளுவது போலிருந்தன.

அந்தக் கண்ணாடிப் பெட்டிகளுக்குள் அப்படியெல்லாம் காட்சி யளித்தவைகள் விண் மீன்கள் அல்ல. ஜலத்தில் உலவும் தண் மீன்கள்தான்! விசித்திரமான பல தேசத்து மீன்கள். அவைகளைப் பார்த்த நாமும் கடலுக்குள் மூழ்கி அவைகளுடன் சேர்ந்து விளையாடலாமா என்று ஆசைப்படுகிறோம்.

இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்த்து அநுபவிப்பதற்கு அறிவு முதிர்ச்சியோ, அநுபவ ஞானமோ, ரஸிகத்தன்மையோ ஒன்றுமே வேண்டியதில்லை. குழந்தை உள்ளம் இருந்தாலே போதுமானது.

விலங்கு வனத்துக்குக் குழந்தைகளை அழைத்துப் போவதைப் போல் சிறந்த கல்வி வேறு ஒன்றுமில்லை. மிருகங்களைப்பற்றி நூறு நூறு புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்வதை ஒரு சில மணி நேரத்தில் குதூகலத்துடன் குழந்தைகள் புரிந்துகொண்டு விடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

இன்னும் இந்த விலங்கு வனத்தில் பார்க்க வேண்டிய பிராணிகள் அநேகம் இருக்கின்றன. பற்பல விதமான எலிக் கும்பல்கள், முயல் கூட்டங்கள், ஆட்டு மந்தைகள் முதலியவைகளைப் பார்த்துக்கொண்டே சென்றால் ஒட்டகமும், ஒட்டைச் சிவிங்கியும், வரிக் குதிரையும் நம் கண்ணில் பட்டே தீரும்.

மற்றும் நடு நடுவே இன்னும் பலவகைப் பட்ட பிராணிகளையும் சந்திக்கலாம்.

இவ்வாறு சுற்றிச் சுற்றி, ஏறி இறங்கி, வளைந்து நெளிந்து விலங்கு வனத்தைப் பார்த்துவிட்டு அங்கிருக்கும் பூந்தோட்டத்துக்கு வருகிறோம். பலப் பல நிறங்களில் பூத்துக் குலுங்கும் புஷ்பங்களின் காட்சியைக் காண்கிறோம். ஜில்லென்று குளிர்ந்த காற்று நம்மீது படுகிறது. மரகதக் கம்பளத்தை விரித்து விட்டது போன்ற புல்தரைமீது சற்று உட்கார வேண்டும் என்று ஆவல் உண்டாகிறது. காலை நீட்டிப் போட்டுக் கொண்டு மெதுவாக உட்காருகிறோம்.

நம்முடன் வந்த ஈழநாட்டுத் தமிழ் வித்வான் பாடத் தொடங்கி விடுகிறார் :

காக்கைச்சிறகினிலே நந்தலாலா! – நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா!

என்னும் பாரதியின் 'நந்தலாலா' பாடலை அவர் பாடியபோது, "இந்தக் கொழும்பு விலங்கு வனத்துக்குள் வந்தபடியால் அல்லவா நாம் இறைவனின் சிருஷ்டித் தத்துவங்களை யெல்லாம் தெரிந்துகொள்ள முடிந்தது!" என்ற தோன்றியதுடன் அங்கு அநுபவித்த இன்பத்தைச் சொல்லத் தெரியாமல் திக்கு முக்காடிப் போனேன். பின்னர்,

கேட்குமொழிகளெல்லாம் நந்தலாலா!
– நின்றன்
கீதமிசைக்குதடா நந்தலாலா!

என்று அவர் பாடி வருகையில் நானாவிதமான பறவைகளின், மிருகங்களின் குரல்களும் சேர்ந்து கேட்டன. அந்தக் கோஷ்டிக் குரல்கள் "துயரத்தை அழித்துக் கவலையைப் பழித்து மகிழ்ந்து வாழ்வோம் வாருங்கள்!" என்ற தெய்வக் குரலாகவே கேட்டன!

நேரம் போவதே தெரியவில்லை. எத்தனை நாழிகை வேண்டுமானாலும் இங்கு உட்கார்ந்திருக்கலாம் போல் தோன்றிற்று.

ஆனால் நண்பர் அவ்வாறு உட்காருவதற்கு விடுகிறாரா! "இருட்டிப் போகிறது! வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்" என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டார்.

வீடு திரும்பும் வழியில் "இந்த விலங்கு வனத்தைப் பார்த்தே வியந்து போனீர்களே! நாளைக்கு மியூஸியத்தைப் பார்த்தால் என்ன சொல்வீர்களோ?" என்றார்.

"ஓகோ; அப்படியா?" என்று மியூஸியம் பார்ப்பதற்குத் தயாரானேன்.

"மியூஸியத்தில் ஈழ நாட்டின் புராதன செல்வங்களை அல்லவா கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறார்கள்" என்றார்.

"ஓ! அப்படியா? அவை கூட ஈழ நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்று சத்தியாக்கிரகம் செய்தனவோ?" என்றேன்.

நண்பருக்கு என் மீது ஏற்கெனவே ஒரு மாதிரி சந்தேகம் இருந்தது. இப்பொழுது உண்மையிலேயே அவருடைய தலை சுற்றத் தொடங்கியது. அதற்குப் பிறகு நடந்த பிரமிப்பை அளிக்கும் சம்பவங்களை அடுத்த இதழில்தான் கூறவேண்டும். (தொடரும்)



ஆரோக்கியத்திற்குச் சிறந்ததோர் வழி



உங்கள் குழந்தைகளை பாலைச் சாப்பிடும்படி செய்வது சிரமமே அல்ல. ப்ரௌன் அன்ட் போல்ஸன் கஸ்டர்ட் பவுடரிலிருந்து தயாரிக்கப்பட்ட பாலாடை நிறைந்த கஸ்டர்டை அவர்கள் விரும்புவார்கள். இதில் ஆரோக்கியத்திற்கான பொருள்கள் அனைத்தும் அடங்கியிருக்கின்றன. இதை நீங்கள் பாலின உதவிகொண்டு தயாரிக்கலாம். இது தாவரப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.

இனும்—சிறந்த ஆகாரங்களைத் தயார் செய்து சாப்பிடுவதற்கு உதவும் வியக்கத்தக்க புதிய பாக சாஸ்திரப் புத்தகம். உங்கள் பெயர் முகவரி இவைகளுடன் இரண்டணா தபால் தலைகளுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக:

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

தபால் பெட்டி நெ 994—பம்பாய்.

தேநீர் அருந்தி
காலையைப்
புத்துணர்வுடன்
தொடங்குங்கள்



உங்களுடைய சொந்தப் பிரச்னை எதுவாயிருந்தாலும் சரி . . . காலையை ஒருவித வெறுப்புணர்ச்சியுடன் தொடங்காதீர்கள். புத்துணர்ச்சி யளிக்கும் ஒரு கோப்பை தேநீருக்காக கையை நீட்டுங்கள். நீங்கள் என்னை அருந்தும்போது, உங்களுக்கு தெளிந்த மனப்பான்மையையும், நன்னம்பிக்கை இருந்தால் உங்களால் வெல்லமுடியாத தனிப் பிரச்னை எதுவுமில்லை என்ற உறுதியையும் அளிக்கின்றேன்.

நான்தான் டீ — காலை நேரப் புத்துணர்வின் சின்னம்.

TEA BOARD INDIA

நான்காம் அத்தியாயம்


கலங்கமாலரையர்

பூதுகன் சிறிது அவட்சியமாகச் சிரித்த வண்ணம் "ஆம். நான் பூதுகனேதான். கலங்கமாலரையர் என்ற தங்களுடைய நாமதேயம் இந்த ஆசிரமத்தில் புகுந்ததும் எப்படி மாறி யிருக்கிறதென்று அடிகள் கருணை கூர்ந்து அருளவேண்டும்!" என்றான் கேலி செய்கிறவன் போல்.

"நான் எப்பொழுதும் எங்கிருந்தாலும் கலங்கமாலரையரேதான்" என்றார் அவர்.

"உடை, உருவம், இடம், வாழ்க்கைநிலை, மதம் எல்லாம் மாறி விட்டனவே. ஒரு சமயம் நாமதேயமும் மாறி யிருக்கிறதோ என்ற சந்தேகம்? அதனால் கேட்டேன். தூய எண்ணங்கள் நிறைந்த புத்த சங்கத்தில் திருடர்கள், கொலைகாரர்கள், கொடியர்கள், பொய்யர்கள், ராஜத் துரோகிகள், தேசத்துரோகிகள், சமூக பிரஷ்டம் செய்யப் பட்டவர்கள் இவர்களுக்கு எல்லாம் இடம் கிடைத்து விடுவதுதான் மனத்தைமிகவும் வருத்துகிறது. தலையை முண்டிதம் செய்து கொண்டு சீவர ஆடை உடுத்திக் கொண்டு விட்டால் இத்தகைய வஞ்சகர்கள் எல்லாம் உலகில் நல்லவர்கள் போல் வாழவும் வழி ஏற்பட்டு விடுகிறதே என்ற மனக் கொதிப்புத்தான் எனக்கு" என்றான் பூதுகன் சிறிது ஆத்திரத்தோடு.

மாலவல்லியின் தியாகம்




கி. ரா. கோபாலன்

"பூர்வாசிரமத்தில் எப்படி இருந்தாலும் துறவு நிலையை அடைந்தவனை அந்த அழுக்குகள் எல்லாம் ஒட்டாது என்ற உண்மையை நீ தெரிந்து கொள்ளவில்லை" என்றார் அவர்.

"இப்படி ஏதாவது வேண்டுமானால் சொல்லிக் கொண்டு திரியலாம். அந்த அழுக்குகள் துறவு நிலையிலும் அவனை ஒட்டுவதோடல்லாமல் சங்கத்தையே வந்து பற்றிக் கொள்கின்றன. இதுதான் உண்மை நிலை. புத்தர் என்னும் மகா புருஷர் உலகில் உள்ள மக்கள் படும் பலவிதமான இன்னல்களைப் போக்கக் கருதி ஒரு மார்க்கத்தைக் கண்டு பிடித்தார். அவருடைய மார்க்கத்தில் பலருக்குப் பற்றுதல் ஏற்பட்டு அதைப் பின்பற்றினார்கள். தம் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்கள் ஒருமுகமான அபிப்பிராயத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே சில வரைமுறைக



ளோடு சங்கம் என்பதை ஏற்படுத்தினார். இதையொரு மதமாக்க வேண்டுமென அவர் கருதியதாகத் தெரியவில்லை. ஆனால் அவருக்குப் பின்னால் வந்த அவருடைய சீடர்கள் எப்படியோ அதை மதமாக்க முயற்சித்தார்கள். மதம் என்று சொல்லி விட்டாலே. அதற்கு ஒரு கடவுள் வேண்டாமா? பகவரையே கடவுளாக்கி விட்டனர். கௌதமர் கடவுளானவுடனே அவருக்கு ஒரு சிலை: அந்தச் சிலையை வைக்க ஒரு கோயில் — விஹாரம். கோயிலும் சிலையும் ஏற்பட்ட உடனே பூசை வேண்டாமா? பூசை நடக்கும் வேளையில் மணி, நகரா இவையெல்லாம் வேண்டாமா? இந்த மதத்தை வளர்ப்பதற்கு மற்ற மதங்களில் உள்ளது போல் புராணங்கள், கதைகள், கட்டுக் கதைகள். அதற்குப் பிரசாரகர்கள், வாதம்-பிரதிவாதம் எவ்வளவு? சைவ மதாச்சாரியார்களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் பொது மக்களை வசீகரிக்க மனத்தை மயக்கும் பாடல்களும், நாட்டியம், நாடகம் இவைகளையும் ஏற்படுத்தினார்கள் என்றால் உடனே புத்தசமயத்தினரும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு விடுகின்றனர். இப்படியெல்லாம் செய்யச் சொல்லிப் பகவர் கட்டளையிட்டாரா? கலங்கமாலரையரே! போதி மாதவர் உலகில்பிறந்த ஒவ்வொருவரும் மனப் பக்குவம் அடைந்து சன்மார்க்க நெறியில் நிற்க வேண்டுமென்று விரும்பினாரே தவிர மத சம்பந்தமான போட்டிகளில் இறங்கித் துவேஷத்தை வளர்க்க அவர் விரும்பவில்லை. சங்கத்தில் சேரும் ஒவ்வொரு பிக்ஷுக்களும் அனுசரிக்க வேண்டிய முறைகளை வகுத்து வைத்தார். உலக நலனுக்காக அனைவரும் சன்மார்க்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக; பொதுப்பணி புரியச் சங்கத்தில் சேருபவர்கள் ஆசை, அவா முதலியவைகளை விட்டு, எல்லாவற்றையும் சர்வபரித்தியாகம் செய்து விட்டுத் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்குத் துறவிக்குரிய கடுமையான விதிகளை விதித்தார். துறவிக்குரிய இந்த விதிகள் பொது மக்கள் யாவராலும் பின்பற்ற முடியாதவை. பொதுமக்கள் புத்தபிரானின் உத்தமமான மார்க்கங்களை அனுசரித்துக் கூடுமான வரையில் தங்கள் வாழ்க்கையில் சீர்திருந்தலாமே தவிர எல்லோருமே துறவறமார்க்கத்தை ஏற்றுக் கொள்வது கடினம். இத்தகைய நிலையில் புத்த மதத்தில் பற்றுள்ள கிருகஸ்தர்களையும் உபாசகர்கள் என்று கூறி அவர்களையும் சேர்த்துக் கொள்ளுகின்றனர். புத்தரின் நிரீசுவர வாதமும், அனாத்மவாதமும் மறைந்து கடவுள் பக்திதான் அதிகமாகி விட்டது. நான் இப்படியெல்லாம் சொல்கிறேன் என்று வருத்தப் படாதீர்கள். இந்தப் பாரதத்தில் புத்தரென்னும் மகா புருஷரால் ஒரு உன்னதமான கொள்கை எடுத்துக் காட்டப்பட்டது. ஆனால் அந்த உத்தமமான கொள்கையை அது பிறந்த இந்தப் புனிதமான பாரதத்திலேயே புதைத்து விடுவோமா என்ற அச்சம்தான் எனக்கு. இந்த உன்னத மார்க்கம் நமது நாட்டுக்குப் பயனாகாத வண்ணம் வெளி நாட்டுக்கெல்லாம் பயனுள்ளதாகி விடுமோ என்ற பயம் தான் எனக்கு. தன் கொள்கைகளை வேத சமயங்களின் கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டு அச்சமயத்தோடு புத்தசமயமும் கடலில் கலந்த சிறு நதி போலக் 'கலந்து ஐக்கியமாகி விடுமோ என்றுதான் நான் நினைத்து



மன வருத்தம் அடைகிறேன்'' என்ருன் பூதுகன்.

பௌத்த பிக்ஷுவாகிய கலங்கமாலரையர் பூதுகனின் நீண்ட பிரசங்கத்தைக் கேட்டுச் சிறிது ஆத்திரம் அடைந்தாலும் அடக்கமான குரலில், ''பூதுகா! நீ நன்ருகப் பேசுவாய் என்று எனக்குத் தெரியும். அழகாகத்தான் பேசி விட்டாய். உனக்கு இப்படிப்



ZENITH
ப்ளூ
செனித்
ப்ளேடுகள்

பேசிப் பேசிப் பழக்கம். புத்தர் பெருமான் ஒருமதத்தை ஏற்படுத்த விரும்பினாரா இல்லையா என்பது வேறு விஷயம். அவர் வழியைப் பின்பற்றுகிறவர்கள் உலகில் அதிகமாகி விட்டபடியால் அது ஒரு மதமாகி விட்டது. புத்தர் கடவுளைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் அதிகம் பேசாததால் அவர் அனாத்மவாதி, நிரீசுவரவாதி என்று நீ உன்னுடைய நாஸ்திகக் கூட்டத்தோடு அவரையும் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறாய். ததாகதர் உலகில் கண்ணெதிரே காணும் இன்னல்களையெல்லாம் அழிக்க நினைத்தார். ஒவ்வொரு மனித இதயத்திலும் அன்பு, அஹிம்சை, ஈகை, இரக்கம், பொறுமை முதலிய நற்குணங்களே குடி கொள்ள வகை செய்தார். உலகைப் பற்றி இருக்கும் துயர அழுக்குகள் எல்லாம் நீங்கிவிடும் என்று நம்பினார். ஆத்மா, கடவுள், சுவர்க்கம் என்பவைகளைப் பற்றி மக்களுக்குப் போதனை செய்தால் தங்களுக்கு எட்டாத விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை செய்து உலகில் கண்ணெதிரில் நடக்கும் தீமைகளை மறந்து வீண்பொழுது போக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்று கருதியே எளிய மார்க்கங்களை உபதேசித்து அருளினார். அவர் கடவுள் இல்லையென்று எங்கும் சொல்லவில்லை. கடவுளைப் போற்றும் மதங்களையும் அவர் வெறுக்கவில்லை. 'இந்த ஆத்மா என்பது என்ன? அது ஒன்றா, இரண்டா?' என்பதைப் பற்றியும் விவாதம் செய்யவில்லை. இந்த வாழ்விலேயே நிர்வாண நிலை அடையும் போதனைகளைச் செய்தாரே தவிர தனியாகச் சுவர்க்கம், நரகம் என்று எதையும் பேசவில்லை. மனிதர்கள் சிறந்த பண்பாடுகளுடன் வாழ்ந்தால் பிறப்பு இறப்பற்ற நிர்வாண நிலையை அடையலாம் என்பது தான் அவருடைய தத்துவம்'' என்று சொல்லி நிறுத்தினார்.



பூதுகன் சிரித்தான்! ''சரிதான்! அத்தகைய நிர்வாண நிலையை அடையச் சிலா உருவங்களும், அவைகளுக்கு பேரிகை மணி யோசைகளும் முழங்கி, மலர் தூவிப் பூசைகள் எல்லாம் செய்ய வேண்டுமென்று அவர் சொல்லவில்லையென்று நினைக்கிறேன்'' என்றான்.

''ததாகதர் அப்படிச் சொல்லவில்லைதான். ஆனால் பகவர் மகாபரி நிர்வாணம் அடைவதற்கு முன்பே யாவரும் அவரைத் தெய்வமாகவே கொண்டாடினர். பகவர் மகாபரி நிர்வாணம் அடைந்த பிறகு அவரை ஒவ்வொருவரும் தெய்வமாகக் கொண்டாடுவதில் வியப்பில்லை அல்லவா? அவருடைய சன்மார்க்கப் போதனைகளில் மனம் வைத்தவர்கள் அவருக்கு உரு அமைத்துத் தெய்வமாகக் கொண்டாடித் தொழுவதில் பிசகு என்ன இருக்கிறது? மகத நாட்டை ஆண்டவனும் ததாகதரிடம் பேரன்பும் பக்தியும் கொண்டவனுமாகிய பிம்பிசாரன் ராஜக்கிருகத்தில் பகவரை அழைத்து உபசரிக்கும் பொழுது பகவர் திரியஸ் திரம்ஸலோகத்துக்குச்சென்றபோது அவருடைய பிரிவாற்றாமை தாங்காது அவருடைய அழகான உருவம் போல் சிறந்த சிற்பி ஒருவனைக் கொண்டு சிருஷ்டிக்கச் செய்து அதை கிருத்ரகூட விஹாரத்தில் எழுந்தருளச் செய்து வணங்கியதாக வரலாறு சொல்கிறது. பகவர் தேவலோகத்திலிருந்து திரும்பிய பின் பிம்பிசாரன் தம்மீது வைத்துள்ள அன்பையும் பக்தியையும் அறிந்து மிகவும் மன மகிழ்ச்சியுற்றார் என்று தெரிகிறது! இவ்வரலாறுகளை அறிந்த பகவரின் அடியார்களுக்குப் பிம்பிசாரனைப் போல் தாங்களும் ஐயனுக்குத் திருவுருவம் அமைத்து வணங்க வேண்டுமென்று தோன்றாதா?'' என்றார் கலங்கமாலரையர்.

பூதுகன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே ''அழகு! அப்புறம்..?'' என்றான். ''இதைப் போலவே பௌத்த பிக்ஷுக்களின் கையில் ஜெப மாலைகள் வைத்துக் கொண்டிருப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. ததாகதரின் சீடரில் ஒருவனான வைடூர்யன் என்பவன் இந்தச் சித்தத்தை அடக்குவதற்கு என்ன செய்யலாம் என்று ஐயனைக் கேட்கவும், ஐயன், 'அரசமரத்திலிருந்து கடைந்து எடுத்த நூற்றெட்டு மணிகளாலாகிய

மாலையைக் கொண்டு ஜபிக்கும்படி உபதேசித்தார்.' அவன் அவருடைய உபதேசத்தைக் கேட்டு ஐயனின் உபதேசப்படியே செய்து நிர்வாண நிலையை அடைந்தான். வைடூர்யனுக்கு உபதேசித்த வழியைப் பின்பற்றி அவருடைய பக்தர்களாகிய மற்றவர்களும் ஜபமாலையை வைத்துக் கொண்டு தியானம் செய்து கடைத்தேற வேண்டுமென்று நினைத்து வரலாகாதா?'' என்றார் கலங்கமாலரையர்.


''தாராளமாக....'' என்றான் பூதுகன் பரிகாசமாக.

''பெருமானின் திருவடித் தாமரைகளை மலர்களைக்கொண்டு அர்ச்சிப்பதற்குரிய காரணத்தையும்சொல்லுகிறேன். பகவர் தம் தாயாகிய மாயாதேவி தேவலோகத்தில் தேவனுக்கு மகளாய் இருப்பதை யறிந்து அவருக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்ற கருத்தில் தேவலோகம் சென்றபோது அங்கிருந்த அவருடைய தாயாகிய மாயாதேவி அவரிடம் உபதேசம் பெற்றுத் தன் காணிக்கையாக அவருக்கு ஒரு மந்தார மலரை அளித்தாளாம். அவரும் அன்போடு அம்மலரைப் பெற்றுக் கொண்டாராம். இதிலிருந்து பகவரின் திருவடிகளில் மலர்களை அர்ப்பணிப்பது பகவருக்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தும் என்று ஒவ்வொருவரும் நினைக்கலாமல்லவா? புத்த விஹாரங்களில் கொடிகள் படருவதும், பேரிகைகள் முழங்குவதும், மணியோசை கேட்பதும் ஏனென்று கேட்கிறாய்? அதற்கும் ஒரு காரணம் உண்டு. போதி மாதவருக்கு விரோதியாய் இருந்த தேவதத்தன் என்பவன் பகவரைக் கொல்ல நினைத்து ஒரு மந்திரவாதியைக் கொண்டு பல பேய்களை ஏவி விட்டான். அந்தச் சமயத்தில் பகவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தெய்வலோகத்திலிருந்து தெய்வகணங்கள் படையெடுத்து வந்து அப்பேய்களை விரட்டியடித்தன. அந்தச் சமயத்தில் தேவகணங்கள் கைகளில் கொடிகள் ஏந்தியும், மணியோசை எழுப்பியும், பேரிகை முதலிய வாத்தியங்களை அடித்துக் கொண்டும் வந்தனர். தேவகணங்கள் மந்திரவாதியால் ஏவி விடப்பட்ட பேய்களைத் துரத்திய பின் அந்த மந்திரவாதியையும் கொல்ல நினைத்துத் துரத்தின. அச்சமயம் மந்திரவாதி உயிர் தப்ப ஒரு காளையுருவம் எடுத்து ஓடினான். அவன் காளையுருவம் எடுத்து ஓடுவதை அறிந்த தேவகணங்கள் அந்தக் காளையையும் துரத்தின. அச்சமயம் அந்த மந்திரவாதி ததாகதரின் பாத கமலங்களில் வந்து விழுந்து அடைக்கலம் வேண்டினான். ததாகதர் அவரை மன்னிக்கவும் தேவகணங்கள் அவனை உயிரோடு விட்டன. தனக்கு அடைக்கலம் அளித்த ததாகதரின் கருணை உள்ளத்தை அறிந்த மந்திரவாதி தானும் மனம் திருந்தியவனாய், பகவரைப் புகழ்ந்து வணங்கி மறுபடியும் மனித உரு எடுத்தால் தனக்குக் கேவலமான குணங்கள் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சித் தான் காளை உருவிலேயே இருப்பதாகவும் தான் இறந்த பிறகு தன்னுடைய உடற் தோலால் பேரிகைகள் கட்டுவித்துப் புத்த விஹாரங்களில் அந்தப் பேரிகைகள் முழங்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டான். அதன் காரணமாகத்தான் புத்த விஹாரங்களில் பூசை நேரத்தில் பேரிகைகள் முழங்குகின்றன. தேவகணங்கள் கையில் கொடி ஏந்தி, மணியோசை அடித்து, பல வாத்தியங்களை இசைத்து வந்ததால்தான் புத்த விஹாரங்களில் பல வாத்தியங்களின் ஒலியும் மணியோசையும் கேட்கின்றன'' என்றார்.

பூதுகன் எதிரொலி செய்யும்படியாகக் கலகல வென்று சிரித்தான். ''கலங்கமாலரையரே! இதெல்லாம் என்ன கதை? நான் சொல்லியவைகளையெல்லாம் மறந்து விட்டு என்னையும் பாமரன் போல் நினைத்து உங்கள் புராண வரிசைகளையெல்லாம் காட்டுகிறீர்களே? போகட்டும். தலையை மொட்டையடித்துச் சீவர ஆடையை உடுத்திக் கொண்டதும் நன்றாகத் தேறிவிட்டீர்கள் என்று தான் தெரிகிறது. இப்பொழுதுதான் நீங்கள் தேரராகிவிட்டீர்களோ? இன்னும் கொஞ்ச நாளில் கொட்டியளப்பதற்கு இன்னும் பல கட்டுக் கதைகளையெல்லாம் தெரிந்து கொண்டபின் மகாதேரர் ஆகிவிடுவீர்கள். இருக்கட்டும். இனிமேல் உங்களுடைய சொந்தக் கதைக்கு வருகிறேன். திடீரென்று ஏன் இந்த வேஷம்? தஞ்சையில் அனுபவித்த உல்லாச போகங்களையெல்லாம் விட்டுவிட்டு இப்படிப் பூம்புகாரிலுள்ள புத்த விஹாரத்தில் வந்து அடைந்து கிடப்பானேன்? இதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். இப்பொழுது நீர் போடும் இந்த வேஷம் சாதாரண காரியத்துக்காக என்று நினைக்கவில்லை. யாரைக் கொலை செய்து எந்த ராஜ்யத்தை நிலைநிறுத்துவதற்காகவோ?'' என்றான்.

கலங்கமாலரையர் அவனுடைய வார்த்தையைக் கேட்டுக் கோபமோ ஆத்திரமோ அடையவில்லை. அவர் முகம் சிறிது சுருங்கியது. அவர் மனத்திலிருந்த சோகத்தைத் தான் எடுத்துக் காட்டுவதுபோல இருந்தது. ''பூதுகா! அரசி


பினிக்ஸ் உங்களை அழகு படுத்துகிறது



பினிக்ஸ், ப்ரிண்ட்ஸ், வாயில் வீஜேஸ்

உங்களுக்கேற்ற, ஆனால் நீங்கள் இதுவரை கண்டிராத கண்ணைப் பறிக்கும் கலர்களிலும், டிசைன்களிலும் இப்போது கிடைக்கின்றன. பினிக்ஸ் ப்ரிண்ட்ஸ் மற்றும் வாயில்களையே வாங்குங்கள். நாள் முழுவதும் அணிந்தபோதிலும் அவை மொற மொறப்பையும் புதுமையையும் இழக்கமாட்டா.

அவை நேர்த்தியானவை என்பதை நீங்கள் உணர்வீர்கள்



தி பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட், லோயர் பரேல், பம்பாய்—13



If a Swiss Watch then

CAMY

கெமி

கைக்கடிகாரம்

தரத்தில் முதன்மையானது. நாகரிகத்தில் முன்னணியில் இருப்பது. உலகத்திலே மிகவும் விரும்பப்படும் கடிகாரங்களில் ஒன்று.

கெமி கடிகாரம் அணிந்து கொண்டு பெருமை அடையுங்கள்

பற்பல நவநாகரிகமான மாடல்களில் பிரபல கடிகாரக் கடைகளில் கிடைக்கும்.

(Nua 352)

உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

எங்கெங்கு தொற்றுநோய் தொற்றும் அபாயம் இருக்கிறதோ அங்கெல்லாம் பென்ஸிடாலை தாராளமாகக் கையாளுங்கள்





பென்ஸிடால்

விஷமில்லை ★ ரணமாக்காது ★ கறைபடாதது

தயாரிப்பவர்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்.

கல்கத்தா—29

[illegible]

CBF-2TM-54

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

யல் என்னும் பகடையாட்டம் ஆடிக் களைத்திருக்கும் தருணம் இது. எனக்கு இனி எந்த சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்த வேண்டுமென்ருே, எந்த சாம் ராஜ்யத்தைக் குலைக்க வேண்டு மென்ருே எண்ணம் ஏற்படாது. என் மனம் எல்லாவற்றையும் துறந்து ஓர் நிலையை அடைந்து விட்டது. இன்று நான் ததாகதரின் சேவகன், என் வாழ் நாளில் இந்த மனத்துக்குச் சிறிது அமைதி கொடுக்க எண்ணி எஞ்சி நிற்கும் சிலநாட்களையும் அவன் திருவடி நிழலிலிருந்தே அன்புப் பணி புரிந்து கடத்தி விட நினைக்கிறேன். இது உண்மை'' என்ருர்.

''உண்மைதான்! இன்னும் சில நாட்க ளாவது உயிர் வாழ வேண்டுமென்ற ஆசை இருக்காதா? கொடும்பாளூர்வீரர் களிடம் யாரேனும் தலையைக் கொடுப் பார்களா? இப்படித்தலையை மொட்டை யடித்துக் காஷாயம் தரித்துக் கொண்டு கையில் ஓடு எடுத்துப் பிச்சை எடுத்து உண்பதும், உறங்குவதுமாய் இந்தப் புத்த விஹாரத்திலிருந்து காலத்தைக் கழித்து விடுவதும் நல்லதுதான். இருந் தாலும் அந்தக் கொடும்பாளூர் வீரர் களின் கண்களில் படாமல் இருக்க வேண்டுமென்று நீங்கள் எப்பொழுதும் புத்தர் பெருமானை வேண்டிக் கொண் டிருக்கவும் வேண்டியதுதான். கலங்க மாலரையரே, நான் பூதுகன்—உங்களைப் போன்ற யாரையுமே நான் எப் பொழுமே எளிதில் நம்புவதில்லை. இருக் கட்டும். உங்களிடம் நான் தனிமையில் ஒரு விஷயம் பேசவேண்டும். கொஞ்சம் வெளியே வந்தால் பேசலாம்'' என்று சொன்னுன். கலங்கமாலரையரும் அவ னைப் பின்தொடர்ந்தார்.

ஐந்தாம் அத்தியாயம்

முகம் கறுத்தது!

பூதுகனும் கலங்கமாலரையரும் அந்தப் புத்த விஹாரத்தை விட்டு வெளியே வந்தபோது எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சம்பாதி வனம் என் னும் அவ்வழகிய மலர்ச் சோலையே இருளில் அழுந்திக் கிடப்பது போல் இருந்தது. சிறிது நேரத்துக்கு முன் அடித்த பெரு மழை ஓய்ந்துவிட்டாலும் வானத்தில் இருள் மேகங்கள் முட்டி மோதிக்கொண்டுதானிருந்தன. கடலில் எழும் அலையோசையின் பேரிரைச்சல் அடங்குவதும் பிறகு அவை எழுவதும் போல் விட்டு விட்டுக் கேட்டுக்கொண் டிருந்தன. கலங்கரை விளக்கின் ஒளி கெட்ட எண்ணங்கள் சூழ்ந்த மனத்தி லும் சிறிது நல்ல ஒளியை எடுத்துக் காட்டுவது போல் ஒரே நிலையில் பிரகா சித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் அந்த இருளில் ஒரு பெரிய மரத்தடியை அடைந்தனர். பரவி யிருந்த பெருங் கிளைகளின் அடர்த்தி யினுல் அவ்விடம் மாத்திரம் மழை ஈரம் படாமல் இருந்தது. ''இப்படி உட் கார்ந்து பேசலாமே?''என்ருன் பூதுகன்.

''சரி'' என்று சொல்லி அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தார் கலங்கமாலரை யர். காற்று சிலுசிலுவென்று அடித்துத் துணியால் போர்த்தி யிருக்கும் தேகத் தையும் தொட்டுச் சிலிர்க்க வைத்தது.

பூதுகன் மெதுவாகப் பேசினுன்: ''உண்மையாகவே அரசியல் நோக்கம் கொண்டவர்களுக்கு மாறுவேடம் பூண்டு தங்கள் காரியத்தில் வெற்றி காண்பது தர்ம விரோதமாகாது. நான் ஒரு நாஸ்திகவாதி. நான் பெருத்த மத வைரியைப் போலக் காணப் பட்டாலும் அரசியலில் எப்பொழுதும் ஒரு கண் உடையவன். நான் உங்கள் கொள்கைக்கு விரோதமானவன் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் உங்களைத் தனி யாக அழைத்தேன். சிதைந்து அழிந்து போன சோழ சாம்ராஜ்யத்தை மறு படியும் நிலைநிறுத்தி இந்த நாட்டை ஆள வேண்டும் என்று நினைக்கிருர்கள் சிலர். அது உங்களுக்குப் பிடிக்காத விஷயம் — இல்லையா?'' என்ருன்..

இந்த இருளில் கலங்க மாலரையரின் முகம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் அவர் விடும் பெருமூச்சு அவருடைய மனக்கொதிப்பை எடுத்துக் காட்டுவது போல் இருந்தது. அவர் மெதுவான குரலில், எனக்கு இந்த எண்ணம் எல் லாம் இப்பொழுது இல்லை. கருணைக்கட லான புத்தரின் திருவடிகளை நம்பிவந்த எனக்கு மறுபடியும் அத்தகைய எண் ணங்களெல்லாம் எழாமலிருக்க வேண்டு மென்றுதான் பிரார்த்திக்கிறேன். பாண் டியர்களின் கையும், பல்லவர்களின் கையும் ஓங்கி நிற்கும் இந்தத் தருணத் தில், 'இந்த நாட்டை யார் ஆண்டால் என்ன?' என்ற எண்ணம்தான் எனக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. நான் தஞ்சையில் முத்தரையர்களுக்காகப் பட்டபாடுகள் போதும். சோழர்கள் ஆண்டாலென்ன? முத்தரையர்கள்

ஆண்டால் என்ன? யாராய் இருப்பினும் பாண்டியர்களுக்கோ, பல்லவர்களுக்கோ அடிமையாக இருக்க வேண்டியவர்கள் தானே? இதை மாபெரும் சாம்ராஜ்யமாக்கி விடலாம் என்று யார் நினைத்தாலும், அது வெறும் கனவாகத்தான் முடியும். பூதுகா! என்னை விட்டு விடு. இதைப்பற்றிப் பேசி என் மனத்தைக் குழப்பாதே. நான் இன்று அடைந்துள்ள நிலையைப் பார்த்து என்னை ஏமாற்றிப் பயமுறுத்துவதற்கு முயலாதே. நீ இன்று சோழ வம்சத்தினருக்கு எதிரி என்று அறிந்ததினால் சந்தோஷம் அடைந்து விடமாட்டேன். அன்பையும் அஹிம்சையும் கடைப்பிடித்து ஒழுகும் துறவு மார்க்கத்தில் ஈடுபட்டுள்ள என்னுடைய பாதைகள் எல்லாம் இப்பொழுது வேறாகத்தானே இருக்கும்?'' என்றார் கலங்கமாலரையர்.

''மாலரையரே! நீங்கள் இன்று புத்த சங்கத்தில் சேர்ந்து துறவு மார்க்கத்தில் ஈடுபட்டு விட்டீர் என்பதை நான் அறியாமலில்லை. ஆனால் ஒரு மனிதனுக்கு ஏற்பட்ட தோல்வி நெஞ்சில் ஆழப் பதிந்த வடுப்போல என்றும் மறையாது இருக்கும் என்று தான் நினைக்கிறேன். எனக்கு உங்கள் வார்த்தையில் நம்பிக்கை இல்லை என்று அர்த்தமில்லை. அரசியல் நோக்கம் கொண்டவர்கள் பளிச்சென்று தங்கள் உள்ள நிலையை எவரிடமும் சொல்லி விடமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். அதுவும் உங்களைப் போன்ற ஒரு சாம்ராஜ்யத்தையே ஆக்கவும் அழிக்கவும் திறனுடையவர்களின் மனப்போக்கு எப்படிப்பட்டதாய் இருக்கும் என்று எனக்குத் தெரியாதா? தாங்கள் என்னிடம் எதையும் மறுப்பதால் பலன் ஏதுமில்லை. நீங்கள் செய்த சதிச் செயலுக்காக உங்களைப் பழி வாங்கக் கொடும்பாளூர் இருக்குவேளிர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதும் எனக்குத் தெரியும். அவர்களிட மிருந்து நீங்கள் தப்புவதற்கு இந்த மார்க்கம் தான் சரியானது என்பதைக் கண்டு பிடித்ததுதான் உங்கள் புத்திசாலித்தனத்துக்குச் சிகரம் வைத்தாற்போலிருக்கிறது. ஆனால் மற்ற நகரங்களைக் காட்டிலும் இந்தப் பூம்புகார் நகரத்தில் தான் பழைய சாம்ராஜ்யப் பித்துக் கொண்ட உளவாளிகள் அதிகமாகத் திரிந்து வருகிறார்கள் என்பதை மாத்திரம் நீங்கள் மறந்து விடக் கூடாது'' என்றான் பூதுகன்.

இதைக் கேட்டதும் கலங்கமாலரையர் ஒரு கணம் திகைத்து நின்றார். அடுத்த கணம் அவருடைய கம்பீரமான முகம் கலங்கிக் கறுத்தது. (தொடரும்)

இலக்கிய விழா

இந்த ஆண்டு பொங்கல் நன்னாளன்று எட்டுத் திசைகளிலும் உள்ள தமிழ் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும் திருவிழா சென்னை மா நகரில் உள்ள 'செனட்' மன்றத்தில் நடைபெற்றது. அவ் விழாவில் தமிழன்பர்களும், அபிமானிகளும், பிரமுகர்களும், பேரறிஞர்களும், எழுத்தாளர்களும், கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் நாலாவது தொகுதி அப் பேரவையில் அரங்கேற்றப்பட்டது.

தமிழ் ஆட்சி மொழியாகிவிட்ட இந்த ஆண்டில், தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் நாலாவது தொகுதி வெளி வந்திருப்பதை எண்ணி எல்லாத் தமிழ் மக்களும் பெருமையடையலாம். இந்தத் தொகுதி உருவாவதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் பல்லாயிரக்கணக்கான பொருள்களைப் பற்றியெல்லாம் எழுதியிருக்கிறார்கள். விஞ்ஞானம், வரலாறு, இலக்கியம், கணிதம், ஆராய்ச்சி, கலை, சட்டம் ஆகிய பல துறைகளுக்கு வேண்டிய கலைச் சொற்கள் கொண்ட கலைக் களஞ்சியத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த உத்தமத் திருப்பணியைச் செய்து வரும்தமிழ் வளர்ச்சிக் கழகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.


தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இந்தத் தமிழ் இலக்கியத் தொண்டுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் முறையில் சர்க்கார் ஒரு நல்ல காரியம் செய்ய முன் வந்திருக்கிறது என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியைப் பொங்கல் பொன்னாளில் கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அறிவித்தார். தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்கு வருஷந்தோறும் பரிசுகள் வழங்கி வருகிறார்கள் அல்லவா? நூல்களைப் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் வெளியாகும் சிறந்த நூலுக்கு ஐந்நூறு ரூபாய் வீதம் தற்போது பரிசு வழங்கி வருகிறார்கள். இனிமேல் இருபது பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் வெளியாகும் சிறந்த தமிழ் நூலுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து மட்டுமின்றி, உலகம் முழுவதிலு மிருந்தும் மேற்படி பரிசுத் திட்டத்துக்குத் தமிழ் நூல்கள் அனுப்பி வைக்கலாம்.

தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர் திரு பெரியசாமி தூரன் பத்தாம் ஆண்டு அறிக்கையை வாசித்தார். விவசாய மந்திரி திரு எம். பக்தவத்சலம் கலைக் களஞ்சியத்தின் நான்காவது தொகுதியை வெளியிட்டுத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். திரு டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் தலைமைப் பேருரை நிகழ்த்திய பின் நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் புதிய பரிசுத் திட்டத்தைப் பிரகடனம் செய்தார். பிறகு, பரிசு பெற்ற நூல்களின் ஆசிரியர்களுக்குச் சென்னை கவர்னர் கனம் ஏ. ஜே. ஜான் பரிசுகள் வழங்க விழா இனிது நிறைவேறியது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற எழுத்தாளர்களை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற எழுத்தாளர்கள்




நாவல் அகிலன்



வானவியல்: ஏ. கந்தமூர்த்தி



வரலாறு:
கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார்




கட்டுரை: மு. வரதராசனார்



ரசாயனம்:
சோ. சிவபாதசுந்தரம்



சிறுவர் இலக்கியம்:
எம். எல் சபரிராஜன்



சிறுவர் இலக்கியம்:
அழ. வள்ளியப்பா

வட்ட மேஜை

பொங்கல் மலர்

'கல்கி' பொங்கல் மலரைப் பார்த்து நான் அடைந்த சந்தோஷத்தை எப்படிச் சொல்வது? பலவகையிலும் அற்புதமான மணத்தோடு மலர் திகழ்கிறது. இளம் எழுத்தாளர்களுக்குக் 'கல்கி' வரப்பிரஸாதம் என்பதில் ஐயமில்லை. 'பரிசு பெற்ற எழுத்தாளர்கள்' என்பதில் அவ்வளவு ஊக்கப்படுத்தி எழுதியிருக்கிறீர்கள். "இலக்கிய விமரிசனத்தில் சகிப்புத்தன்மை காட்டுவது இலக்கியப் பண்பாகும்" என்று தாங்கள் எழுதியிருப்பதை எழுத்துலகம் நன்றாக ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

'கல்கி'யின் வளர்ச்சி தமிழ் எழுத்தாளர்களின் வளர்ச்சியேயாகும்.

புதிய தொடர்கதையான 'மாலவல்லியின் தியாகம்' மகத்தான, நுட்பமான ஒரு உலகத்தைக் கண் முன்னே விரியவிட்டுக் கொண்டு அற்புதமாக ஆரம்பமாகியிருக்கிறது. நவீனமான தேரின் சகட ஒலி போன்ற அழகு நடை. பட்டினப் பாக்கத்து முத்துக்கடை அப்படியே கண் முன்னே நிற்கிறது. திரு கி. ரா. கோபாலன் அவர்களுக்கு நன்றி.

திரு பகீரதனின் ஈழநாட்டுப் பிரயாணமும், திரு சாவியின் கட்டுரையும் பேராசிரியர் கல்கியின் பேனா முனை தங்கள் காரியாலயத்தில் ஓங்கி வளர்ந்து வருகிறது என்பதைத் தெரிவிக்கின்றன. கடல் கண்ட கனவின் ஜீவனுள்ள நடையும், தத்துவ விளக்கங்களும் மெய் சிலிர்க்க வைக்கின்றன. கலைஞர் மணியத்தின் அட்டைப் படம் வெகு அருமை.

திருச்சி
12—1—57 எஸ். சங்கரமூர்த்தி

ரேடியோ வாரம்

ரேடியோ வார நிகழ்ச்சிகளில் நேற்று சென்னையில் ஒலிபரப்பப்பட்ட திரு முசிரி சுப்ரமணிய ஐயர் அவர்கள் கச்சேரியை அநேகம் நேயர்கள் கேட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இவர்கள் சாரீர வசதிக் குறைவினால் இப்பொழுதெல்லாம் மேடைக் கச்சேரிகளில் அவ்வளவாகப் பங்கெடுத்துக் கொள்வதில்லை. இருந்தும், இவர் சங்கீதத்தில் என்ன சுருதி சுத்தம், அழுத்தம், வளைவு குழைவுகள், சாஹித்ய கோவை. பாவமோ, அது இவரிடம் கடன் வாங்க வேணும். சங்கராபரணத்தில் மைசூர் சதாசிவராவ் கீர்த்தனமும் பைரவியில் தீபாதருமேயும் இவர் ஒவ்வொரு கீர்த்தனம் பாடம் பண்ணுவதற்கு எவ்வளவு கவனமும் உழைப்பும் எடுத்துக் கொள்கிறார் என்பதை விளக்குகின்றன. இவ்விஷயம் நம் இளம் வித்வான்கள் கவனிக்க வேண்டியது. இவர்கள் இப்போதெல்லாம் இரண்டு கிருக்காவைப் போட்டு மந்திரம் மாதிரி ஒப்பித்து விட்டால் பிரமாதமாகப் பாடிவிட்டதாகத் தப்பாக எண்ணுகிறார்கள்.

ரேடியோ நிர்வாகிகளும் அகாடமி போன்ற சங்கீதத்தை வளர்க்கும் இதர சபைகளும் திரு முசிரியைப் போன்ற பெரிய வித்வான்களை இளம் வித்வான்கள் சார்பாகவும் ரசிகர்கள் சார்பாகவும் நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை
16—1—57 ஏ. வி. பாலசுப்பிரமணியன்

பிரயாணிகளின் அவதி!

பொதுமக்களின் குறைகளை அரசாங்கத்தின் செவிகளில் விழும்படி செய்யும் பெருமை பத்திரிகைகளையே சாரும்.

திரு ஒ. வி. அழகேசன் செங்கற்பட்டில் வாழ்ந்தவர்தான். ஆனால் இன்று தில்லியிலிருந்து செங்கற்பட்டுக்கு வந்தால் வரும் பொழுது ஸ்பெஷல் சலூனில் வருவதால், அவர் ரயில்வே நிலையங்களின் சுற்றுப்புறத்தையோ, பிரயாணத்தின் அவதியைப் பற்றியோ அறிந்து கொள்ள முடிவதில்லை.

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கல் நாட்டவோ, கட்டடம் திறக்கவோ செல்லும் இந்த ரயில்வே மந்திரி, சென்னைக்கும் திருவள்ளூருக்கும் மத்தியில் ஓடும் லோக்கல் ரயில் வண்டிகளை வந்து பார்க்கக் கூடாதா? பார்த்தால் தன் பசியே போய் விடுமே என்ற பயம் போலும்! உண்மைதான். ஒவ்வொரு பெட்டியின் ஒதுக்கப்பட்ட அறையும் அப்படித்தானே இருக்கிறது.

காலையில் புறப்பட்டு, மஞ்சள் வெய்யிலையும் பார்க்க முடியாமல் மாலையில் திருவள்ளூர் திரும்பிச் செல்லும் என்னைப் போன்றவர்கள், சுமார் 350 பேர்கள், கடந்த ஒரு வாரத்துக்குள் இரு முறைகள் தண்டவாளம் உடைந்த காரணத்தால் இரவு ஒரு மணிக்கு ஊர் போய்ச் சேர்ந்தோம். தினமும் தாமதமாகப் புறப்பட்டுத் தாமதமாகவே போய்ச் சேருகிறோம். செவ்வாய்ப் பேட்டைக்கும் திண்ணனூருக்கும் இடையே தண்டவாளத்தின் தாண்டவம் அடிக்கடி நடைபெறுகிறது. மந்திரி இக்குறையைத் தீர்க்க முன்வருவாரா?


சென்னை
12-12-56 புதுவை ரா. சுந்தரராஜு

தேவாமிர்தம்

டிசம்பர் 2ம் தேதி "கல்கி" இதழில் திரு ராஜாஜி அவர்களால எழுதப்பட்டு வரும் "ரகுபதி ராகவ" என்ற கட்டுரையைத்தான் முதலில் படித்தேன். திரு ராஜாஜி அவர்கள் அக் கட்டுரையில் கீதையின் சாராம்சத்தின் மூலமாக மனிதன் வாழ்க்கை நடத்த வேண்டிய முறையையும், பக்தர்களின் உள்ளத்தையும் மிகவும் அழகாக எடுத்துரைத்திருக்கிறார்.

சுகமும் துக்கமும் கலந்த "வாழ்வு" ஆகிய பாற்கடலிலிருந்து 'தேவாமிர்த'த்தைக் கடைந்து எடுத்து ஊட்டுகிறார். கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாகத் தாம் கற்றதையும் அநுபவத்தின் பயனையும் நம் எல்லோருக்கும் உபதேசித்திருக்கிறார். தமிழ் நாட்டு மக்கள் உயர்வான உணர்வு, கடவுள் பக்தி, உறுதியான நம்பிக்கை பெற திரு ராஜாஜியின் கட்டுரைகள் உதவி செய்திருக்கின்றன.

ஜலகாண் (E. K.)
5—12—56 வி. ராஜு


நான்
ஒருபொழுதும் அவை
இல்லாமல் இருப்பதில்லை
WILL'S'S
Berkeley


ஆ... மறுபடியும்
வெட்டிக்
கொண்டேன்!
உடனே—
'டெட்டாலை' எடு!
நோய் வரும் முன்பே
பாதுகாத்துக் கொள்ள—
'DETTOL'
DETTOL
இலவசம்


அபரிதமான
புஷ்பங்கள்!
லக்மி
டால்கம்
பவுடர்
டாடா ஸ்தாபனம்
லக்மி

குட்டிக் கதை!



தப்பிய சுண்டெலி!


அது ஒரு பெரிய ரயில்வே ஸ்டேஷன் ஆனதால் அங்கே பல டீக் கடைகளும் ஐஸ்க்ரீம் கடைகளும் நிறைய இருந்தன. ஏராளமான ஜனங்கள் பிளாட்பாரத்தில் உள்ள பலகாரங்களை வாங்கி அவசரம் அவசரமாகச் சாப்பிட்டார்கள். ஐஸ்க்ரீம் சாப்பிடுகிறவர்களும் அப்படித்தான். அவர்கள் கையில் ஐஸ்க்ரீமோடு கூடிய காகிதக் கிண்ணமும் ஒரு சின்ன மரத் துடுப்பும் இருந்தன. சாப்பிட்டவர்கள் கிண்ணத்தையும் துடுப்பையும் அருகில் இருந்த குளத்தில் விட்டெறிந்து விட்டு வண்டியில் ஏறிக்கொண்டார்கள். இந்தஜன நெருக்கடியில் தனக்கு ஏதேனும் அகப்படாதா என்று ஒரு பூனை சுற்றி அலைந்தது.

தனக்கு ஒன்றும் கிடைக்காவிட்டாலும் அந்தப் பூனையிடமிருந்து தான் தப்பித்தால் போதும் என்று ஒரு சின்னச் சுண்டெலி பதுங்கிக் கொண்டிருந்தது. பூனை, பதுங்கிய சுண்டெலியைப் பார்த்து அதைப் பிடிக்க நெருங்கியது. சுண்டெலியோ, எப்படியும் பூனையின் பார்வையிலிருந்து தப்ப எத்தனித்தது. பூனையும் கிட்டே நெருங்கி விட்டது. சுண்டெலிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றி, தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த ஐஸ்க்ரீம் கிண்ணத்தினுள் பாய்ந்து அந்தத் துடுப்பைக் கொண்டு தண்ணீரில் படகு போல் போக ஆரம்பித்தது.


ஓடி வந்த பூனை தண்ணீரில் இறங்க முடியாமல் தரையிலேயே தங்கி விட்டது. சுண்டெலி துடுப்பைப் போட்டுக் கொண்டே குளத்தைக் கடந்து அக்கரை சென்று தப்பித்தது.



சாமா




முதல் எண்ணிலிருந்து ஒவ்வொரு எண்ணைக் கோடு இழுத்துக்கொண்டே போய் நாற்பத்தாறில் முடித்தால் ஒரு நாயின் உருவம் கிடைக்கும்.



ஒரு தேசத்தில் தொண்டு கிழவரான பிச்சைக்காரர் ஒருவர், பிச்சைக்காரர்களுக்கெல்லாம் அரசராக விளங்கி வருகிறார். அவர் உத்தரவு இல்லாமல் எந்தப் பிச்சைக்காரனும் பிச்சை எடுக்கக் கூடாது. எடுத்த பிச்சையை எல்லோரும் அவரிடம் கொண்டு வந்து, அவர் இஷ்டப்படி தான் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும்.





மிருங்காவதி
சித்திரத் தொடர் கதை
முன்னொரு காலத்தில், காலநேமி, விகதபாயா என்ற இரு சகோதரர்கள் இருந்தனர். இவ்விருவரும் பாடலீபுரத்தில் கல்வி பயின்று வந்தனர். இவர்களுடைய ஆசிரியர் தேவசர்மன் தமது இரு புத்திரிகளையும் அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார். கல்வி, கேள்விகளில் தேர்ச்சி அடைந்த பிறகு இருவரும் குருகுல வாசத்திலிருந்து வாழ்க்கைப் பாதையில் திரும்பினர்......
காலநேமி, தன்னைச் சுற்றி வசிப்பவர்கள் எல்லோரும் பணம் படைத்தவர்களாயிருப்பதைப் பார்த்துப் பேராசை கொண்டு தேவியைக் குறித்துத் தவம் செய்தான். தேவி மானிட உருவில் தோன்றினாள். ②
நீ தனவந்தனாவாய்! உலகத்தை ஆளக்கூடிய மகன் உனக்குப் பிறப்பான். ஆனால் கடைசியில் நீ ஒரு கொள்ளைக்காரனால் கொல்லப்படுவாய்!
காலநேமி தனவந்தனானான். சில தினங்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். தேவியின் அருளால் பிறந்த குழந்தைக்குத் தேவதத்தன் என்று பெயர் சூட்டினான். ③
அச்சிறுவன் பெரியவனானவுடன் வில்யுத்தம் மல்யுத்தம் முதலிய கலைகளில் நிகரிலாத் தேர்ச்சி பெற்று விளங்கினான். ④
காலநேமி


5
காலநேமியின் தம்பி விகதபாயா
வின் மனைவியைத் திடீரென்று
பாம்பு கடித்ததால் இறந்து
விட்டாள். அந்தத் துயரம்
தாங்காத விகதபாயா பல
புண்ணிய ஸ்தலங்களுக்கு
யாத்திரை சென்றான்.
6
மாலவ நாட்டின் மன்னன் வல்லபசக்திக்கு
ஒரு மகன் இருந்தான். அவனுக்கு விக்கிரமன்
என்று பெயர். தேவிதத்தனின் கல்வித்
திறமையையும் வில்வித்தையையும் கண்ட
மாலவ நாட்டு மன்னன் அவனைத் தன் மகன்
விக்கிரமனுடைய தோழனாக்கினான்.
7
மமதை பிடித்த இளவரசனை விக்கிரம
னுடன் சேர்ந்து வாழ்வது தேவிதத்தனுக்கு
மிகவும் கஷ்டமாயிருந்தது.
8
தேவிதத்தனுடன் பலசாலிகள்
பலர் நண்பர்களாயினர்.
தக்கோணத்தில் தேவிதத்தன்
மந்திரி குமாரர்கள் சிலரை
யுத்தத்தில் வெற்றி கொண்டான்.
9
ஒரு நாள் தேவிதத்தனும் அவன் நண்பர்
களும் கங்கைநதிக் கரைக்கு விளையாடச்
சென்றனர். அச்சமயம் இளவரசனின்
நண்பர்கள் விளையாட்டாகத் தேவிதத்தனை
அரசனாக முடி சூட்டிக் கொண்டாடினார்கள்.
அதைக் கண்ட இளவரசன் விக்கிரமன்
ஆத்திரமடைந்து தேவிதத்தனை
மல்யுத்தத்திற்கு அழைத்தான்.
10
மல்யுத்தப்போரில் இருவருக்கும்
பலமான போட்டி நடந்தது.
இளவரசன் தோல்வியுற்றான்.
தொடரும்
விக்கிரமன்

இளவரசியின் ஆணை

காஷ்மீர் அரசருக்கு வேட்டையாடுவதில் பிரியம் அதிகம். ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்றார் அரசர். ஒரு புலியைக் கண்டு, அதன் மீது அம்பைக் குறி பார்த்து எய்தார். ஆனால் அவர் குறியிலிருந்து தப்பிய புலி காட்டுக்குள் பாய்ந்தோடியது. ஆனால் அரசரோ அதைத் தீர்த்துக் கட்டாமல் விடுவதில்லை என்று பின்தொடர்ந்தார். வெகு தூரம் அவர் ஓடினார். புலி எங்கேயோ அடர்ந்த புதருக்குள் பாய்ந்து விட்டது.

கடைசியில் அவர் ஒரு அழகிய நந்தவனத்துக்கு வந்து சேர்ந்தார்.

அந்தப் பூஞ்சோலையில் பேரழகு படைத்த ஒரு மங்கையைக் கண்டதும் அவர் உள்ளம் இன்பத்தால் நிறைந்தது.

'பெண்ணே! உன்னைப் போல அழகிய நங்கையை மணந்து கொள்ள வேண்டுமென்பதே என் விருப்பம்'' என்று அரசர் தம் ஆசையைத் தெரிவித்தார்.

ஆனால் அந்த எழில் மங்கை, ''அப்படியா! ரொம்ப சந்தோஷம்! ஆனால் நான் உங்களைப் போல் ஒருவரை மணந்து, பிறகு என் குமாரன் உங்கள் மகளை மணக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்!'' என்றாள் கலகல வென்று நகைத்துக் கொண்டே.

இந்தத் துடுக்கான பதில் காஷ்மீர் அரசரைத் தூக்கி வாரிப் போட்டது. பலத்த சிந்தனையோடு அரசர் நந்தவனத்தை விட்டு வெளியேறினார். ஆனால் அவர் உள்ளம் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. நந்தவனத்தை விட்டு வெளியே வந்ததும் அங்கிருந்த ஒருவனிடம், அவள் அந்த மலைநாட்டு இளவரசி என்பதையும், அவள் அடிக்கடி நந்தவனத்துக்கு வருவது வழக்கமென்றும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இதையறிந்ததும் காஷ்மீர் அரசர் அந்த அழகிய இளவரசியை எப்படியும் மணக்க நிச்சயித்து விட்டார். திருமணமும் நடந்தேறியது. அவளுக்குத் திருமணத்தன்று அழகிய மோதிரமும் ஓர் அழகிய கைக்குட்டையும் காஷ்மீர் அரசர் கொடுத்தார். ஒரு வாரம் இளவரசியோடு இன்பமாகக் காலங் கழித்து விட்டு மன்னர் காஷ்மீருக்குத் திரும்பினார். ஆனால் அரசர் அதற்குப் பிறகு அவளை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அந்த இளவரசியின் பெற்றோர் அவளைக் கணவனிடம் சேர்க்கச் செய்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.



அன்று இளவரசி காஷ்மீர் அரசனிடம் துடுக்காகப் பேசியதுதான் அவர் பராமுகத்துக்குக் காரணம் என்று அவள் பெற்றோர்கள் கருதினர்.

ஆயினும் இளவரசி ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகும் நற்செய்தி கேட்டு அவள் பெற்றோர்கள் மகிழ்ந்தனர். அந்தக் குழந்தையின் காரணமாகவாவது பிரிந்த தம்பதிகளைச் சேர்த்து வைத்து விடலாம் என்று இளவரசியின் தாய் தந்தையர் கருதினர்.

குறிப்பிட்ட நாளில் குழந்தை பிறந்தது. அந்த அரசகுமாரனுக்கு 'சபராங்' என்று பெயர்

சூட்டினர். அரசகுமாரன் நாளொருமேனி யும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து அறிவிலும் படிப்பிலும் சிறந்து விளங்கி ஞன். குதிரையேற்றம், யானையேற்றம், போர்ப் பயிற்சி ஆகிய கலைகளிலும் அவன் சிகரற்று விளங்கினன்.

எல்லாக் கலைகளையும் சபராங் கற்று முடிந்த பிறகு அவனுக்குத் திருட்டுக் கலையையும் கற்பிக்க விரும்பினுள் அவன் தாயார். அதனுல் அந்த நாட்டில் உள்ள பக்காத் திருடனை அழைத்து அவ னுக்குத் திருட்டு வித்தையைக் கற்றுக் கொடுக்கச் செய்தாள்.

ஒரு நாள் சபராங் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! என் அப்பா யார்?" என்று கேட்டான்.

"அப்பா! நீ காஷ்மீர் அரசரின் புதல்வன். ஆனுல் நான் முறைப்படி அவரை மணந் தும் என்னை அவர் ராஜ்யத்துக்கு அழைத் துச் செல்லவில்லை. என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆகவே, புத்திசாலியான நீ உன் தகப்பனுரின் நாட்டுக்குச் சென்று நீ உனது ஆற்றலினுல் அரசரின் மதிப் பைச் சம்பாதிக்க வேண்டும். உன் சாமர்த்தியத்தை மெச்சி அவர் மகளை மணம் புரிந்து வைக்கும்படி செய்து விட வேண்டும். பிறகு எனக்குத் தெரிவித்தால் நான் அரச ருக்கு அவர் தவறை எடுத் துக் காட்டி அவரை வழிப் படுத்துகிறேன்" என்ருள் சபராங்கின் தாயார்.

"அம்மா! நான் முழு முயற் சியும் செய்து இதில் வெற்றி கொள்கிறேன்" என்று விடை பெற்ருன் சபராங்.

சபராங் காஷ்மீருக்கு வந்து சேர்ந்ததும் முதலில் அரச காவலாளிகளுடன் சிநேகம் செய்து கொண் டான். அரச வாயில் காப் போனுக்குச் சபராங் மீது அளவுகடந்த பற்றும் அன்பும் ஏற்பட்டு விட்டன. அவன் சபராங்கை அரண்மனையில் வேலையாளாக நியமித்து விட் டான். சபராங் திறமையினு லும் சாமர்த்தியத்தினுலும் தனது வேலையில் படிப்படி யாக முன்னேறினுன்.

இச்சமயத்தில் பக்காத் திருடனிடம் தான் பயின்ற வித்தையைக் காட்டுவதற்கு இதுதான் தருணம் என்று கருதி, சபராங் செயலாற்ற முற்பட்டான். ஒவ்வொரு நாள் இரவும் வெகு சாமர்த்தியமாக நகரத்திலுள்ள மாளிகைகளில் திருடுவதற்கு ஆரம்பித் தான். நகரத்தில் பல மாளிகைகளில் திருடி அந்தப் பொருள்களையெல்லாம் வயலில் ஒரு இடத்தில் புதைத்து வைத் தான். இரவில் இந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அவன் பகலில் அரண்மனை வேலையை மிகவும் ஒழுங்காகவே செய்து கொண்டு வந்தான்.

நகரக் காவலன் எப்படியாவது திருட னைப் பிடிக்கப் பல வழிகளில் முயற்சி செய்தான். பல மாறு வேடங்களில் சென்று பகலும் இரவும் கண் மூடாமல் தன் காவலாளிகளுடன் தேடிப் பார்த் தான். ஆனுல் இரவில் திருட்டுப் போவது மட்டும் சிறிதும் குறையவே இல்லை.

அன்று நகரக் காவலன் கால் கடுக்க நகர் முழுதும் சுற்றி வந்தான். நதியோரத்தி லிருந்த நந்தவனத்தில் ஒரு உருவம் பதுங்கிப் பதுங்கிப் போய்க்கொண்டிருப் பதைப் பார்த்து வேகமாக அணுகி, அதன் கையைக் கெட்டியாகப் பற்றினுன். அவன் ஒரு பெண்மணி.



"என்னை விட்டு விடு! நான் ஒரு ஏழைத் தோட்டக்காரனின் மனைவி. வீட்டில் அதிக வேலையிருந்ததால் இப்பொழுது தண்ணீர் இறைப்பதற்காக வந்தேன்" என்று கதறினாள் அந்தப் பெண்மணி.

"இங்கே ஒரு திருடன் நடமாடுகிறானே, அவனை உனக்குத் தெரியுமா?"

"ஓ! தெரியுமே! என்னை அடித்து விடுவானோ என்ற பயத்தில் நான் ஓலமிடவில்லை. என் கணவனிடம் புகை பிடிப்பதற்குக் கேட்க வந்தான். நீ இங்கேயே சிறிது நேரம் காத்திருந்தால் அவனைப் பிடித்து விடலாம்! அவன் ஒரு வேளை திரும்பியும் இங்கேயே வரலாம்!" என்றாள் அந்தப் பெண்மணி.

"அப்படியா! நல்ல சேதி! ஆனால் நான் எப்படி இங்கேயே நின்று பிடிக்க முடியும்?" என்றான் நகரக் காவலன்.

"சரி! இந்தா! இந்தத் துணியை முக்காடு போட்டுக் கொண்டு தண்ணீர் இறைப்பதுபோல் பாவனை செய்! பிடித்து விடலாம்!" என்றாள் அவள்.

நகரக் காவலன் தன் உடையைக் கழற்றிவிட்டு அந்தப் பெண்மணி கொடுத்த துணியை முக்காடிட்டுக் கொண்டு தண்ணீர் இறைக்க ஆரம்பித்தான்.

அதுதான் சமயம் என்று அவள் காவலனின் உடையை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி விட்டாள். அவள் வேறு யாருமல்ல; சபராங்கே அந்த வேஷத்தில் வந்தான்!

மறுநாள் காலையில் திருட்டு பற்றிய செய்தியும், நகரக் காவலன் ஏமாற்றப் பட்ட செய்தியும் அரசருக்குத் தெரிய வந்தன. திருடனின் சாமர்த்தியம் அவனுக்கு வியப்பையும் திகைப்பையும் அளித்தது. ஆனால் அரசர் நகர மக்களின் பயத்தைப் போக்க வழி தேடினார். மந்திரியை அழைத்து வந்து யோசனை கேட்டார். மந்திரி தானே திருடனைப் பிடித்துவருவதாகச் சொல்லிச் சென்றான்.

அடுத்த நாள் காலை பலர் அழுது கொண்டே வந்து தங்கள் உடைமைகளை இழந்ததைப் பரிதாபமாக அரசரிடம் வந்து முறையிட்டனர். மந்திரியினாலும் திருடனைப் பிடிக்க முடியவில்லை.

கடைசியில் அரசர் கீழ்க்கண்டவாறு பிரகடனம் செய்தார். 'திருடனைக் கண்டு பிடிப்பது சிரமம். யாராவது திருடனைப் பிடித்துக் கொடுத்தால், அல்லது திருடன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு தீய தொழிலை விட்டு விடுவதாக வாக்களித்தால் இந்த நாட்டில் பாதியையும், என் மகளையும் அவனுக்கு மணம் முடித்து வைக்கிறேன்' என்று அறிவித்தார்.

"அரசே! இதோ நான்தான் திருடன். இத் தீய தொழிலில் ஈடுபட்ட என்னை மன்னிக்க வேண்டும். நான்தான் திருடியவன் என்பதை நிரூபிக்கிறேன். திருட்டுக் கொடுத்தவர்கள் அனைவரையும் நாளைக் காலையில் நகரத்துக்கு வெளியே யுள்ள வயலுக்கு வரச் சொல்லுங்கள். அவர்களுடைய பொருள்களை ஒன்று விடாமல் கொடுத்து விடுகிறேன்..." என்று சபராங் தைரியமாக அரசன் முன் வந்து கூறினான்.

சபையிலுள்ள அனைவரும் அதிசயத்தில் சிலையாகிப் போய் நின்றார்கள்.

அரசர் தாம் வாக்களித்தபடியே சபராங்குக்குத் திருமணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்.

இச்சமயத்தில் சபராங் அரசரை அணுகி, "அரசே! என் திருமண விஷயமாக என் தாயாரின் அனுமதியையும் பெற வேண்டும்" என்றான். உடனே அரசர் அதற்கு இசைந்து அவன் தாயாரை ராஜோபசாரத்தோடு அழைத்து வரத் தூதுவர்களை அனுப்பினார்.

செய்தியைக் கேட்டதும் சபராங்கின் தாயார் அளவற்ற மகிழ்ச்சியோடு விரைந்தோடி வந்தாள்.

"அம்மா! மிகுந்த புத்திசாலியான உங்கள் பிள்ளைக்குப் பெண் கொடுக்க எண்ணியிருக்கிறேன். தங்களுக்குச் சம்மதந்தானே?" என்றார் அரசர்.

"அரசே! தங்கள் அன்புக்கு நன்றி. ஆனால் இந்தத் திருமணம் நடைபெறுவதற்கில்லை" என்றாள் சபராங்கின் தாயார்.

"ஏன்?"

"அரசே! ஒருவருடைய மகன் அவருடைய மகளையே மணம் முடிப்பது என்பது சாத்தியமா? இது உலக நியதிக்கு விரோதமாயிற்றே!"

"எனக்குத் தாங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே?" என்றார் அரசர்.

"ஆம்! உங்களுக்குப் புரியாதுதான். அதற்குள் என்னை நீங்கள் மறந்து விட்டீர்கள்! இந்த மோதிரமும் கைக் குட்டையும் என்னை யாரென்று கூறும். அவை உங்களுடையவைதான். நான் இவைகளுக்குப் பதில் கொடுத்த மோதிரத்தைக் கொடுத்து விடுங்கள்!" என்று கூறி மோதிரத்தையும் கைக்குட்டையும் அரசரிடம் கொடுத்தாள்.

பிறகு சபராங்கின் தாயார் நந்தவனத்தில் காஷ்மீர் அரசரைச் சந்தித்ததிலிருந்து நடந்தவற்றை யெல்லாம் விவரமாகக் கூறினாள். முதல் சந்திப்பில் நந்தவனத்தில் அவள் விரும்பிய அந்த விபரீத ஆசையினால் எத்தனை துன்பங்களும் கஷ்டங்களும் சேர்ந்து விட்டன! காஷ்மீர் அரசர் தம் தவற்றை உணர்ந்தார். சபராங்கின் தாயாரை அரசர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். 'சபராங்'கைப்பட்டத்து இளவரசனாக்கி, 'காஷ்மீர் அரச பீடத்துக்கு வாரிசு' என்றும் அறிவித்தார். -குண்டுமணி

அவள் எழிலுருவம்...




ஆகா, அவளுடைய சௌந்தர்யத் தோற்றமே தோற்றம், எழில் நடையே நடை! சருமப் பொலிவும் சேர்ந்து கொண்டதால் அவள் அழகு அதிகரித்துக் காணுகிறது.

...அவளின் மென்மையான மலர் போன்ற, மேனியின் ரகசியம் மேட்டூர் சந்தன சோப் தான். சந்தனத்தின் உண்மையான நறுமணம் கமழும் மேட்டூர் சந்தன சோப்பின் நுரை சருமத்தினுள் ஊடுருவிச் சென்று, பளபளப்பையும் காந்தியையும் தருகிறது.

மேட்டூர் சந்தன சோப்பின் நறுமண சூக்ஷ்மம் அதன் கலவையில் தான் இருக்கிறது. கலவையே அதன் தனிச்சிறப்புக்குக் காரணம்.


மேட்டூர் சந்தன சோப்பின் புதிய பெட்டியைப் பார்த்து, மேட்டூர் சந்தன சோப் என்று கேட்டு வாங்குங்கள்.



தயாரிப்பு :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை **சேலம் ஜில்லா**

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் : சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.




யோசித்துப்பாருங்கள்

மட்டரக பிளேடுகளில் பணத்தை வீணுக்காதீர்கள்

ஒரே ஒரு தடவை, அதுவும் நன்றாகக்கூட க்ஷவரம்செய்ய உபயோகிக்கமுடியாத பிளேடுகளில் பணத்தை செலவிடலாமா. அதைவிட சிறிதளவு அதிகப் பணத்திற்கு ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் கிடைக்கும்போது மட்ட ரக பிளேடுகளில் பணத்தை வீணுக்குவது சரியல்ல.

வெகு நாட்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டபோதிலும் ஒவ்வொரு ஸெவன் ஓ'க்ளாக் பிளேடும் மழுமழுப்பான க்ஷவரத்தையே கொடுக்கிறது. அவைகள் வெகுநாட்களுக்கு உழைக்கின்றன ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளை வாங்குவதால் நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு அதிக பெருமானம் அளிக்கும் சிறந்த பிளேடுகளை அடைகிறீர்கள்.



இன்றே

7 o'clock BLADES

ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளை வாங்குங்கள்

காந்திமதியின் ரத்தினம்

ஆனந்தி



திருவாளர் கனகரத்தினம் ஆத்திரத்தோடு எழுந்து வராந்தாவுக்கு வந்தார். தம்முடைய நிம்மதியைக் குலைக்கும் சத்தம் வரும் திசையை நோக்கினார். அவருடைய வீட்டுக்கு எதிரில் இருந்த மைதானத்தில் பத்துப் பதினைந்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பப்பா! அவர்கள் போட்ட சத்தத்தில் திருவாளர் கனகரத்தினத்தின் வீடே இடிந்து விடுமோ என்று தோன்றியது.

கனகரத்தினம் எவ்வளவு கத்தியும் அந்தச் சிறுவர்கள் திரும்பிப் பார்க்காமல் விளையாடிக் கொண்டிருந்தார்கள் ஆதலால் அவர் தமது கைத்தடியைத் தேடி எடுத்துக்கொண்டு தம்முடைய அறையிலிருந்துகிளம்பி அந்தச் சிறுவர்களைத் துரத்துவதற்காகச் சென்றார்.

"உடனே இங்கிருந்து ஓடி விடுங்கள். இங்கு சத்தம் போடக் கூடாது. வேறு எங்கேயாவது தொலைந்து போங்கள்!" என்று உரத்த குரலில் கத்தினார் கனகரத்தினம்.

"இங்கே விளையாடக்கூடாது என்று கூற உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று துடுக்காகக் கேட்டுவிட்டுத் தன் சகாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான் ஒரு சிறுவன். எல்லாச் சிறுவர்களும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

கனகரத்தினம் தம் கையிலிருந்த தடியால் சிறுவர்களை அடிப்பதற்குக் கையை ஓங்கினார். சிறுவர்கள் பயந்து ஆளுக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தார்கள்.

திருவாளர் கனகரத்தினம் அந்தச் சிறுவர்களையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, வீட்டுக்குள் திரும்பிச் சென்றார். தம்முடைய அறைக்குச் சென்று தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

ஆனால் ஏனோ அந்தப் புத்தகத்தில் எழுத்துக்களுக்குப் பதிலாக அந்தத் துடுக்குச்சிறுவனின் குறும்பு கேசத்துடன் கூடிய முகம் தோன்றியது. அவன் துடுக்காகப் பதில் சொல்லிவிட்டுத் தன் நண்பர்களைப் பார்த்துக் கண் சிமிட்டியதை நினைக்கும் போதெல்லாம் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்த வாண்டுப் பயலுக்கு என்ன விதமாகத் தண்டனை கொடுக்கலாம் என்று தம் சிந்தனை ஓடுவதைக் கண்டு பிடித்து, அதற்கு அவரே முற்றுப்புள்ளி வைத்து விட்டுத் தம்முடைய வேலையைத் தொடர வேண்டியிருந்தது.

ஒருநாள் கனகரத்தினம் வெளியே போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். கார் தமது வீட்டு வாசலை நெருங்கும்போதே சிறுவர்களின் ஆரவாரம் கேட்டது.

காரிலிருந்து அவர் இறங்கிப் பார்த்த போது சிறுவர்கள் அவருடைய வீட்டுத் தோட்டத்தில் எதையோ தேடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

நேரே அந்தக் குறும்புச் சிறுவனிடம் சென்றார். ஒரு புதருக்கு அடியில் குனிந்து கொண்டிருந்த அவன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"உன் பெயர் என்ன?"

"கனகரத்தினம்!"

திருவாளர் கனகரத்தினத்துக்கு அந்தச் சிறுவன் வேண்டுமென்றே அப்படிப் பதில் சொல்கிறானா, அல்லது உண்மையாகவே சொல்கிறானா என்று புரியவில்லை.

"நான் என் பெயரைக் கேட்கவில்லை. உன் பெயர் என்னவென்று கேட்டேன்."

"ஓ! உங்கள் பெயரும் கனகரத்தினமா! அது எனக்குத் தெரியாது. என் பெயர் கனகரத்தினம்தான். ஆனால் வீட்டில் 'சின்ன ரத்தினம்' என்றுதான் கூப்பிடுவார்கள்."

திருவாளர் கனகரத்தினத்தின் முகத்தில் அசடு தட்டியது.

"உன் வீடு எங்கேயிருக்கிறது?"

"அடுத்த தெருவில் எட்டாம் நம்பர் வீடு."

"நீங்கள் உங்கள் தெருவிலேயே விளையாடக் கூடாதா?" என்று கேட்டார்.

"எங்கள் தெருவில் கிரிக்கெட் பந்தாடுவதற்கு வேண்டிய இடம் இல்லை."

"இந்தத் தோட்டத்தில் ஏன் நீங்கள் நுழைந்தீர்கள்?"

"பந்து இங்கே வந்து விழுந்து விட்டது" என்று கூறினான் சின்ன ரத்தினம்.

அதே சமயத்தில் ஒரு சிறுவன் "பந்து இதோ இருக்கிறது" என்று கூவவே, எல்லாரும் ஓடினார்கள். அந்தச் சிறுவர்கள் கனகரத்தினம் அருமையாகப் பயிரிட்டிருந்த

மலர்ச் செடிகளையும் கொடிகளையும் மிதித்துத் துவைத்துக் கொண்டு ஓடவே ஆத்திரம் தாங்காமல் தம் அருகில் அது வரையில் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்ற 'அல்சேஷியன்' நாயை அவர் ஏவினார்.

அதுவும் குரைத்துக் கொண்டே பாய்ந்து சென்றது. சிறுவர்கள் கலவரத்துடன் இன்னும் சில பாத்திகளையும், கொடிகளையும் மிதித்துக் கொண்டு ஓடினார்கள்.

அப்போது சிறுவன் கனகரத்தினம் நாய்க்குப் பின்னால் ஓடிச் சென்று ''டைகர்! ஏ டைகர்!'' என்று கூப்பிட்டான். டைகர் குரைப்பதை நிறுத்திவிட்டு நின்றது. அவனைப் பார்த்து அன்புடன் வாலை ஆட்டியது. அவன் அதனுடைய கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கொஞ்சினான்.

இந்தக் காட்சியைக் கண்டதும் திருவாளர் கனகரத்தினத்துக்கு மனம் இளகியது. அழுகையே வந்து விடும் போலிருந்தது.

'என்னுடைய நாயை நீ எப்படித் தொந்தரவு செய்யலாம்? அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்குகிறாயே? அதைத் தொடாதே'' என்று மேலுக்காகக் கத்தினார் கனகரத்தினம்.

''நான் ஒன்றும் அதைத் தொந்தரவு செய்யவில்லை. அது என்னுடைய தோழன்'' என்று சொன்னான் சின்ன ரத்தினம்.


தமது கைத்தடியால் நாயை ஒரு அடி அடித்தார் கனகரத்தினம். அது 'வீல்' என்று கத்திவிட்டு ஓடிப் போயிற்று. சின்ன ரத்தினத்தின் கண்களில் நீர் ததும்பியது. ''மாமா! உங்களுக்குக் கோபம் வந்தால் என்னை அடியுங்கள். பாவம்! அந்த வாயில்லாப் பிராணியை ஏன் அடிக்கிறீர்கள்?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

''வெளியே போ'' என்றுதான் அப்பொழுது கனகரத்தினத்தால் பதில் கூற முடிந்தது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் கண்ணாடி நொறுங்கும் சத்தம் கேட்கவே தம் அறையிலிருந்து எட்டிப் பார்த்தார் திருவாளர் கனகரத்தினம்.

ஒரு கண்ணாடி ஜன்னல் உடைந்து தோட்ட மெங்கும் கண்ணாடித் தூள்கள் மின்னின.

அந்த அற்புதமான காரியத்தைச் சாதித்த பெருமையுடன் சிவப்பு நிறமான கிரிக்கெட் பந்து அந்தக் கண்ணாடித் தூள்களுக்கு இடையே கிடந்தது. தோட்டத்திலோ, எதிர் மைதானத்திலோ சிறுவர்கள் யாரையும் காணவில்லை.



மிகுந்த ஆத்திரத்துடன் அந்தச் சிறுவனின் வீட்டைத் தேடி அடுத்த தெருவுக்குப் போனார் கனகரத்தி

ணம். 'அச் சிறுவன் வீட்டில் சொல்லி இதற்கு நஷ்டஈடு வாங்கி விட வேண்டும். இது அவன் வேலையாகத்தான் இருக்கும். ஒரு தரம் அப்படிச் செய்து விட்டால் பிறகு அவன் வாலை ஆட்டமாட்டான்.' இப்படி எண்ணிக் கொண்டே எட்டாம் நம்பர் வீட்டை அடைந்தார். கதவைத் தட்டியதும் ஒரு அழகிய பெண்மணி வந்து கதவைத் திறக்கவே, கனகரத்தினம் திகைத்துப் போனார்.

அந்த யுவதி "யார் வேண்டும் தங்களுக்கு?" என்று குயிலினும் இனிய குரலில் கேட்டாள்.

அவர் பதில் சொல்ல வேண்டிய அவசியத்தை முன்விட்டு, "கனகரத்தினம் என்ற பையனுடைய வீடு இதுதானே?" என்றார்.

"ஆம், உள்ளே வாருங்கள். அவன் விளையாடப் போயிருக்கிறான். வரும் நேரமாகி விட்டது."

"அவனுடைய அப்பா இல்லையா?"

"அவனுக்கு அப்பா இல்லை. தங்களுக்கு ஏதேனும் சொல்ல வேண்டுமானால் என்னிடமே சொல்லலாம்" என்றாள் அந்த யுவதி.

அதைக் கேட்டதும் கனகரத்தினத்துக்கு வெட்கமாகக்கூடப் போய் விட்டது. இந்தப் பெண்ணிடம் போயா, கேவலம், கண்ணாடிக்கு நஷ்டஈடு கேட்பது என்று தோன்றியது.

"ஒன்றும் இல்லை. இன்று அவன் என் வீட்டுக்கெதிரில் விளையாடிக் கொண்டிருந்த போது கதவில் பந்து விழுந்து தோட்டமெல்லாம் கண்ணாடி சிதறிவிட்டது. அவனுக்குக் கண்ணாடி பட்டுக் காயம் ஒன்றும் படவில்லையே என்று தெரிந்து கொள்ள வந்தேன்."

"காயம் பட்டிருக்காது. இங்கு வந்து விட்டு இப்போதுதான் போனான். கவலைப் படாதீர்கள். தாங்கள் யாரென்று இன்னும் சொல்லவில்லையே?" என்று கேட்டாள் அந்த யுவதி.

"என் பெயர் கனகரத்தினம். அடுத்த தெருவில் இருக்கிறேன்."

"ஓ! குழந்தைகூட உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். நீங்கள் வந்ததில் மிகவும் சந்தோஷம்."

தன்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பானோ என்று ஒரு பயம் எழுந்தது கனகரத்தினத்தின் உள்ளத்தில். அதை நாசூக்காக மழுப்புவதற்காக, "நான் எப்போதும் அமைதியை விரும்புபவன். அமைதி இல்லா விட்டால் எனக்கு வேலையே ஓடுவதில்லை. ஆகையினால் தான்...." என்று இழுத்தார்.

"ஆமாம்! ஆமாம்! உங்கள் வீடு மிக அழகானதென்றும், ஒரு அற்புதமான தோட்டம் இருக்கிறதென்றும், உங்கள் வீட்டு 'அல் ஸேஷியன்' நாய் தனக்கு ரொம்பச் சிநேகம் என்றும் சின்ன ரத்தினம் அடிக்கடி கூறுவான்" என்றாள் அந்த மங்கை.

கனகரத்தினத்தின் உச்சி குளிர்ந்துவிட்டது.

"நான் வருகிறேன்" என்று அவளிடம் விடைபெற்றுக் கிளம்பி விட்டார்.



போகும் வழியில்தான், 'அடாடா! அவனுடைய பெயர் என்னவென்று கூடக் கேட்காமல் வந்து விட்டோமே' என்று ஞாபகம் வந்தது அவருக்கு. கூடவே ஒரு சந்தேகமும் ஏற்பட்டது. ஒருவேளை அவள் சின்ன ரத்தினத்தின் அம்மாவோ என்னவோ? அவளைப் பற்றி நான் எதற்காக நினைக்க வேண்டும்? வீண் குழப்பங்களுக்கு மனத்தில் இடம் கொடுத்து, வேலையைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இன்னொரு சமயம் அவன் துஷ்டத்தனம் செய்தால் கட்டாயம் புகார் செய்து விடுவது என்றும் தீர்மானித்தார்.

மறுபடியும் ஒருநாள் தமது தோட்டத்திலிருந்த அருமையான பட்டு ரோஜாச் செடிகளிலிருந்த புஷ்பங்களைக் காணவில்லை. முதல் நாள்தான் அந்தப் பெங்களூர் ரோஜாச் செடிகளில் இருந்த மொட்டுகளை அவர் எண்ணிப் பார்த்துவிட்டு வந்தார். இன்று ஒரு பூ கூட இல்லாமல் வெறிச்சென்று காணப்படவே கோபத்துடன், தம் கார், நாய், தடி மூன்றையும் மறந்து கால்நடையாகவே பக்கத்துத் தெருவை நோக்கி நடந்தார்.

அங்கே சென்ற போது அந்த யுவதி தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கொண்டையில் தம் தோட்டத்துச் செடியில் பூத்த பட்டு ரோஜாக்கள் வரிசையாக விளங்கியதைக் கண்டதும், அவருக்குத் தமது ரோஜாக்களே புதிய மெருகு பெற்று விட்டதாகத் தோன்றியது. 'இவ்வளவு அருமையாக அந்தச் செடிகளைப் பாதுகாத்த பயனை இன்றே அடைந்தேன்' என எண்ணினார். பிறகு திடுக்கிட்டார்: 'ரோஜாவைத் திருடியதற்காகச் சண்டை பிடிக்க அல்லவா வந்தோம். இப்போது எவ்வாறு அதைக் கூறுவது? இவள் தன் தலையிலிருந்து அதை எடுத்துத் தூர எறிந்து விட்டால்?'

இவ்வாறு அவர் எண்ணிக் கொண்டிருக்கும் போதே, சின்னரத்தினம் அங்கே வந்தான்.

"வாருங்கள் மாமா! உங்கள் தோட்டக்காரன் கத்திரித்து எறிந்த ரோஜாச் செடிக் கிளைகளை இப்போதுதான் பொறுக்கிக் கொண்டு வந்தேன். எங்கள் வீட்டில் அதை நட்டுப் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

திருவாளர் கனகரத்தினத்துக்கு அவமானமாகப் போய் விட்டது. அந்த மூடத் தோட்டக்காரனிடம், ரோஜாச் செடிகளுக்குப் பின்னால் இருந்த புதர்களைக் கத்திரிக்கச் சொல்லியிருந்தார். அவன் இதையும் சேர்த்துக் கத்திரித்து எறிந்திருக்கிறான். 'அவன் ஒரு மூடன். அவனைவிட நான் ஒரு மகா மூடன்' என்று நினைத்துக் கொண்டே, "தொட்டிகளில் புதிதாக வரவழைத்த செடிகள் இருக்கின்றனவே. நீ கேட்டிருந்தால் அவற்றைக் கொடுத்திருப்பேனே!" என்றார்.

இப்படி அவர்கள் சிநேகம் வளர்ந்தது. அந்தப் பெண்ணின் பெயர் தேவநாயகி என்று அறிந்து கொண்டார். அவளுக்கு விவாகமாகவில்லை என்பதையும் தெரிந்து கொண்டார். தேவநாயகியும் அவர் வீட்டுக்கு வரத் தொடங்கினாள். முதலில் தோட்டம் பார்க்க வந்தாள். பிறகு அவரது புத்தக அலமாரிகளைப் பார்க்க வந்தாள். பிறகு அவரைப் பார்க்கவே வரத் தொடங்கினாள். ஒரு நாள் நேரிடையாகவே, "உங்களைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அதனால் வந்தேன்" என்று தேவநாயகி கூறியபோது திகைத்துப் போனார் கனகரத்தினம்.

"நீ என்னிடம் இவ்வளவு பிரியமாக இருப்பதற்கு என்ன காரணம்?" என்றார்.

"காரணம் இருக்கட்டும், உங்களைப் பற்றி ஒன்றுமே சொல்ல மாட்டேனென்கிறீர்களே?" என்றாள் தேவநாயகி.

தம்மைப் பற்றி யாரிடமாவது சொல்லி ஆறுதல் பெற வேண்டும் என்ற தாபம் வெகு நாட்களாகக் கனகரத்தினத்துக்கு இருந்து வந்தது. தம்மைப் பற்றிக் கண்டபடி ஊரில் பேசிக் கொள்வதையும் அவர் ஒருவாறு அறிந்திருந்தார். ஆகவே தேவநாயகி அந்த வதந்திகள் எதையும் நம்பாமல் தம்மிடமே நேரில் கேட்பது பற்றித் திருப்தியடைந்தார்.

ஒருவாறு தமது கதையைக் கூறினார்.

"நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் எல்லாரையும் போலத்தான். என்னைத் துயரமென்பதே தெரியாமல் என் தந்தை வளர்த்தார். படிப்பில் மிகக் கெட்டிக்காரனாக இருந்த நான் சீமை செல்ல விரும்பினேன். ஒரே மகனை என்னை அனுப்ப என்னுடைய தந்தைக்கு விருப்பமில்லை. என் தாயார் மாத்திரம் விவாகம் செய்து கொண்டால் தான் நான் போகலாம் என்று கண்டிப்பாகக் கூறி விட்டாள். ஆகவே என் மனத்துக்கு மிகவும் பிடித்திருந்த சிறுமியான காந்திமதியை எனக்கு மணம் செய்வித்தார்கள். காந்திமதியுடன் நான் மூன்றே மாதங்கள் தான் வாழ்க்கை நடத்தினேன். ஆனால் நாங்கள் இருவரும் அந்தக் குறுகிய காலத்துக்குள் ஒருயிரும் ஈருடலுமாக ஆகி விட்டோம். அவளை விட்டுச் சீமை செல்லக் கூட எனக்கு மனம் வரவில்லை. அவள் தான் என்னைத் தேற்றி யனுப்பினாள். நான் சீமை அடைந்ததுமே காந்திமதியிடமிருந்து கடிதம் வந்தது. தான் கர்ப்பமாக இருப்பதாகவும், குழந்தை பிறந்தவுடன் அதையும் எடுத்துக் கொண்டு சீமைக்கு வந்து விடுவதாகவும் எழுதியிருந்தாள். என்னுடைய சந்தோஷத்தைச் சொல்லி முடியாது.

நான் சீமை சென்ற எட்டாவது மாதம் காந்திமதி குழந்தை பெற்று இறந்து விட்டாளென்றும், ஆண் குழந்தை உயிரோடு இருப்பதாகவும் தந்தி வந்தது. நான் துயரம் தாளாமல் பல நாட்கள் சாப்பிடாமலும் தூங்காமலும் தவித்தேன். எனக்குக் காந்திமதியின் மரணத்துக்குக் காரணமாக இருந்த அந்தக் குழந்தையின் மீதும், என் மீதுமே வெறுப்பு ஏற்பட்டது. திரும்ப நம் தேசத்துக்கு வருவது என்ற எண்ணமே என் நெஞ்சை விட்டு அகன்று விட்டது. படிப்பு முடிந்ததும் அங்கேயே ஏதோ ஒரு வேலை கிடைத்தது. படிப்படியாக உயர்ந்து நல்ல நிலைக்கு வந்தேன். ஒரு வியாபாரக் கம்பெனியில் முதல் போட்டதும் பணக்காரனாகி விட்டேன். காந்திமதி இல்லாத வாழ்க்கை எனக்குப் பாலைவனமாகத் தோன்றியது. பத்து வருஷங்கள் அங்கே இருந்தும் மனச் சாந்தி கிடைக்கவில்லை. என் தந்தை திரும்பி வரச் சொல்லிச் சென்னையிலிருந்து

எழுதிக் கொண்டே இருந்தார். கடையில் புறப்பட்டு இங்கே வந்து சேர்ந்தேன். பெற்றோர்களுடன் என்னால் சேர்ந்து வசிக்கவே முடியவில்லை. என்னுடைய மகள் காந்திமதியின் தங்கையிடம் இருப்பதாகவும் அவனைப் போய்ப் பார்க்கும்படியும் அம்மா கூறினாள். நான் கண்டிப்பாக மறுத்து, இந்தப் பெங்களூருக்கு வந்து விட்டேன்.

எனக்குச் சிறுவர்களைக் கண்டாலே காந்திமதியின் ஞாபகம் வந்து விடுகிறது. காந்திமதி பெற்ற மகனைப் பற்றியும் நினைவு வருகிறது. அதனால் எல்லாரிடமும் எரிந்து விழத் தோன்றுகிறது. அதனால்தான் என்னை யாருக்கும் பிடிக்கவில்லை. எனக்குத் துணை என்னுடைய நாய்தான்'' என்று துயரத்துடன் கூறி முடித்தார் கனகரத்தினம்.

''நீங்கள் கூறுவது அவ்வளவு நியாயமாகப் படவில்லையே. காந்திமதி இறந்து போனதற்குக் குழந்தையின் மீது நீங்கள் கோபப்படுவது அறியாமை என்றுதான் நான் கூறுவேன்!'' என்றாள் தேவநாயகி.

இது சுருக்கென்று தைத்தது கனகரத்தினத்துக்கு. ''என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''உங்கள் மகனை நீங்கள் உடனே அழைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் அவனை வளர்ப்பதுதான் தர்மம். மகனை அநாதையாக விடுவது கொஞ்சங்கூடச் சரியில்லை.''

''எனக்குக் குழந்தைகளை வளர்க்கத் தெரியாதே. பழக்கமே கிடையாதே.''

''குழந்தைக்கு ஒரு தாயாரையும் ஏற்படுத்திக் கொள்வது.''

கனகரத்தினத்துக்கு அவளுடைய வாக்கியத்திலிருந்த பொருளைப் புரிந்து கொள்வதற்கு அதிக நேரமாகவில்லை.

''அது எப்படிச் சாத்தியம்? வேண்டாம்! என்னால் ஒரு பெண் இறந்துபோனது போதும்; அதை நினைத்தாலே எனக்குப் பகீரென்கிறது. காந்திமதி இறந்து போனபொழுது அவளுக்குப் பதினேழு வயதுதான் ஆகியிருந்தது. நான் மகா பாதகம் செய்துவிட்டேன். அதற்குப் பிராயச்சித்தமாக நான் மறுமணமின்றியேதான் இருந்தாக வேண்டும்.''

''ரொம்ப அழகாக இருக்கிறது. காந்திமதி இறந்து போனதற்கு நீங்களும் காரணமில்லை; குழந்தையும் காரணமில்லை. காந்திமதியின் ஆத்மா சாந்தியடையவேண்டுமானால் நீங்கள் அவள் மகனை உடனே அழைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.''

''ஆனால் எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்? என்னைப் பற்றிப் பலவிதமாக வதந்திகள் வேறு உலாவுகின்றனவே!''

''அதற்கு ஒரு பெண் தயாராக இருந்தால் நீங்கள் சம்மதித்து விடுவீர்களா?''

''அதெப்படி முடியும்? என் இதயத்தில் குடிகொண்டிருக்கும் பெண்ணை அங்கேயிருந்து தள்ளிவிட முடியுமா?''

''காந்திமதியின் நினைவை மறக்க வேண்டிய அவசியமே இல்லையே. அவளுக்காகவே, அவளுடைய மகனுக்காகவேதான் நீங்கள் மறுபடியும் உங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன்.''

''நான் காந்திமதியைச் சொல்லவில்லை!''

தேவநாயகியின் மெய் சிலிர்த்தது. தன் வட்டமான விழிகளால் அவரை ஏறிட்டுப் பார்த்து விட்டுக் குனிந்து கொண்டாள்.

''தேவநாயகி! உண்மையைச் சொல்; என் மகனை வளர்ப்பதற்கு நீ ஒப்புக் கொண்டால் நான் அவனை அழைத்து வரச் சொல்லி என் அப்பாவுக்குக் கடிதம் எழுதுகிறேன்.''

''நீங்கள் கடிதம் எழுத வேண்டிய அவசியமில்லை. அவன் இங்கேதான் இருக்கிறான். நான் ஏற்கனவே அவனுடைய தாயாக இருக்கிறேன்'' என்றாள் தேவநாயகி.

*

கனகரத்தினம் தம் பிரயாண அனுபவங்களைச் சொல்ல அவற்றைக் குறுக்கெழுத்தில் எழுதிக் கொண்டிருந்தாள் தேவநாயகி.

''இது இருக்கட்டும். நீ ஏன் முன்னாலேயே காந்திமதியின் தங்கை நீதான் என்பதைக் கூறவில்லை. சின்ன ரத்தினம் என் மகன் என்பதை ஏன் முதலில் மறைத்தாய்?'' என்று கேட்டார் கனகரத்தினம்.

''மகா அறிவாளியான உங்களுக்கு இது தெரியவில்லையா? முதலிலேயே கூறியிருந்தால் நீங்கள் எங்களை விரட்டியடித்திருப்பீர்கள். என்னை ஒரு நாளும் மணம் செய்து கொண்டிருக்கவும் மாட்டீர்கள்.''

''உண்மையைச் சொல்லு. நான் எப்படிப்பட்டவன் என்பதை நீ முதலில் சோதிக்க விரும்பினாய் அல்லவா?''

''ஆமாம்! அதில் என்ன தவறு? உங்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவனை உங்களிடம் ஒப்படைக்க எனக்கு விருப்பமிருக்கவில்லை. அதற்காகவே பங்களூருக்கு வந்தேன். உங்கள் தந்தைதான் இவ்வளவு அருகில் வீடு பார்த்துக் கொடுத்தார். குழந்தை உங்கள் கண்ணில் படவேண்டும் என்பதற்காகவே இந்த மைதானத்துக்கு அவனை விளையாட அனுப்பினேன்... நீங்கள் கோபித்துக் கொள்வதையெல்லாம் அவன் கூறும்பொழுது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக உங்களுடைய நட்பைச் சம்பாதித்துக் கொண்டு, அவன்மீது உங்களுக்குப் பிரியம் ஏற்படச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.''

''உன் முயற்சியில் தோல்வி அடைந்தாய். எனக்கு உன்மீதுதான் பிரியம் ஏற்பட்டது.''

''தோல்வி என்று அதை எப்படிச் சொல்ல முடியும்? என் கண்மணியை நான் அப்படித் தனியாக ஒரு புது மனிதரிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. அவனுடைய அம்மாவாக எப்போதும் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை'' என்றாள் தேவநாயகி.

இந்தச் சமயத்தில் கலகலவென்று கண்ணாடி நொறுங்கும் சத்தம் கேட்டது. இருவரும் வாசலுக்கு ஓடினார்கள். சின்ன ரத்தினத்தின் பந்து பட்டு இன்னொரு கண்ணாடி ஜன்னல் உடைந்து சிதறிக் கிடந்தது.

கனகரத்தினத்தின் தந்தை உள்ளம் பதறிவிட்டது. மின்னல் வேகத்தில் ஓடிச் சென்று சின்னரத்தினத்தைப் பார்த்து, ''காயம் ஒன்றும் படவில்லையே?'' என்று கேட்டார். அவன் சிரிக்கவே ''என் அருமை ரத்தினமே!'' என்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

பரிகாரம்

எஸ்ஸார்ஸி

ராதை வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள்; எந்த இடத்திலும் அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. தினசரி ஐந்து மணிக்கே வீடு திரும்பி விடுகிறவன் கிருஷ்ணன். நாலைந்து நாட்களாகக் குழந்தை மணியன் நோயில் படுத்தது முதல் இன்னும் சீக்கிரமாகவே வந்து கொண்டிருந்தான். இன்று ஏழு மணி ஆகுக்கு மேல் ஆகியும் வரவில்லை. மாலை நாலு மணி முதல் மணியனின் உடல் நிலையில் அதிகக் கோளாறு. வைத்தியரும் வரவில்லை. வீட்டில் உதவிக்கு வேறு மனிதரும் இல்லை.

துயரமே உருவாகக் காட்சியளித்த ராதை கை கால்களைக் கழுவிக் கொண்டு தீபத்தை ஏற்றிக் கடவுளை வணங்கிப் பிரார்த்தித்தாள். 'தெய்வமே! நாங்கள் பிழைதான் செய்து விட்டோம். இதோ, இப்போதே, முதற் காரியமாக அதற்குரிய பரிகாரத்தைத் தேடி விட்டு மறு காரியம் பார்க்கிறோம். எங்கள் குற்றத்துக்காக எங்கள் செல்வனை.. இவ்வளவு வருத்தியது போதும். எங்களை மன்னித்து, குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடு....'

கண்ணீர் சோர அவள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறபோதே டாக்டரின் கார் வந்து விட்டது. அவள் புருஷன் கிருஷ்ணனையும் டாக்டரையும் ஏற்றிக் கொண்டு. டாக்டர் குழந்தையைப் பார்த்து விட்டு மருந்து கொடுத்தார். அவர் முகத்தில் தெளிவு இல்லை. ஆயினும் அதை ஒருவாறு மறைத்துக் கொண்டு இளந்தம்பதிகளுக்குத் தைரியம் கூறிச் சென்றார்.

குழந்தைக்கு மருந்து கொடுத்துவிட்டு ஒன்றுமே புரியாமல் உட்கார்ந்திருந்த ராதை, "உங்களுக்கு ஒரு சேதி தெரியுமா?" என்று கேட்டாள் கிருஷ்ணனைப் பார்த்து.

"என்ன?"

"செல்லம்மா மகளுக்குக் கல்யாணமாம்."

"முன்பே தெரிந்ததுதானே?"

"கல்யாணம் என்பது மட்டுந்தானே தெரியும்? மற்ற விவரங்கள்?"

"என்ன விவரம்?"


"கண்ணம்மாளை அவளுடைய அத்தை மகன் ரத்தினத்துக்குக் கட்டிவைப்பது என்றல்லவா தீர்மானித்திருந்தது?"


"ஆமாம்."

"இப்போது அது இல்லை. வேறு யாரோ வயசானவனுக்குக் கண்ணம்மாளைக் கட்டி வைக்கப் போகிறார்களாம்!"

"அட! கஷ்டமே!"

"காரணம் என்ன தெரியுமா? செல்லம்மாள் கல்யாண காலத்தில் ஐந்நூறு ரூபாய் தருவதாகச் சொல்லி இருந்தாளாம். இப்போது அவளும் பணமும் இல்லை."





''சே, என்ன உலகம் இது? உறவை விட, அன்பைவிடப் பணந்தான் மிகவும் முக்கியம் போலிருக்கிறது!''

''உலகம் இருக்கட்டும். நம்மைப் பற்றிப் பேசுவோம்.''

''நம்மைப் பற்றி என்ன, ராதை ?''

''என்னவா? கண்ணம்மா கிழவியைக் கட்டிக் கொள்வதற்குக் காரணம் நாம்தானே?''

''என்ன புதிர் போடுகிறாய், ராதை ?''

''புதிரா? யோசித்துப் பாருங்கள்.''

குழந்தை முனகினான். தம்பதிகள் விரைந்து அவனைக் கவனிக்கலாயினர். அந்த நிலையிலும் ராதை சொன்ன விஷயம் கிருஷ்ணனின் மனத்திலே வட்டமிட்டபடியேதான் இருந்தது. நன்கு யோசித்துப் பார்த்தபோது விஷயம் இன்னதென்று புலப்படத்தான் செய்தது. ஆனால் ராதை சொன்னபடி அந்தக் குற்றத்துக்குத் தாங்கள் பொறுப்பாளிதானா என்பதுதான் சரியாக விளங்கவில்லை.

பால்காரச் செல்லம்மாளுக்கு ராதை—கிருஷ்ணன் தம்பதிகளிடம் அலாதிப் பாசம். மாசாந்திரப் பால் கணக்கை அவள் பார்ப்பதில்லை. ராதை பார்த்துச் சொன்னதுதான். பணத்துக்கு நெரிக்க மாட்டாள். கொடுத்தபோது பெற்றுக் கொள்வாள். சில சமயம் ஐந்து, பத்து ரூபாய் கடன் கொடுத்துக்கூட உதவுவாள். அவர்களுடைய அன்புப் பழக்கத்தை வியந்து புகழாதவர்கள் இல்லை.

பழக்கம் முதிர முதிர, கடன் கொடுத்து வாங்கும் தொகையின் அளவும் அதிகரித்தது. அதற்கு ஏற்றாற்போல ராதை—கிருஷ்ணன் குடும்பத்தில் எதிர்பாராத வகையில் அடுத்தடுத்துப் பல பெருஞ் செலவுகள் நேர்ந்தபடி இருந்தன. ராதை கடன் கேட்கக் கூசுவதை அறிந்த செல்லம்மாள் சந்தர்ப்பங்களை அறிந்து தானாக வலிய உதவினாள். அதன் விளைவாகக் கடன் வர வர வளர்ந்து தொகையின் அளவு முந்நூறுக்கு உயர்ந்து விட்டது.

அந்நிலையில் மேலும் ஓர் அதிர்ச்சி! கிருஷ்ணனுக்குத் திடீரென்று வேலை போய் விட்டது. ராதை மனம் நைந்து போனாள். செல்லம்மாள் தைரியம் கூறி வந்தாள்.

'' என் பணத்துக்கு அவசரம் இல்லை. என் மகளின் கல்யாணத்தின்போது நீங்கள் கொடுத்தால் போதும்'' என்று கூறி மேலும் மேலும் உதவி செய்து வந்தாள்.

ஒரு நாள் அவள் மாரடைப்பில் காலமானாள். கிருஷ்ணன் சிறிது நிம்மதிப் பெருமூச்செறிந்தான். செல்லம்மாள் கடன்விஷயம் நாலாம் நபருக்குத் தெரியாது. வேறு எவ்விதமான ஆதாரமும் இல்லை என்பதுதான் அவன் நிம்மதிக்குக் காரணம். 'சௌகரியப்பட்டபோது மெள்ளக் கொடுத்தாலும் கொடுக்கலாம். கொடுக்காவிட்டாலும். . . .' வறுமை அவனை இப்படியெல்லாம் எண்ணச் செய்தது. ஆனால்—

ராதை அந்த விஷயத்தில் அவனுக்கு நேர் எதிரிடையாக இருந்தாள். சதா காலமும் செல்லம்மாளையும் அவள் கடனையுமே எண்ணிக் கொண்டிருந்தாள். தகுந்த சந்தர்ப்பம் எப்போது வாய்க்கும்; கடன் சுமையை எப்போது இறக்குவோம் என்றே ஓயாது எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள் ராதை.

கிருஷ்ணனுக்கு நல்ல உத்தியோகம் கிடைத்தது. கை நிறையச் சம்பளம். கிருஷ்ணன் மனைவியைக் கேளாமலே மேஜை, பீரோ, நாற்காலி, நிலைக் கண்ணாடி முதலிய சாமான்களை வாங்கி வந்து விட்டான். ராதை மனம் நொந்தாள். கணவனிடம் சண்டை போட்டாள். அடுத்தாற் போலக் கிடைக்கக் கூடிய தொகையையாவது கண்ணம்மாளிடம் கொடுத்துவிட வேண்டும் என்றாள். ஆனால்—

அதுவும் நடைபெறவில்லை. கிருஷ்ணனுக்குப் போனஸ் கிடைத்தது. ராதை வளையல் காப்பை முன்னிட்டுத் தாய் வீடு செல்ல நாள் குறித்திருந்த சமயம் அது. கிருஷ்ணன் காரியாலயத்திலிருந்து வருகிறபோதே வேலைப்பாடு மிகுந்த தங்கச் சங்கிலி ஒன்றை வாங்கி வந்தான். திருமணம் ஆகிப் பல காலங் கழித்துக் கருவுற்றிருக்க மனைவியின் கழுத்தில் இட்டுப் பார்த்துக் களிப்பெய்தினான்.

அடுத்த முறை கிடைத்த பணமாவது அவன் சொன்னபடி கண்ணம்மாளிடம் சேர்ந்ததா? குழந்தை பிறந்ததற்கான செலவு, இப்படி அடுத்தடுத்துப் பல செலவுகள் !

ராதை குழந்தையும் கையுமாய்க் கணவனிடம் வந்து சேர்ந்து விட்டாள். குழந்தை மணிப்பயல் கிருஷ்ண விக்கிரகம் போல் இருந்தான். குழந்தைக்குச் சங்கிலி, குழந்தைக்கு வளையல்கள், குழந்தைக்கு மோதிரம்—இப்படி இந்த வரிசையில் இறங்கி விட்டான் கிருஷ்

ணன். ராதை வாய் ஓயாது கடனைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருந்தாளே தவிர ஆசையோடு அவன் புரியும் செயல்களைத் தடுக்க அவளால் முடியவில்லை.

'செல்லம்மாள் மகளுக்குக் கல்யாணம்!'

ஒரு நாள் இந்தச் செய்தி ராதையின் காதில் விழுந்தது. உடனே அவள் தணலை மிதித்தவள் போல் துடிதுடித்தாள். "சீக்கிரம் பணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கணவனை முடுக்கினாள்.

கிருஷ்ணன் மெதுவாக, "ஆகட்டும்" என்று தலையசைத்தானே யொழிய அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

மணியனுக்குத் திடீரென்று காய்ச்சல் கண்டது; வரவர அதிகரித்தது. மூன்றே நாட்களில் கவலைக்கிடமான நிலை ஏற்பட்டு விட்டது. தம்பதிகள் உலகத்தையே மறந்து குழந்தையைக் கவனித்தனர்.

நாலைந்து நாட்களுக்குப் பின் மறுபடியும் ஒரு செய்தி: 'கல்யாண காலத்தில் செல்லம்மாள் தன் மகளுக்குச் சீதனமாக ஐந்நூறு ரூபாய் ரொக்கமாவது அல்லது அவ்வளவு பெறுமானமுள்ள நகையாவது அளிப்பதாக வாக்குக் கொடுத்திருந்தாள். பாதிப் பணந்தான் இருக்கிறது. அதனால் பிள்ளை வீட்டார் பெண்கொள்ள மறுத்தனர். ரோஷந்தாளாத செல்லம்மாளின் தம்பி தன் மருமகளுக்கு அதே முகூர்த்தத்தில் திருமணத்தை நடத்திக் காட்டுவதாகச் சபதமிட்டு வரன் நிச்சயித்திருக்கிறான். அந்த வரன் கிழவன்; மூன்றாம் தாரம். கண்ணம்மாள் கண்ணீர் வடிக்கிறாள்.'

இதைத்தான் சுருக்கமாகத் தன் கணவனிடம் எடுத்துரைத்தாள் ராதை.

★

இதைக் கேட்ட கிருஷ்ணன், "உண்மைதான்! நாம் கொடுக்க வேண்டியதைக் கொடுத்திருந்தால் கண்ணம்மாளுக்கு இந்தக் கதி நேர்ந்திராதுதான்!" என்றான்.

"இப்படி வாய் அநுதாபம் தெரிவித்து விட்டதனால் மட்டும் நம் பொறுப்பு தீர்ந்து விடாது. நானும் அன்று முதல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. செல்லம்மாள்தான் போய் விட்டாளே என்பது உங்கள் நினைப்பு போலிருக்கிறது. யார் போனாலும் யார் இருந்தாலும் கடவுள் என்றும் இருந்து கொண்டிருக்கிறான். நம் செயல், சொல், எண்ணம் முதற் கொண்டு அனைத்தையும் அறிந்தவன் அவன். இன்றைய நம் நல்வாழ்வுக்கு அன்று உரமிட்டு நீர் வார்த்தவள் செல்லம்மாள். அவளுக்கு இழைத்த துரோகந்தான் குழந்தைக்கு வியாதியாக வந்திருக்கிறதென்பது என் எண்ணம். நமக்கு நம் குழந்தை எப்படியோ, அப்படித்தானே செல்லம்மாவுக்கும்? நம் குழந்தை உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறான்; செல்லம்மாள் குழந்தை வாழ்க்கைக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறாள். காரணம் நம் துரோகச் செயல்! நாளை மறுநாள் கல்யாணமாம். அது தடைப்பட வேண்டும். என்ன செய்வீர்களோ தெரியாது; கண்ணம்மாள் கழுத்தில் அவள் அத்தான் ரத்தினமே மாலையிட வேண்டும்."

ராதையின் பேச்சைக் கேட்ட கிருஷ்ணன் பெருமூச்சுடன் யோசனையில் ஆழ்ந்தான்.

இரவெல்லாம் கண் விழித்து மாறி மாறிக் குழந்தையைக் கவனித்து வந்த தம்பதிகள் இருவருமே விடியற்காலம் சற்றே கண்ணயர்ந்து விட்டனர். திடீரென்று ராதை வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கணவனும், பையனும் அயர்ந்து தூங்குவதைக் கண்டாள். ஜன்னல் வழியே தெருவைப் பார்த்தாள். விடிந்து விட்டது. பரபரப்புடன் அறையை விட்டு வெளியே வந்தாள். பூட்டைத் தேடி எடுத்தாள். தெருக் கதவை வெளிப்புறம் பூட்டிக் கொண்டு நடையைக் கட்டினாள். நேரே செல்லம்மாளின் வீட்டிலே போய் நின்றாள்.

மேலும் அரை மணி நேரம் சென்றது. கிருஷ்ணனும் ராதையைப்போலவே திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்தான். சுற்றி நோக்கினான். மணியன் உறங்கிக் கொண்டிருந்தான். ராதையைக் காணவில்லை. உட்புறம் சென்றிருப்பாள் என்று கருதிக் குரல் கொடுத்தான். இரண்டு மூன்று குரலுக்குப் பதிலில்லை. "ராதை!" என்று உரக்கக் கூவினான்.

அதேசமயம் தெருக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ராதை கணவனின் குரல் கேட்டு என்னவோ ஏதோ என்று பதறியவளாய் அறைக்குள் பாய்ந்தாள்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது, ராதை!"

"என்ன?"

"உன் தங்கச் சங்கிலியைக் கண்ணம்மாளுக்கு அளித்து விடு. இந்த நெருக்கடியில் அதுதான் சாத்தியம். என்ன?"

ராதையின் முகத்திலே சிரிப்புக்கூட வந்தது.

"மணியனுக்கு நூறு ஆயுசு!"

"என்ன சொல்கிறாய், ராதை?"

"நம் இருவர் மனத்திலும் ஒரே சமயத்திலே ஒரே விதமான எண்ணம்..."

"என்ன! நீயும் அப்படியே நினைத்தாயா?"

"நினைத்தது மட்டுமல்ல; அதைக் காரியத்தில் செய்தே விட்டேன். இப்போது நான் எங்கே போய் வருகிறேன் என்று நினைக்கிறீர்கள்? அங்கேதான். சங்கிலியைக் கழற்றிக் கண்ணம்மாள் கழுத்தில் இட்டு, 'அத்தானோடு நீ ஆயிரங் காலம் வாழ வேண்டும்' என்று அவளை மனதார வாழ்த்தி விட்டுத்தான் வந்தேன்" என்றாள் ராதை.


"கடவுள் கருணாமூர்த்தி, ராதை! கட்டாயம் நமக்கு அருள் புரிவார். குழந்தை பிழைத்து எழுந்து விடுவான்."

மணியன் முனகும் சத்தம் கேட்டது. தம்பதிகள் குழந்தையின் நிலையைக் கூர்ந்து கவனித்தனர். மணியன் இலேசாகப் புரண்டான்.

பொழுது புலர்ந்தது. டாக்டர் வந்தார்; குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்தார். அவர் முகத்திலே தோன்றிய வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையே இல்லை.

"நேற்று மாலை பார்த்தபோது எனக்குச் சற்று நம்பிக்கைக் குறைவு. இப்போது இத்தனை அநுகூலம் ஆச்சரியமானது. எல்லாம் கடவுள் அருள்தான்!"

டாக்டர் கடவுளை நினைத்தார்; தம்பதிகள் கடவுளையும் செல்லம்மாளையும் சேர்த்து நினைத்துக் கொண்டனர்.


ரசிகர்கள் விரும்பும்
ரம்யமான ஆடைகளுக்கு
ஸ்ரீ நிவாஸ்
காட்டன் மில்ஸ் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ்
வாட்பி ரோடு, பம்பாய்-1
SN-R


பெண்மணிகளுக்கு ஒரு சொல்! ஆறிலும் சரி, ஐம்பதிலும் சரி. உங்கள் கூந்தல் கருகரு வென்றும், அடர்த்தியாகவும் வைத்துக் கொள்ளலாம். இளவயதில் வரும் வழுக்கையைத் தடுத்து கேசத்தைக் காப்பாற்ற கேசவர்த்தினியை இன்றே உபயோகியுங்கள்.
கேசவர்த்தினி ஷாம்புவினால் தலையை மணமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்
கேசவர்த்தினி
பிராடக்ட்ஸ், கோயமுத்தூர்
GP

பானுவின் காதலன்

11. வரவேற்பு!

பானு தனியாக ஓடிவந்து விட்டாள் என்று அறிந்தபோது சின்னத்துரைக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவள் ஓடி வந்ததற்குக் காரணம் கேட்டதும் பானு குறட்டில் உட்கார்ந்துகொண்டு விம்மினாள். "என்னுடைய மனசு படும் பாட்டை நீங்கள் அறிந்தால் இப்படிக் கேட்க மாட்டீர்கள் அண்ணா!..."

பல வண்ணங்கள் கொண்டு சித்திரிக்கப்பெறும் ஒரு ஓவியத்திலே ஒரு வண்ணம் கின்னத்துடன் கவிழ்ந்துவிட்டால் ஓவியத்தின் உருத் தெரியுமோ? சின்னுவின் மனசை அவனாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு எப்போதும் போலச் சந்தேகங்களோ பயமோ உண்டானதாகவும் சொல்ல முடியாது. அந்தச் சிறிய வீட்டையும் தாழ்ந்த கூரையையும் வம்புக்காரர்களாக அங்கே குடியிருப்பவர்களையும் தாயையும் அவன் மறந்தே போனான்.

சற்று முன் ரயில் வண்டியில் கேள்விப்பட்ட சங்கதிகள், கூட்டத்திலே பரிதிமாவின் அனல் பறக்கும் பேச்சு, அங்கயற்கண்ணியின் ரத்தச் சிவப்புச் சேலை எல்லாம் நினைவில் பவனி வந்தன. 'இது ஏதும் சினிமா இல்லையே? கறுப்புச் சேலை அணிந்து எதிரே உட்கார்ந்து விம்மி அழுபவள் பானு தானே?' என்று தெளிய முயலுபவனாக மீண்டும் மீண்டும் தன் கண்களைக் கசக்கிக் கொண்டான் சின்னு.

"பானு? அந்த மா...ப என்றவன் யார்?" சட்டென்று சின்னத்துரை கேட்டு வைத்தான். பானு முகத்தைத் துடைத்துக் கொண்டு அவனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள்.

"உங்களுக்குத் தெரியாதா அண்ணா, இன்னமும்?"


"எனக்கு எப்படித் தெரியும்? நான் மா...ப மார்க்கபந்து என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த எண்ணத்தால் எனக்கு ரயில் உத்தியோகம் கூட வேண்டாம் என்றாகி விட்டது, பானு!" என்றான் அவன் துயரத்தோடு.

அந்த அழுகைக்கு மத்தியிலும் அவள் சிரித்தாள். பல் வரிசைகள் அந்த இரவின் தனிமையில் கோக்கப்பட்ட முல்லையரும்புகளைப்போல் இருந்தன.

'சே. இந்த அழகுக்கா நாம் ஆசைப்பட்டோம்? இவளை வைத்துப் போற்றிக் காக்க நமக்கு என்ன இருக்கிறது?...' என்று எண்ணினான் சின்னு.

"நீங்கள் அப்படி நினைத்தீர்களோ, பிழைத்தேன். அண்ணா, பாட்டி என்னை அவர்கள் வீட்டில் கொண்டு போய் விடும்போது இப்படி எல்லாம் நேரிடுமென்று தெரிந்திருந்தால் கண்டிப்பாய்ப் போயிருக்கமாட்டேன். நிறைந்த சந்தோஷம் மனிதர்களுக்கு ஒரு நிலையிலும் கூடுவதில்லை..."

அவள் முகத்தை விட்டு முற்றத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இப்படிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவள் ஏதேதோ பேசியபோது, சின்னுவுக்கு ஒரு சந்தேகம் நெருடியது நெஞ்சில். சுய புத்தியுடன்தான் இப்படி ஓடி வந்திருக்கிறாளா இவள் என்று?



"என்ன அண்ணா, பார்க்கிறீர்கள்? புத்தியுடன் இருக்கிறாளா என்று சந்தேகம் வந்து விட்டதா உங்களுக்கு? அதெல்லாம் இல்லை....நான் அங்கே இருக்கப் பிடிக்காமல்தான் ஓடி வந்தேன். இங்கே வந்தால் நீங்கள் ஒரு வழி சொல்லுவீர்கள், அத்தையும் இரங்குவாள் என்று வந்துவிட்டேன். அன்பே இல்லாத ஒரு வீட்டில் எப்படி அண்ணா இருப்பது? சொல்லுங்கள்!"

"அதெல்லாம் சரி, பானு. பலவந்தமாக உன்னை அவர்கள் பிள்ளைக்கு மணந்துகொள்ள நீ எப்படிச் சம்மதித்தாய்? டணம் காக, பதவி என்று தானே?" — சின்னத்துரை இதைக் கேட்கையில் துக்கம் தொண்டையை அடைத்தது.

"இந்தக் கேள்விக்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்ல முடியாதே?"

"நீ சொல்லத்தானே வந்திருக்கிறேன் என்றாய்? ..."

"அத்தை எல்லோரும் இருந்தால் எப்படிச் சொல்வது என்று நினைத்தேன். அவர்களால் என்னைப் புரிந்துகொள்ள முடியாது அண்ணா. 'இப்படி ஓடி வந்திருக்கிறதே வெட்கம் கெட்டு ....' என்றுதான் ஏசுவார்கள். தெருக்கோடியில்வரும்போது வெற்றிலைக்கார வீராயியைப் பார்த்தேன். உங்கள் வீடு எங்கே என்று கேட்டதற்கு அவள் என்னை எப்படிப் பார்த்தாள், தெரியுமா? இந்நேரம் அவளே தமுக்கு அடித்திருப்பாள்...ஆனால் எனக்குப் பயமே உண்டாகவில்லை, அண்ணா....!"

'இதென்ன வெட்டிப்பேச்சு' என்று நினைத்தான் சின்னு. அந்த வேளையில் ஊர்க்காரர்களையும் அம்மாவையும் பற்றிய நினைவே அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.


"உன்னைப் பாட்டி அவர்கள் வீட்டில் வேலைக்குக் கொண்டு விட்டாள். உம், அப்புறம் என்ன ஆயிற்று?...."

அவன் துவக்கிக் கொடுத்தான்.

தனக்குத்தானே எதையோ நினைத்துச் சிரித்துக்கொண்ட பானு பின்வரும் கதையைச் சொன்னாள்:

★

சௌந்தரியம்மாள் படுத்த படுக்கையாக நோயில்விழுந்திருந்தாள். அவளைப் பீடித்துள்ள வியாதி என்னவென்று அறிய மூன்று மாதங்களாக டாக்டர்கள் பலர் திண்டாடிக் கொண்டிருந்தார்கள். சகல விதமான பரிசோதனைகளும் அவளுடைய வியாதியைத் தெளிவாகத்



துலக்கவில்லை. உடம்பில் ஒரு வியாதியும் இல்லை என்று கூறினான், ஒரு அநுபவமுமில்லாத கற்றுக்குட்டி. பிழைக்கத் தெரியாதவன்! அவனை மீண்டும் அழைக்கச் சுந்தரியம்மாளா ஒப்புக்கொள்வாள்? ''இத்தனை பெரிய டாக்டர்களாலேயே கண்டு பிடிக்க முடியவில்லையே? இவனுக்கு என்ன தெரியும்? ஒன்றுமில்லாமலா இப்படி எல்லாம் படுத்தும்?'' என்றாள் அவள்.

எனவே அவனுக்கு வியாதி முற்றித்தான் இருந்தது. தலைவலிக்கு மருந்து சாப்பிட்டால் கால்குடைச்சல் கண்டது. கால் குடைச்சலுக்கு ஊசி போட்டுக் கொண்டால் முதுகுவலி உடலைப்புரட்டி எடுத்தது. அதற்கு ஒரு படம் பிடித்துக் கதிர் சிகிச்சை செய்து கொண்டதின் பலன் வாயில் எச்சில் ஊற ஆரம்பித்தது. அந்தத் தொந்தரவை எப்படிச் சகிப்பது? அவனைப் போன்ற நோயாளிகளைப் பார்த்துச் சிகிச்சை செய்யும் அநுபவம் மிக்க டாக்டர் சளைத்து விடுவாரா? அதற்கும் நிவாரணம் செய்யப் புகுந்தார். சுந்தரியம்மாள்தான் என்ன செய்வாள்? அவனுக்கு மூச்சு இரைப்பு ஆரம்பமாகியது. டாக்டர் தினமும் வந்தார். பொறுமை குன்றாமல் அவள் நோயின் தன்மைகளைக் கேட்டார். 'பூரணமான ஒய்வு வேண்டும், அம்மா!' என்று கண்டிப்பான உத்தரவு போட்டார். அந்தப் பூரண ஒய்வைக் கொடுக்கத்தான் பானு அங்கேயே ஊன்றிவிடப் புகுந்தாள். திருச்சி கண்டோன்மென்ட் பக்கம் விஸ்தாரமான திறந்த வெளிக்குள் வீடொன்றை அவர்கள் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். மார்க்கபந்து அப்போது மதுரைப் பக்கம் வேலையாக இருந்தார். மாசத்தில் நான்கு தடவைகளுக்குக் குறையாமல் அவர் வந்து போவார்.

வீட்டிலே முனியன் என்றொரு வேலையாள் அவர்களுக்கு உதவியாகச் சகல பணிகளையும் நிறைவேற்றி வந்தான். ரயில்வே இன்ஸ்பெக்டர் மார்க்கபந்துவுக்கு இரு பெண்கள், ஒரு பையன். பெண்கள் இருவரும் மூத்தவர்கள். கல்யாணமாகிப் புக்ககம் சென்றவர்கள். ஒருத்தி காசியில் இருந்தாள். அவள் புருஷன் முரட்டுச் சுபாவம் வாய்ந்தவனாம். மனைவியையோ குழந்தைகளையோ பிறந்த வீடு அனுப்பவே மாட்டானாம். இன்னொரு மகளான கனகம் அப்போது தாய்க்கு உதவியாக இருந்தாள். அவள் புருஷன் அஸ்ஸாமில் எங்கோ ஒரு தொழிற்சாலையில் பெரிய உத்தியோகம் வகித்து வந்ததாகப் பானுவுக்குத் தெரியும். அவள் மூத்த மகளைத் தன் கணவரிடம் விட்-



சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்புப் பிரசங்கம், 1912.

மேல் நாட்டுக் கல்வியும் தாய்மொழியும்

மேல்நாட்டு நாகரிகத்தின் அடிப்படைக் கொள்கைகள், மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு, சிந்தனைகள் யாவும் மேல்நாட்டுக்கு மட்டும் உரியன அல்ல. அவை உலகத்தின் பொதுச் சொத்து. அந்தச் சிந்தனைகளும், அறிவும், நாகரிகமும் இந்நாட்டில் பரவ வேண்டுமானால் ஒருநாளும் ஆங்கிலத்தின் மூலமோ, சம்ஸ்கிருதத்தின் மூலமோ, அரபு மொழியின் மூலமாகவோ பரவப் போவதில்லை. இப்பணிக்கு இந்நாட்டு மொழிகளையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேச மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழி மிகமிக அவசியம். மேல் நாட்டு அறிவைப் பெற்றவர்களை ஒன்றுபடுத்த ஆங்கிலம் ஒரு வகையில் உதவலாம். ஆனால் அந்த மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரத்தை நுட்பமாக அறியத் தாய்மொழி மூலம் போதனை பெறுவது அவசியமாகும்.

ரெவரண்டு ஏ. எப். கார்டினர்.

டிருந்தாள். கைப்பையன் நான்கு வயசிருக்கும். தாயுடன் கூட இருந்தான்.

பானுவைக் கண்டதுமே கனகம் ஊருக்குக்கிளம்பிவிட்டாள். "நன்றாய்ச் சிட்டையாய்க் காரியம் செய்கிறாள். இங்கே இன்னும் எதற்கு நான் இருக்க? எனக்குமேல் பார்த்துக் கொள்வாள். பானு! அம்மாவுக்குக் குணம் ஆனதும் உன்னை ஏற்றி அனுப்பச் சொல்லு. என்னுடன் இருந்துவிடலாம். எனக்குத் தான் நம் பக்கத்து ஆள் இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது!" என்று சொல்லி விட்டுப் போனாள். பானுவுக்கும் அவளை மிகவும் பிடித்திருந்தது. தொலைதூரம் ஊர்களுக்குப் போகலாம் என்று கனவு கூடக் கண்டாள். ஆனால் சுந்தரியம்மாளுக்கு வியாதி குணமாவது எந்நாளோ?

கனகமும் அவள் பையன் சம்பத்குமாரும் போன பின்பு, பானுவுக்கு அந்தப் பெரிய வீட்டில் நாளெல்லாம் நீண்டு வளர்ந்தன. விழுந்து விழுந்து வேலை செய்தாலும் அவளும் சுந்தரியம்மாளும் தானே? சுந்தரியம்மாளின் குணம் நிலையில்லாதது. ஒரு நாள் சுமுகமாக இருப்பாள். "இந்தா, பானு! காரியமெல்லாம் ஆகி விட்டதானால் பல்லாங்குழியைக் கொண்டு வா. இரண்டு ஆட்டம் ஆடலாம். எத்தனை நேரம் வெறுமனே உட்கார்ந்துகொண்டிருப்பது?" என்பாள்.

விளையாட்டு நேரத்தில் எஜமான—வேலைக்கார பாவமே மறைந்து போகும். பானு பல்லாங்குழி விளையாட்டில் வெகு கெட்டிக்காரி. அநேகமாகச் சுந்தரியம்மாள்தான் தோற்றுப் போவாள்.

"ராஜா இப்படித்தான் ஆடுவான், அந்த நாளில். ஒரு நாளைக்குக்கூட என்னைக் கெலிக்கவிட மாட்டான். கையில்காயை வைத்துக் கொண்டு தப்பாட்டம் ஆடுவான். ஏன், பானு? நீயும் தப்பாட்டம் ஆடுறாயா?" என்று கேட்பாள்.

"இல்லையே மாமி!..." என்று சொல்லும் போது, பானுவுக்கு முகம் சிவந்து போகும். விளையாட்டுச் சுவாரஸ்யத்தில் தோற்கடித்தாலும், முடிவில் எஜமானி என்ற நினைப்பு அச்சத்தையும் படபடப்பையும் உண்டாக்கி விடும்.

இப்படி உற்சாகமாகப் பழகும் நாட்களிலே ராஜாவைப் பற்றிய செய்திகள் சுந்தரியம்மாளின் அன்பும் பெருமையும் பொங்கும் நெஞ்சிலிருந்து பூச் சிதறுவதைப் போல் வருவதுண்டு. 'அவன் சென்னையில் ஏதோ பத்திரிகாலயத்தில் இருக்கிறான்; ராஜ்யத்துக்கே முதலாவதாகப் பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்கிறான்; அவனுக்குக் காப்பி குளிர்ந்து போனால் பிடிக்காது; அவன் பேச ஆரம்பித்தால் பெரிய பெரிய அறிவாளிகளும் அயர்ந்து போவார்கள். அவன் படிப்புக்கும் அறிவுக்கும் தில்லியில் மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு வேலை கிடைக்க இருந்தது; அவன் சென்னையை விட்டு, அந்தப் பத்திரிகாலயத்தை விட்டு நகர மறுத்து விட்டான்....இப்படி எத்தனை எத்தனையோ சமாசாரங்கள் பானுவுக்கு அவள் வாய் மூலமாகத் தெரியும்.

சில நாட்களில் சுந்தரியம்மாளின் குணம் முற்றிலும் நேரிடையாக இருக்கும். ஒன்றுமில்லாததற்கெல்லாம் சீறி விழுவாள். சமையலில் குற்றம் இல்லாவிட்டாலும் குற்றம் கண்டு பிடிப்பாள். அத்தகைய நாட்களில் அவள் கூடத்துப் பக்கமே அநாவசியமாக வரமாட்டாள். வாயிற்புற அறை ஜன்னலில் உட்கார்ந்து தெருவில் போகிறவர்களைப் பார்த்தவண்ணம் பொழுதைப் பிடித்துத் தள்ளுவாள். மார்க்கபந்துவுக்குப் பானுவின் மீது ஒரு பற்றுதல் விழுந்து விட்டது: அவளை மகளைப் போல் பாவித்தார் என்றே சொல்ல வேண்டும். 'கபடில்லாத குழந்தையாக இருக்கிறாள்' என்று மாமியிடம் அவர் சொல்லிப் பானு அநேக தடவைகள் கேட்டிருக்கிறாள்.

புரட்டாசி மாசம். சரஸ்வதி பூஜைக்கு முன் ஒருவாரம் லீவு எடுத்துக்

இனாம்





மறந்துவிடாதீர்கள்! "ஓ.கே." வனஸ்பதி டின்களில் பரிசுக் கூப்பன்கள் உள்ளன. அவற்றிற்குப் பதிலாக அழகான அமைப்புடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை வெகுமதியாகக் கொடுக்கிறோம். "ஓ. கே." வனஸ்பதி கூப்பன்கள் சேருங்கள். உங்களுக்குப் பிடித்த பரிசைப் பெறுங்கள்.

மேலும் விவரங்கள் அறிய, உங்கள் அருகில் உள்ள "ஓ. கே." வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கிப் பாருங்கள்.

OK ஓ.கே வனஸ்பதி

ஒரு அவுன்ஸிற்கு 700 I.U. வைட்டமின் 'A' கொண்டது

1, 2, 5, 10 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

தயாரிப்பவர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EP

அவள் அழகில் வெற்றி இருக்கிறது

அவள் அழகில் ஒரு இரகசியம் இருக்கிறது

" நான் வத்னியை உபயோகிக்கிறேன் "
என்று மதுபாலா கூறுகிரு்.

"மூன்று நல்ல காரணங்களுக்காக:

அது கடைசி சொட்டுவரை புதுமையும்
நறுமணமுமுள்ளது.

அது உயர்ந்த ரகமும்
ஸ்வதேசியுமானது.

அது கோத்ரெஜிஞல்
தயாரிக்கப்பட்டது"



மதுபாலா மேலும்
கோத்ரெஜ்
டாய்லெட் பவுடர்
கூந்தல் தைலம்
சலவை சோப்புத் தூள்களை
உபயோகிக்கிரு்

"அவைகள் மிகவும் நம்பக
மானது" என்று கூறுகிரு்.

100% இந்திய
நிர்வாகம்
மூலதனம்



நீங்கள் விரைவில் "ராஜ்
ஹத்" என்ற படத்தில்
மதுபாலாவைக் காண்
பீர்கள்.

கோத்ரெஜ் வத்னி*
ரிஜிஸ்டர்டு
சாவி மார்க்

வத்னி 'பேபி' விலை 2¼ அணதான்

* "தாய்நாடு" என்று அர்த்தங்கொண்ட 'வதன்'
என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.

கொண்டு வருவதாக மார்க்கபந்து தகவல் தெரிவித்திருந்தார். அவர் மூக்காலும் இரவு வண்டிக்குத்தான் வருவது வழக்கம். பானு மாமிக்குச் சாப்பாடு போட்டுவிட்டு அந்த வண்டி வரும்வரை காத்திருப்பாள். அதில் அவர் வரவில்லை என்றால் மறுநாள்தான் எதிர்பார்க்க வேண்டும். அன்றிரவு பானு காத்துப் பார்த்துவிட்டு அவர் வராததால் மறுநாள்தான் அவர் வருவார் என்று தீர்மானித்தவளாய், சமையலறைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டுக் கூடத்துப் பக்கம் வந்தாள்.

முன் கூடத்துக்கும் வாசல் வராந்தாவுக்கும் இடையே இருந்த அழிக் கதவைப் பூட்டிக் கொண்டு, பானு, சுந்தரியம்மாளின் கட்டிலுக்குக் கீழே பாயை விரித்துப் படுத்துக் கொண்டாள். அப்போதெல்லாம் பானு படுத்துக் கொள்ள வேண்டியதுதான் தாமதம்; குறட்டை விடத் தொடங்கி விடுவாள். பாதித் தூக்கத்தில் அவளை எழுப்புவது என்பது முடியாத காரியம். அந்த விஷயத்தில் அவள் 'கும்பகருணி'ப் பட்டம் பெறத் தகுதி பெற்றவள்.

அன்று விடியற்காலை மணி மூன்று இருக்கலாம். வாயிற் கம்பிக் கதவு பூட்டும் ஓசைப்பட்டது.

"அம்மா..! அம்மா..அம்மா...வ்!"

பூட்டுடன் கதவும் உடைபட்டது.

சுந்தரியம்மாள் சட்டென்று எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள்;

"அம்மா...! யாரும்இல்லையா என்ன வீட்டிலே? ஏண்டா முனியா? இங்கே எல்லாரும் செவிடா?"

சுந்தரியம்மாள் அந்தக் குரலைக் கேட்டுச் சட்டென்று பதில் கொடுத்தாள்.

"யாருடா? குழந்தை ராஜாவா? பானு, அடி பானு? பானு?...."

ஊஹூம். பானு நித்திரா தேவியின் அணைப்பிலிருந்து இவ்வுலக விழிப்புக்கு விடுபடவில்லை.

"மளுக் மளுக்கென்று முட்டி அசைந்தால் வலி உயிர் போகிறது. இதோ வந்து விட்டேன், ராஜா!.."

சுந்தரியம்பாள் கட்டிலை விட்டு முனகிக் கொண்டே இறங்கிக் கூடத்து நடுவிலிருந்த பெரிய விளக்கைப் போட்டாள். வழக்கமாக வாயிற்கதவுச் சாவி மாட்டப்படும் ஆணியில் அது இல்லை.

வீட்டுக்கு வரும் அருமை மகனை வாசலில் நிறுத்தி விட்டுச் சாவி தேடுவதென்றால் யாருக்குத்தான் ஆத்திரமும் கோபமும் வராது?

"பானு? சாவி எங்கேயடி? எருமை மாடு! எழுந்திருக்கிறாளா, பாரேன்? பானு?...." என்று இரைந்தாள்.

பானுவின் நித்திரைக்குப் பங்கம் உண்டாகவேயில்லை! சுந்தரியம்மாளின் ஆத்திரம் மீறிப் போய்விட்டது. மூலையில் துணி உலர்த்தும் குச்சி இருந்தது. அதை எடுத்துப் பானுவின் முதுகில் நின்றபடியே இரண்டு அடி வைத்தாள், சுந்தரியம்மாள். வாரிச் சுருட்டிக் கொண்டு பானு எழுந்தாள்.

"என்ன, மாமி....?" என்று தெளிவிலாக் குரலில் கேட்டவள், எஜமானியையும் விளக்கொளியையும் வாயில் அழிக்கதவுக்கப்பால் முனியனுடன் பெட்டியும் படுக்கையுமாய் நிற்கும் யுவனையும் கலங்கிய விழிகளால் வெறித்துப் பார்த்தாள்.

"சாவி எங்கே? இப்படியா ஒரு தூக்கம்?" என்றாள் சுந்தரியம்மாள்.

அவளுக்கு வெட்கம் உடலைக் குறுக்கியது. "ரொம்ப நேரம் எழுப்பினீர்களா மாமி, தூங்கி விட்டேன்..." என்று கூறியபடியே பரபரப்புடன் எழுந்தாள். ஆணியில் பார்த்தாள். அங்கே சாவி இல்லை. ஆனால் சுவரில் இருந்த மின் விசைப் பெட்டியின் மேல் கை மறதியாக வைத்திருந்தது. அவள் கவனத்தைக் கவர்ந்தது. சாவியை எடுத்துக் கதவைத் திறக்கும் வரையில் அவள் உடலிலும் உள்ளத்திலும் ஒரே பரபரப்பு, துடிப்பு.

சாவதானமாக உள்ளே கால் வைத்த ராஜா அவளை ஏற இறங்கப் பார்த்தான். இடிஇடி என்று சிரித்தான். நல்ல வெண்கலத் தொண்டை. அந்தச் சிரிப்பொலி, ஆற்றுப் பாலத்திலே ரயில் போகும்போது உண்டாகும் சத்தத்தை நினைப்பூட்டியது அவளுக்கு.

அவன் சிரித்துக் கொண்டே 'இக் கும்பகருணி யாரம்மா?' என்று கேட்டான்.

பானுவை வெட்கம் பிடுங்கித் தின்றது. விருக்கென்று அவள் பின்கட்டுக் கதவைத் திறந்து கொண்டு வேகமாகச் சென்றாள். சுந்தரியம்மாள் கூறிய மொழிகள் அவள் செவிகளில் விழாமல் இல்லை.

"வேலைக்கு வைத்திருக்கிறதடா, குழந்தை. எனக்குத்தான் ஆறு மாசமாய் ஒன்றும் முடியவில்லையே? டாக்டர் 'முழுநேர ஓய்வு தேவை' என்கிறார். பாரு, கட்டிலிலிருந்து சற்று இறங்கி அலைந்து விட்டேன்......மூச்சு வாங்குகிறது......நல்ல பெண். திருட்டோ புரட்டோ இல்லை. அம்மை, அப்பன் வீடு, வாசல் என்று இங்கே யாருமேயில்லை. குணமும் பரவாயில்லை........ நேற்றுக் காகிதம் போட்டிருக்கக் கூடாதோ?" என்றாள் சுந்தரியம்மாள்.

"காகிதம் போடாமல் வரக்கூடாதா, என்ன?" என்று சிரித்தவாறே கேட்டான் ராஜா.

(தொடரும்)

கர்வம் வேண்டாம்!

வசுமதி ராமசாமி

அன்புமிக்க சுஜாதா,

நம்முடன் படித்த சரஸாவை நீ சபாவில் பார்த்ததாக எழுதியிருக்கிறாய். அவள் நடை, உடை, பாவனைகள் மாறியிருப்பதுடன் குணமும் மாறிவிட்டது, அவள் உன்னுடன் பேசவில்லை என்று எழுதியிருக்கிறாய்.

உன் கடிதத்திலிருந்து நம்முடைய சிநேகிதிக்கு நல்ல நிலை ஏற்பட்டிருக்குமென்று நினைத்துச் சந்தோஷப்படுகிறேன். இந்தக் காலத்தில் பெண்கள் கொண்டை அலங்காரம் விதவிதமாகச் செய்து கொள்வது அழகாய்த்தானிருக்கிறது. ஆனால் சல்லடை மாதிரி மிகவும் கனமாக அலங்கரித்துக் கொண்டால் நம் சிநேகிதி கழுத்து மாதிரி திரும்ப முடியாமலும் இருக்குமல்லவா?

கர்வமாக இருப்பது பிறரை என்றும் பாதிப்பதில்லை. அவர்களுடைய பண்புக் குறைவு; அதனால் பெரிய தவறில்லை என்று ஒரு காலத்தில் நினைத்திருந்தேன். ஆனால் இன்று சில கசப்பான அநுபவங்களால் என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். கர்வமாக இருப்பது தவறு. பிறர் மனம் நோகும்படி பேசும் பேச்சு, செய்யும் சிறு செயல் கூடத் தவறுதான் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

ஒரு காலத்தில் நம்முடன் ஓடி விளையாடிப் பழகின சிநேகிதி பிற்காலத்தில் நம்மைப் பார்க்காதது போல் போனால் நம்முடைய மனம் வருந்துகிறது. அதில் சந்தேகமேயில்லை. ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகள், அல்லது தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள ஒரு சிரிப்பு — இவற்றை எதிர்பார்க்கிறது மனம், அவ்வளவுதான்.



என்னுடைய சிநேகிதி ஒருத்தி சிலசமயம் மிகவும் அன்பாகப் பேசுவாள். நாம் எதிர்பாராமல் நம்மைக் கட்டிக் கொண்டு அன்பைச் சொரிவாள். அதை நம்பிக் கொண்டு இன்னொரு கூட்டத்தில் அவளைச் சந்திக்க நேர்ந்தால் நாமாக அவளிடம் பேசிவிடக் கூடாது.

அன்று நாம் ஏதாவது கேட்கும் போதே அவள் பதில் சொல்லாமல் போய்விடுவாள். எல்லோருக்கும் மத்தியில் அவளுடைய பராமுகம் நமக்கு அவமானமாக இருக்கும். அப்படியே பதில் சொன்னாலும் விருப்பம் இல்லாததைக் காட்டும் பொருட்டுச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் பதில் சொல்லுவாள். அந்தச் சுபாவத்தை, கர்வம் என்று சொல்லாவிட்டாலும், பச்சோந்தி மாதிரி மாறும் தன்மை எனக் கொள்ளலாம்.

சிலர் தனக்குச் சரிசமமானவர்களிடம் கர்வமின்றிப் பழகி வரலாம். அதனால் அவர்களுக்குக் கர்வமில்லையென்று சொல்வதில் அர்த்தமில்லை.

நான் சிலரைக் கவனித்திருக்கிறேன். சூழ்நிலைக்கு ஏற்பக் குணம் மாறும். ஏதாவது ஒரு கூட்டத்தில் அவர்களுக்குச் சமமானவர்கள் வந்திருக்க மாட்டார்கள்! அந்தச் சந்தர்ப்பத்தில் பொழுது போக்குக்காக என்னைப் போன்றவர்களிடம் வந்து பேசுவார்கள். அதனால் அவர்களுக்குக் கர்வமில்லையென்று ஏமாந்துவிடக் கூடாது. அவர்களுக்குச் சரியாக யாராவது வந்துவிட்டால் பிறகு நம்முடன் பேசுவதை நிறுத்திக் கொண்டு விடுவார்கள்.

'காரியம் ஆகும் வரை காலைப்பிடி' என்பதுபோல் சிலர் நடப்பார்கள். பிறகு மதிக்க மாட்டார்கள்.

வித்யா கர்வம் இருக்கலாம். அது தவறில்லை என்று சொல்வதுண்டு. அதையும் தவிர்ப்பது நல்லது. கல்வி அறிவின் பயன் வினயம்தான். கலை, பொருள் செல்வங்களைப் பெற்றாலும், அவற்றுடன் குணச் செல்வத்தையும் பெற்றால்தெய்வத்தன்மை உண்டாகிறது. நாமும் சில சமயம் தவறாகப் புரிந்து கொள்ளுகிறோம். சிலருக்குத் தங்கள் வீட்டு விசேஷங்கள் நடந்தால் சரியாக நடக்கவேண்டுமே யென்ற மலைப்பு உண்டாகிறது. சேர்ந்தாற்போல் கூட்டத்தைப் பார்த்தால் பேச நா எழுவதில்லை. அதனால் அவர்களைக் கர்விகளென்று நினைத்துவிடலாமா?

குழந்தைகள் மனத்தில் கர்வமான போக்கு ஏற்படாமல் வளர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

இப்படிக்கு,
பூமாதேவி.



பூதம் காத்த பொன்னன்

துரோணன்

சோலைப்பாளையம் முருகன் கோவிலின் நிர்வாகியாக நான் மாற்றப்பட்டிருக்கும் உத்தரவைக் கண்டதும், எனக்குச் 'சொரே'ல் என்றது. தாலுக்கா ஆபீஸ் சிப்பந்திகளைத்தான் முன்பெல்லாம் 'தண்ணியில்லாக் காட்டு'க்கு மாற்றல் செய்வதன் மூலம் மறைமுகமாக வஞ்சம் தீர்த்துக் கொள்வார்கள். இப்பொழுது மற்ற இலாகாக்களும் கூட அந்தக் காருண்யத்தைக் காட்டத் தொடங்கிவிட்டன போலிருக்கிறதே என்று எண்ணினேன்.

ஆனால் நான் பயந்தபடி சோலைப்பாளையம் இப்பொழுதெல்லாம் தண்ணியில்லாக் காடு என்று சொல்வதற்கில்லை. நவீன வசதிகள் எல்லாம் ஏற்பட்டு விட்டன. ஆனால், இவ்வூருக்கு மாற்றலாகி வரும் உத்தியோகஸ்தர்களின் மனத்தாங்கல்களை நான் அறிந்திருந்தமையால், முதலில் பயமேயடைந்திருந்தேன். ஒரு வழியாக முருகன்மீதே பாரத்தைச் சுமத்திய வண்ணம் வந்து பதவியை ஏற்றுக் கொண்டேன்.

பட்டிக்காடாக இல்லாமலும், பட்டணப் புறமாக இல்லாமலும் இருந்தது சோலைப் பாளையம். ஒரு காலத்தில், தனிப்பட்ட ஜமீனின் நிர்வாகத்தில் அவ்வூர் இருந்ததாகவும், அப்போதெல்லாம் அது 'வானம் பார்த்த பூமி'யாக இருந்ததாகவும் அறிந்தேன். அது வன்றியும், எவ்வளவு அழகான கோவிலும் திருக்குளமும்! இக்கோவிலின் நிர்வாகத்தை ஏற்பதற்கா பயந்தோம் என்று எனக்கே வெட்கமாகக்கூட இருந்தது. பஞ்சாயத்தார் அனைவருமே வயதில் மிக இளைஞர்களாகக் காணப்பட்டனர். சுற்றுப் புறங்களிலிருந்த ஆறு வேலி நிலமும், ஆறு கட்டடங்களும், ஆறுமுகப் பெருமானுக்குச் சொந்தமாக இருந்தன. கோவிலின் தினசரிப் பூஜைக் காலங்களும், திருவிழாப் பட்டியல்களும் மிக நன்றாகவே நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஆனால், அக்கோவிலிலிருந்த ஒரு பெருங் குறையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அழகின் சொரூபமான அம் முருகனுக்கு, விழாக் காலங்களில் அலங்கரிக்கத்தக்க அணிகலன்களே இல்லை. இருந்தவையெல்லாம், பவளத்தாலும், முத்தாலும் ஆனவை. இதைப் பற்றி நான் பஞ்சாயத்தாரிடம் விசாரிக்கையில், வெகு காலத்துக்கு முன் அக்கோவிலில் நகைகளெல்லாம் திருட்டுப் போய்விட்டதாகவும், அதுமுதல் மறுமுறை செய்து வைப்பதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லையென்றும் அவர்கள் கூறினார்கள்.

நான் பதவியேற்றுப் பதினைந்து தினங்கள் கழிந்துவிட்டன. ஒருநாள் மாலை கணக்குப் புத்தகத்தின் ஏட்டைப் புரட்டியபடியே உட்கார்ந்திருந்தேன்.

திடீரென்று, ''ஆசாரியார் வந்துவிட்டார், ஆசாரியார் வந்து விட்டார்!'' என்ற கூக்குரல் எழவும், திடுக்குற்றவாறு தலை நிமிர்ந்தேன். கோவிலின் மெய்க் காவல்காரனை மாணிக்கம்தான் யாரிடமோ உரக்கக் கூறிவிட்டு, என்னிடம் வந்து, சாவிக் கொத்தைக் கொடுக்குமாறு வேண்டினான். 'எதற்கு?' என்றேன். அவன் கூறிய பதில் என்னைச் சிந்தை வியப்பில் ஆழ்த்திற்று. பொன்னு ஆசாரியார் வந்து கொண்டிருப்பதாகவும், அதற்கு முன்னால் அவன் போய் வாகன அறையைத் திறந்து, வெளிச்சம் ஏற்படுத்த வேண்டுமெனவும் கூறினான். அத்துடன், அவ்வறைக்கு இரண்டு பூட்டுக்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒரு சாவி கோவிலிலும், மற்றொன்று அந்த ஆசாரியாரிடம் இருப்பதாகவும் அவனிடமிருந்து தெரிந்து கொண்டேன். அன்று வரையில், நானும் அக்கோவிலின் வாகனங்களைப் பார்க்காததால், கையில் சாவிக் கொத்தை யெடுத்துக் கொண்டு எழுந்து சென்றேன்.

கிழ வேதியர் கோலம் கொண்ட முருகனின் தோற்றம்போல், ஏறக்குறைய எழுபது வயது மதிக்கத்தக்க ஒருவரை இரண்டு பேர்கள் அழைத்து வந்தனர். கோலும் கையுமாக இருந்த அப்பெரியவரின் முகத்தில் ஒரு அமைதியான களையே பிரகாசித்தது. அவர் என்னை நோக்கிப் புன்னகை புரிந்தவாறு கை கூப்பினார். நானும் அவருக்கு மரியாதை செலுத்தியபடி தொடர்ந்து சென்றேன்.

''ஒருவாரமாக எனக்கு உடம்பு கொஞ்சம் அசௌகரியம். இன்றைக்குத்தான் எழுந்து நடப்பதற்கு முருகன் கொஞ்சம் தெம்பை அளித்திருக்கிறான்!'' என்றார் அந்தப் பெரியவர் என்னை நோக்கி.

''ஓகோ, அப்படியா?'' என்றேன் பதிலுக்கு. நாங்கள் பேசிக்கொண்டே மடப்பள்ளிக்கு எதிர்ப்புறத்திலிருந்த வாகன அறையின் சமீபத்துக்கு வந்து சேர்ந்தோம். மாணிக்கமும் எங்களுக்கு முன்னதாகவே சென்று, இரண்டு தீவர்த்தியாட்களுடன் தயாராக இருந்தான். என்னிடமிருந்த சாவிக் கொத்தையும், பெரியவரிடமிருந்த சாவியையும் வாங்கி, இரண்டு பூட்டுக்களையும் திறந்து விட்டுக் கதவுகளைத் தள்ளினான்.

உட்புறத்தில் காற்றோட்டமில்லாமையால், 'குப்'பென்ற துர்வாடை வீசிற்று. நிரந்தர வாசியாகக் குடியிருந்த வௌவால்களும் ஆத்திரத்துடன் சீறிக்கொண்டே எங்கள் முகங்களை நோக்கி வெளிவந்தன. சற்று நேரத்துக்குப் பின்னர்தான், நாங்கள் உட்புறம் நுழைய முடிந்தது. தீவர்த்திகளின் ஒளியில் அங்கே நான் கண்ட காட்சி, என்னை ஸ்தம்பித்து நிற்க வைத்து விட்டது! புத்தம் புதியன போலிருந்த மயில்வாகனமும், ஆட்டுக்கடா வாகனமும் உயிர் கொண்ட பிராணிகள்போல் என்னைக் கம்பீரத்துடன் நோக்கின! எனது முழுக் கவனமும் அவற்றின்மீது சென்றிருக்கையில், மூடப் பெற்றிருந்த மற்ற இரண்டு வாகனங்களின் உறைகளையும் மாணிக்கம் கழற்றி யெடுத்து விட்டான். அடுத்த கணம் எனது விழிகள் திகைப்பின் மிகுதியினால்

ஒன்றி விட்டன! அவ்வளவு பயங்கரமான தோற்றத்துடன் அமைக்கப்பட்ட வாகனங்களைய நான் அதுவரையில் கண்டதில்லை.

ஒரே தலையுடன் இருந்த அந்தச் சர்ப்ப வாகனத்தின் சீறல் தோற்றம், எதிரேயுள்ளவர் மீது எச் சமயமும் பாய்ந்து விடக்கூடிய நிலையில் இருந்தது. அதன் விழிகளில் பொருத்தப்பட்டிருந்த கரும் வைரங்களோ, தீவர்த்தியின் ஒளியினால் காணுவோரின் கண்ணொளிகளையும் பறித்துச் சென்றன. அதன் சமீபமாக இருந்த பூத வாகனமோ, மற்றவைகளை விடக் கலையின் சிகரத்தையே கடந்து விட்டது. நெருப்புக் கோளங்கள் போன்ற பெரும் விழிகளும், பருத்து நீண்டிருந்த நாசியும், கோரப் பற்களும், சுருட்டையான தலைக்கேசமும் கொண்டிருந்த அவ்வுருவம் — பூதத்துக்கெல்லாம் மேலான பூதசக்கரவர்த்தியாகத்தானிருக்க வேண்டும்! அப்பூத வாகனத்தின் மீது வைத்த விழிகளைத் திருப்ப மனமில்லாமல் நின்றேன். ஆனால், அது மிகப் பழைமையானது. அதன் மேலிருந்த வர்ணங்களெல்லாம் உதிர்ந்து போய், பெரும்பாலான பாகங்களில் உட்புறத்தின் மரம்கூடவெளிக்கு நன்றாகத் தெரிந்தது.

பெரியவர் பூத வாகனத்தின் சமீபம் வந்து நின்று கொண்டு, அதன் அங்கங்களைக் கையால் தடவிக் கொண்டே உற்று நோக்கினர். அவரது செய்கையின் காரணம் விளங்காமல் நான் வியப்புடன் நின்றேன்.

''நல்ல வேளை! முருகன் காப்பாற்றி விட்டான்! இதற்குக் கரையான் அரிப்பு ஏற்பட்டு விட்டதோ என்று நேற்றிரவுதான் சந்தேகம் தோன்றிற்று. அதற்காகத்தான் இன்று காலையிலே மாணிக்கத்திடம் சொல்லி யிருந்தேன். இன்னும் எட்டுநாட்கள்தானே இருக்கின்றன, மாசிப் பூரம் திருவிழாவுக்கு. அன்றுதான் இந்தப் பூதவாகனத்தைப் புறப்பாடு செய்கிற வழக்கம். ''போனவருஷம் இது ஜொலிக்கலேங்க. இவ் வருஷம் இதற்கு ஒரு தரம் வர்ணம் வைத்து விடலாமா என்றுதான் பார்க்கிறேனுங்க'' என்றார் பெரியவர்.

நான் அவரது யோசனையை ஆமோதித்த வண்ணம் வெளியே வந்தேன். என் மனத்தில் பலவிதக் கேள்விகள் எழுந்தன. கோயிலிலுள்ள வாகனங்களின் மீது இவருக்கென்ன சிரத்தை? அதிலும், அந்தப் பூத வாகனத்தின் மீது மட்டிலும் இவருக்கு அவ்வளவு கருத்து ஏன் ஏற்பட வேண்டும்? இதுவன்றி, வாகன அறையின் மற்றொரு சாவி இவரிடம் எதற்காக இருக்க வேண்டும்? இத்தகைய சந்தேகங்களெல்லாம் பரபரப்புடன் என் நெஞ்சில் குவிந்தன. ஆனால், முன்பின் பழக்கமில்லாத அந்தப் பெரியவரிடமே இவற்றைக் கேட்க என் மனம் இடம் தரவில்லை.

நான் சோலைப்பாளையத்தில் பதவியேற்று ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன.

ஒரு நாள் மாலை பொன்னு ஆசாரியார் நோயுடன் இருப்பதாகவும் என்னை அவசியம் பார்க்க விரும்புவதாகவும் அறிந்து புறப்பட்டேன். சில தினங்களாக அவரை நான் காணாததால், எனக்கும் அவரைப் பார்க்கும் ஆவல் ஏற்பட்டது. அலுவல்களை முடித்துக் கொண்டு அவரது வீட்டுக்குச் சென்றேன்.

2

கூடத்துப் புறத்திலிருந்த கட்டிலில், மான்தோலின் மீது அவர் படுத்திருந்தார். என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றுவிட்டு, பக்கத்திலிருந்த பெஞ்சிமீது உட்காருமாறு கூறினர். நான் உட்கார்ந்தபின், கதவோரத்தின் மூலையில் நின்ற தம் மனையாட்டியை அப்பால் செல்லுமாறு உத்தரவிட்டார். வழக்கமான குசலத்துக்குப் பின், அவருக்கு இருதய நோயும், இருமலும் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன். அவர், மெல்லிய குரலில் பேசினர்.

''நான் உங்களிடம் கூறப்போவது — குடும்பரகசியம், முருகனின் ரகசியம் இரண்டுமே யானது. இதைப் பெண்மணிகளின் முன்னிலையில் எப்படிப் பேசுவது? அவள் என் உயிருக்குயிரான பத்தினியானாலும், தர்ம புத்திரரின் சாபத்துக்குட்பட்ட பிறவிதானே?




ஆனாலும், இப்பொழுது அவனுக்குத் தெரிந்தால் பாதகமில்லை!''

இவ்வாறு கூறிவிட்டு ஹாஸ்யத்தின் மிகுதியினால் சிரிக்க முடியாமல் இருமினார். அதைத் தொடர்ந்தவாறு, மிகுந்த சிரமங்களுடன் கீழ்க்கண்ட வரலாற்றைக் கூறத் தொடங்கினார் பொன்னு ஆசாரியார்.

இருநூறு வருஷங்களுக்கு முன், சோலைப் பாளையம் கிராமம் ஜமீன் காளிங்கராயரின் நிர்வாகத்தில் இருந்தது. அவரது மூதாதையர்களெல்லாம் நல்ல சாஸ்திரங்கள் அறிந்தவர்களாகவும், தெய்வ பக்தி மிகுந்தவர்களாகவும் இருந்தனர். எக்காலத்திலோ — சோழ அரசரால் உருவாக்கப் பெற்றிருந்த முருகன் கோயிலின் நிர்வாகம், படிப்படியாக இவர்களது ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. இவர்களால் முருகன் கோயிலுக்கு ஏராளமான நிபந்தங்களும், அணிகலன்களும் ஏற்படுத்தப் பெற்றிருந்தன.

காளிங்கராயரின் முப்பாட்டனார் காலத்தில், நவாப் அரசர்களின் ஆளுகையும், படையெடுப்பும் நாடெங்கும் பிரபலமாயிருந்தன. அக்காலத்திய நவாப் மன்னர்கள், நாடு பிடிக்கும் ஆசையோடு மட்டும் இராமல், கோயில்களிலுள்ள பொருள்களையும், ஆபரணங்களையும், கொள்ளையடித்துச் செல்லுவதிலும் மகிழ்ச்சி கொண்டிருந்தனர். அவர்களது படையெடுப்புக்களால், எவ்வளவோ ஆலயங்களும், விக்கிரகங்களும் நாசமடைந்த செய்திகள் எங்கும் மலிந்து கிடந்தன. கூடிய சீக்கிரத்திலேயே, நவாப்பின் படையெடுப்பு சோலைப்பாளையத்துக்கும் நேர்ந்து விடலாமென அப்போதிருந்த ஜமீன்தார் மிகக் கவலை கொண்டார். ஆகவே, முருகனுக்காக இருந்த மதிப்பற்ற ஆபரணங்களையெல்லாம் ரகசியமாக அகற்றி, அவற்றை ஒரு இரும்புப் பேழைக்குள் வைத்து, எங்கேயோ புதைத்து வைத்து விட்டார். இச் செயலை, அவர் மிக இரகசியமாகவே செய்து முடித்தார். ஏறக் குறைய ஒரு மாதம் வரையில் நவாப்பின் படையெடுப்பைப் பற்றிய பயங்கள் நாட்டில் இருந்து கொண்டேயிருந்தன.





ஆனால், எதிர்பார்த்தபடி எதிரிகளின் படையெடுப்பு நிகழவில்லை. எதிர்பாராத நிலையில் ஜமீன்தார்தான் மாரடைப்பினால் திடீரென்று காலமாகி விட்டார். அந்த ரகசியமும் அவருடைய இதயத்துடனேயே புதைந்து விட்டது!

அந்த ஜமீன்தார் காலமானதும், விஷயம் அறிந்த அவரது புதல்வர்கள் சந்தேகமுற்ற இடங்களிலெல்லாம் பூமியைக் குடைந்து தேடத் தொடங்கினர். அவர்களோ, அவர்களுக்குப் பின் தோன்றிய இரு சந்ததியார்களோ எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் வீணாயின. கடைசியாக, காளிங்க ராயரும் அப்புதையல் பொருளைக் கண்டெடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

இக்காலத்தில்தான், பொன்னு ஆசாரியாரின் மூப்பாட்டனாரான பொன்னம்பல ஆசாரி, பிழைப்பின் நிமித்தமாகச் சோலைப் பாளையம் சமஸ்தானத்துக்குக் குடி வந்தார். தச்சு வேலையிலும், நுட்பமான சிற்ப வேலைகளிலும் அவர் அபாரமான கைத்திறமை படைத்தவர். அவரது திறமையைக் கண்ட ஜமீன்தார், நாளடைவில் அவரிடம் மிகுந்த பற்றுதல் கொண்டு விட்டார்.


இதற்கிடையில், ஜமீன்தார் காளிங்கராயரின் குடும்பத்தைப் பற்றியும் சிறிது கூற வேண்டியிருக்கிறது. அவருக்குக் காலக்கிரமத்தில் அநேக புத்திரப்பேறுகள் ஏற்பட்டு, குழந்தைப் பருவத்திலேயே இறந்தும் விட்டன. கடைசியாக, ஐந்து பேர்களுக்குப் பின் பிறந்த சேஷராயன் ஒருவனே ஆயுளில் கெட்டியாகத் தப்பியவன். ஆனால், அப்புதல்வன் பிழைத்திருந்ததைக் காட்டிலும் இறந்திருந்தாலே நன்றாயிருந்திருக்கும் என்று சொல்லக்கூடிய அளவுக்குச்சேஷராயன் வாலிபப் பருவத்தில் மகா துர்க்குணவானாகவும், மூர்க்கனாகவும் இருந்தான். ஜமீன் அரசாட்சிக்கே அவன் ஒரு தூமகேதுவாக விளங்கினான்!

பொன்னம்பல ஆசாரி சோலைப் பாளையத்துக்கு வந்த காலத்தில் சேஷராயனுக்கு இருபத்தைந்து வயது. அக்காலத்தில்தான், ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், போர்த்துக்கீசியர்களுமாக நாட்டைச் கொண்டு போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள், இந்தியக் குடிமக்களின் செல்வாக்கு மிகுந்தவர்களையெல்லாம் தங்களிடம் வசப்படுத்திக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர். சேஷராயன் பிரெஞ்சுக்காரர்களின் நட்பில் மதிமயங்கிக் கிடந்தான். அதுமட்டுமல்லாமல், கெட்ட சகவாசங்களுடன் ஊர் திரிவதும், ஜமீன்தாருக்கு எதிராகக் கலகங்கள் விளைவிப்பதுமாக இருந்து வந்தான். தந்தையான காளிங்கராயரும் அவனை அடக்க வகை தெரியாமலே மனம் உடைந்திருந்தார்.

ஒரு வருஷத்துக்குள்ளாக, பொன்னம்பலத்தின் உழைப்புக்களால், கோவிலுக்குத் தேவையான தேர், படிச் சட்டங்கள் முதலியனவெல்லாம் உருவாகி விட்டன. அத்துடன், முருகனுக்காக அவர் செய்திருந்த சர்ப்ப வாகனமும், சூரபத்மனின் உருவமும் காளிங்க ராயரைக் கலைப் பித்தராகவே மாற்றி விட்டன: பொன்னம்பலத்தின் உழைப்பிலும் நாணயத்திலும் மனம் இளகிய அவர், கோவிலுக்கு அருகிலிருந்த ஒரு இடமே அவருக்கு வீடு கட்டிக் கொள்ளுவதற்குச் சன்மானமாகவே வழங்கினார்.

உலகத்தில் சிற் சில பேர்களுக்குத்தான் கைராசி யுண்டென்று கூறுவார்களல்லவா? அத்தகைய கைராசி பொன்னம்பலத்தினிடம் இருந்தது. மகா உழைப்பாளியான அவர், வீடு கட்டுவதற்காக, தம் இரு பிள்ளைகளின் உதவியுடன் அஸ்திவாரம் பறிக்கத் தொடங்கினார். ஒருநாள் அந்திப் பொழுதின் மங்கிய ஒளியில் ஏறக்குறைய நூறு வருஷங்களாக ஒளிந்து கொண்டிருந்த இரும்புப் பேழை அவரது கைகளில் சிக்கிற்று! இதற்கு முன்னால் எவ்வளவோ பேர்களும் அவ்விடங்களிலேயே தோண்டிப் பார்த்துத் தோல்வியும் அடைந்திருந்தனர்! மிகப் பிரயாசையுடன் பேழையைத் திறந்து பார்த்த பொன்னம்பலம் திகைப்பின் மிகுதியால் சிலைபோல் நின்று விட்டார். முருகனின் உடைமைகளான நவரத்தினக் கவசமும், பதக்கமும், வாகுவலயங்களும், தங்க உருத்திராட்சமும், வைரக் கற்கள் பதிப்பிக்கப் பெற்ற வேலும் 'தகதக'வெனப் பிரகாசித்தன! அடுத்த கணமே அவர், தம் மைந்தர்களுக்குப் புத்திமதிகள் கூறிவிட்டு அதை ஒரு கூடைக்குள் வைத்து எடுத்துக் கொண்டு ஜமீன்தாரின் பங்களாவை நோக்கிச் சென்றார். ஒரு மறைவான பாதையின் வழியாக அவர் செல்லுகையில், ஜமீன்தாரின் புத்திர சிகாமணியான சேஷராயனிடம் சிக்கிக் கொண்டு விட்டார்! குதிரையின் மீதிருந்த அவன், ஆசாரியாரின் மீது சந்தேகப்பட்டு விசாரிக்கத் தொடங்கவும் அவர் முதலில் உளறத் தொடங்கினார். பிறகு சமாளித்துக் கொண்டு ஏதோ ஒரு சமாதானத்தைக் கூறிவிட்டுத் தப்பித்துச் சென்று பங்களாவை யடைந்தார்.

நெடுங்கால முயற்சிகளின் தோல்வியினால் சலிப்படைந்திருந்த காளிங்கராயருக்கு அப்புதையல் பொருள்களைக் கண்டதும் பேரானந்தமே உண்டாயிற்று. மகிழ்ச்சியின் மிகுதியினால், அவர் தம்மையும் மறந்தவாறு ஆசாரியாரைத் தழுவிக் கொண்டார்.


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும்
வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப்
போன்ற வெண்மையை அளிக்க வேண்டும்
என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷ
மாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள்
சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு
அவதி கொடுக்கா திருக்கவே யாவரும் அறிந்த
இப்பற்பசையில்டாக்டர் ஆர்.ஜே.போர்ஹான்
டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறை
யில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது.
ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணுளதும் மற்றும்
கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ்
கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே
கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி
விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரிய
முள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து
பளிச்சென இருக்கும் வெண் பற்களையும்
நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும்
உடையவரெனப் பெருமைப்படலாம்!
தன் தலைவரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
M-10



விருந்தினர் ஒருவர் கௌரவிக்கப்பட்டார் — 2,400 ஆண்டுகளுக்கு முன்னால்

புகழ்பெற்ற கிரேக்க யாத்திரிகரும் ஆசிரியருமான டெஸியாஸ் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்தார். அவர் பாரஸீக மன்னர் மாளிகைக்குச் சென்றிருந்தபொழுது மன்னரும் ராணி அன்னையும் அவருக்கு இரண்டு வாள்கள் பரிசளித்தனர். "அவை இந்திய எஃகினால் செய்யப்பட்டவை." இந்தச் செய்தியை அவர் "பர்ஸிகஸ்" என்ற தமது பிரபல நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

அது 2,400 ஆண்டுகளுக்கு முன். இந்திய எஃகு உலகப் பிரஸித்தி பெற்றிருந்த காலம். இன்று எஃகுத் தொழில் மறுபடியும் நாட்டின் கவனத்தில் மிக முதன்மையான இடம் பெற்றிருக்கிறது. இந்தியாவின் இயந்திரத் தொழில் முன்னேற்றத்திற்கு உறுதியான அடிப்படை அமைக்க, நாட்டின் எஃகு உற்பத்தியானது விரைவாக விஸ்தரிக்கப் பட்டு வருகிறது.

டாடா ஸ்டீல் நாட்டின் பணிக்கே

TM

தம் முன்னோரால் மறைந்துவிட்ட ஆபரணங்களைத் தேடுவதில், நெடுநாட்களாகச் சேஷராயனும்கூட முனைந்திருந்தான். அவனது முயற்சிக்கு அவை அகப்பட்டிருந்தால் என்னவாகுமென்பதை நினைத்து, பெரிய பீதியே யடைந்திருந்தார் காளிங்க ராயர். ஏனெனில், அவன் பிரஞ்சு வியாபாரிகளுடன் கொண்டிருந்த தொடர்புகளையும் அவனது முயற்சிக்கு உதவி செய்து கொண்டிருந்த அவர்களையும் பற்றி ஊரில் பிரசித்தமாகியிருந்தது. இப்போது அவை பொன்னம்பலத்தின் மூலம் கிடைத்துவிட்டதை முருகன் அருளாகவே வியந்து களிப்படைந்தார். ஆனாலும், அவர்களது மகிழ்ச்சிகளுக்கெல்லாம் எதிரிடையான பேராபத்து அவர்களின் பின்புறத்தில் காத்திருந்தது!

மூன்று தினங்களாயின. திடீரென்று சோலைப் பாளையம் சமஸ்தானத்திலிருந்த குடிமக்கள் அனைவரும், ஒரு பயங்கரச் செய்தியின்மூலம், பெரும் அதிர்ச்சியே யடைந்துவிட்டனர். கோயிலின் பொக்கிஷ அறைக்குள் வைக்கப் பெற்றிருந்த தெய்வ ஆபரணங்களனைத்தும் கொள்ளை போய்விட்டன! இதற்குக் காரணமானவர்கள் யாரென்பதை ஒருவராலும் நிர்ணயிக்கவே முடியவில்லை.

ஆனால் தனிமையான ஒரு இடத்தில் சேஷராயனே பொன்னம்பல ஆசாரியாரை அநேகம் சித்திரவதைகளுக்குள்ளாக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது இரவின் மூன்றும் ஜாமம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவன் உள்ளத்திலோ ஆசாரியார் சுயநலத்துடனே, அல்லது தந்தையின் கூட்டுறவுடனே அவற்றை மறைத்திருக்க வேண்டு மென்ற எண்ணம் மேலோங்கி யிருந்தது. ஆசாரியார், சேஷராயனின் கொடுமைகள் தாங்கமாட்டாது, அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினார். தாமே சுயமாக அவற்றைக் களவாடி வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டு அவனைத் தம் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

அவன் வீட்டின் முன்புறத்தில் இருக்கையிலேயே, அவர் பின்புறமாகச் சென்று விட்டார். வெகு நேரத்துக்குப் பின்பும், அவர் திரும்பாமையால், சேஷராயன் கடுஞ்சினம் கொண்டு, உட்புறத்தின் வழியாகப் புகுந்து தேடிய வண்ணம் புழக்கடைப்புறத்துக்கு வந்தான். அங்கே மரத்தின் ஒரு கிளையில் பொன்னம்பல ஆசாரியார் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு சவமாகித் தொங்கிக் கொண்டிருப்பதைக் அவன் கண்டான்.

பொன்னம்பல ஆசாரியார் தூக்கில் தொங்குவதற்கு முன்னால் ஆற்றிய அரும் பெருஞ்செயல் ஜமீன்தார் ஒருவருக்குமட்டுமே தான் தெரியும். சேஷராயன் கோயில் நகைகளைக் கைப்பற்றத் திட்டம் இட்டிருக்கிறான் என்பது தெரியவே பொன்னம்பல ஆசாரியார் ஒரு உபாயம் செய்தார். இரவு பகலாக முனைந்து ஒரு அற்புத பூத வாகனத்தை அமைத்தார். அதனுள் ஆபரணங்களைப் பத்திரப்படுத்துவதற்காக ரகசிய அறை ஒன்றையும் அமைத்தார். சேஷராயனின் திட்டத்தை முறியடிக்க, ஜமீன்தாரின் ஆலோசனையின் பேரில் தாமே அவ்வாபரணங்களைத் திருடி வந்து, பூத வாகனத்துக்குள் பத்திரப் படுத்தினார். அந்த ரகசியம் வெளிப்படாமல் இருக்கத் தாமே தம் உயிரை மாய்த்துக் கொண்டார். அதே பூதவாகனம்தான் இது!

இவ்வாறாக, பொன்னம்பல ஆசாரியாரால் கண்டெடுக்கப்பட்ட செல்வம், அவராலேயே காக்கப் பெற்றும் விட்டது. அவரை யொட்டியே, எங்கள் மூதாதையர்களும் அப்பொருட் செல்வத்தையும், கோயிலின் உரிமைகளையும் வாழையடி வாழையாக இதுவரையில் காப்பாற்றி என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். தக்க சமயம் வரும் வரையில் இப்பொருளைக் காப்பாற்றி, முருகனிடமே சேர்ப்பிக்க வேண்டுமென்ற அவர்களது கனவு இப்பொழுதுதான் நிறைவேறுகிறது. இதுவரை கோவில் நிர்வாகத்தை நடத்தி வந்தவர்களிடம் தன்னலமே ஓங்கியிருந்தது. இப்பொழுதுதான் சரியான பஞ்சாயத்தும், தங்களைப் போன்ற நல்ல நிர்வாகியும் கிடைத்திருக்கிறீர்கள்.

அதோடு சந்ததியின்றியே எனக்கும், முருகனின் அழைப்பு நேரிடவிருக்கும் இத் தருணத்தில் நீங்கள் வந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார் பொன்னு ஆசாரி.

சென்னை பட்டமளிப்பு விழாப் பிரசங்கம்—1914

பெண் கல்வி

சமீபத்தில் நமது மாகாணத்தில் பெண்களுக்கென்று ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. புதுயுகம் ஆரம்பமாகி விட்டது என்பதையே இது குறிக்கிறது. இனி பெண் கல்வி நாட்டில் வேகமாகப் பரவும். அதற்குத் தேவையான ஆசிரியைகளை இக் கல்லூரி வழங்கும் என்றும் நம்புகிறேன். படித்த ஆண்கள் இன்று இரட்டை வாழ்க்கை நடத்துகிறார்கள். வீட்டில் ஒரு மாதிரியும் வெளியுலகில் ஒரு மாதிரியும் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதற்குக் காரணம் வீட்டுப் பெண்கள் போதிய கல்வி யறிவில்லாமலிருப்பதே. பெண்களும் கல்வி யறிவு பெற்று விட்டார்களானால், ஆண்களுக்கும் பெணகளுக்குமுள்ள ஏற்றத்தாழ்வு குறைந்து போகும். ஆண்களின் இந்த இரட்டை வாழ்க்கையும் ஒழிந்து போகும். அதுமட்டுமல்ல, வருங் காலத்தில் நமது இளைஞர்கள் பணமாக வரதட்சிணை கோராமல், பெண் கல்வியையே வரதட்சிணையாகக் கோருவார்கள் என்றும் நம்புகிறேன்.

பி. எஸ். சிவஸ்வாமி அய்யர்

உற்பத்தி இலாகா

அகில இந்திய கதர் மற்றும்

ரூ. 1,00,000

இந்திய சர்க்கார், அகில இந்திய கதர் மற்றும் கிராமத் தொழில்கள் போர்டின் ஆலோசனையுடன் வெற்றிகரமான குடிசை நூற்பு இயந்திர யூனிட்டு கண்டுபிடிப்புக்கு ரூ. 1,00,000, பரிசு அளிக்க முடிவு செய்திருக்கிறது. இந்தப் பரிசளிப்புக்குரிய முக்கிய ஷரத்துக்கள் பின்வருமாறு :—

கண்டு பிடிக்கப்படும் இயந்திரத்தில் நான்கு அல்லது மேற்பட்ட கதிர்கள் கூடிய சர்க்கா இருப்பதுடன் திறம்படத் திறப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும், சுற்றுவதற்குமான உபகரணங்கள் இருக்க வேண்டும்.

2. நூற்பு இயந்திர செட்டு கிராமப் பகுதிகளில் மிகச் சிறிய குடிசைகளிலும் கையால் அல்லது காலால் வேலை செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

3. முழு செட்டின் விலை பெருவாரியாகத் தயாரிக்கப்படுமாயின் ரூ. 150/-க்கு மேல் போகக் கூடாது.

4. இந்திய பஞ்சு வகைகளான வகட், விஜய், புரோச் விஜய் (கொட்டைப் பஞ்சு) அல்லது நாட்டில் வழக்கமாகப் பயிராகும் இதர பஞ்சு வகைகளைக் கொண்டு செட்டில் நூல் நூற்கக் கூடிய வசதி யிருக்க வேண்டும.

5. 12 முதல் 18 நெம்பர், 18 முதல் 20 நெம்பர், 20 முதல் 32 நெம்பர், 32 முதல் 40 நெம்பர் மற்றும் 40 முதல் 60 நெம்பர் நூல் வகைகளை செட்டு நூற்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரே மாதிரியான கனமும் முறுக்கும் கொண்டு நூற்கக் கூடியதாயும் அதைத் தவிர புரு இழை நெம்பர் மாறுதல், உறுதியில் வித்தியாசம், மற்றும் நிர்ணயிக்கப்படக் கூடிய இதர சோதனைகளிலும் தேர்வு பெறக்கூடியதா யிருக்க வேண்டும்.

6. செட்டு மொத்தத்தில் 8 மணி நேர வேலை தினத்தில் குறைந்த பக்ஷம் (பருத்தியிலிருந்து நூல்வரை) கார்டிங் வேலையில் மணி ஒன்றுக்கு 14 முதல் 15 தோலா முடிக்கக் கூடியதாயும் சுற்றுவதில் மணி ஒன்றுக்கு 5 முதல் 8 தோலா முடிக்கக் கூடியதாயும் 12 கண்டு நூல் உற்பத்தி செய்யக்கூடிய திறன் வாய்க்கப் பெற்றிருக்கவேண்டும். மற்றும்,

மந்திரி காரியாலயம்

கிராமத் தொழில்கள் போர்டு, பம்பாய்-1

பரிசு பெறுங்கள்

7. செட்டு, கிராமங்களில் குறிப்பாக அதில் வேலை செய்பவர்களாலேயே அல்லது கிராமத் தொழிலாளர்களால், பூட்டக் கூடியதாயும் பழுது பார்க்கக் கூடியதாயும் சர்விஸ் செய்யக் கூடியதாயும் இருக்க வேண்டும்.

குடிசை நூற்பு இயந்திர யூனிட்டின் விரும்பப்படும் மாதிரிகளின் பேப்பர் டிராயிங்குகள், விளக்கக் குறிப்புகள் ஸ்பெஸிபிகேஷன்கள் திறமைச் சோதனைகளைக் குறித்த அறிக்கைகள் மற்றும் அதன் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைப்பது சம்பந்தமாகவும் அதன் உறுப்புகளைச் செய்வதற்கான வசதிகள் சம்பந்தமான தகவல்கள் கண்டுபிடிப்பவர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

இந்திய சர்க்காரின் ஆலோசனையுடன் நியமிக்கப்படும் நிபுணர்களின் குழு, டிராயிங்குகளில் காட்டப்பட்டிருக்கும் மாடல்களைப் பரிசிலனை செய்து, சிறந்த ரக—அல்லது மிக்க தகுதியானது எனக் கருதப்படும் மாடல் அல்லது மாடல்களைப் பரிசளிப்புக்குத் தேர்ந்தெடுப்பார்கள். பரிசளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாடல் அல்லது மாடல்கள் இந்திய சர்க்காரின் சொத்தாகிவிடும். அது சம்பந்தமான சகல உரிமைகளும் இந்திய சர்க்காரைச் சேர்ந்ததாகும் **மாடல்கள், டிசைன்கள், குறிப்புகள் மற்றும் இதர சம்பந்தப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 1957 ஜூன் 30உ.** இந்தப் பரிசுத் திட்டத்திற்கான விவரமான விதி முறைகளை, "அகில இந்திய கதர் மற்றும் கிராமத் தொழில்கள் போர்டு (பரிசுப் பிரிவு) சீப் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர், மிஸ்திரி பவன். டின்ஷா வாச்சா ரோடு, பம்பாய்-1" என்ற விலாசத்திற்கு எட்டு அணா கட்டணத்துடன் எழுதி விண்ணப்பித்துக் கொண்டு பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறிய கட்டணத்தை மேற்படி ஆபீஸருக்கு போஸ்டல் ஆர்டர் அல்லது மணியார்டர் மூலமோ அனுப்ப வேண்டும். செக்குகள் அல்லது தபால் வில்லைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேற்குறித்த பரிசைத் தவிர, இப்போதிருந்து வரும் ஒரு யூனிட்டின் மாடல்களில் செய்யப்படும் சிறிய அல்லது பெரிய மாதிரியான அபிவிருத்திகள் எதுவும், நிபுணர் குழுவின் அபிப்பிராயத்தில், தயாரிக்கப்படும் சரக்குகளின் தரத்தில் அல்லது அளவில், அல்லது இரண்டிலுமே, கணிசமான அளவுக்கு அபிவிருத்தி காட்டக் கூடியதாக அமைந்திருந்தாலும் அல்லது அதன் பொதுப்படையான திறமையை அதிகரிப்பதற்கும், இப்போதுள்ள இயந்திர அமைப்பின் இயங்குத் தன்மையின் அபிவிருத்திக்கும் உதவியாக இருந்தாலும் அவைகளுக்காகத் தக்க பரிசுகளைக் கொடுக்க போர்டு முடிவு செய்திருக்கிறது. இந்தப் பரிசுக்குரிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

DA-735 (19)

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

63

மனிதர்களாகிய நாம், உயிர் கொண்ட பிராணிகளனைத்தையும் நம்முடைய உறவினர்களாகவும் நம்முடன் ஒரு குடும்பமாகவும் பாவிக்கவேண்டும். இப்படிச் சகல பிராணிகளுடன் சகோதரத்துவம் கொண்டாடுவது நம் உரிமையுமாகும்; கடமையுமாகும்.

பிராணிகளைப் பற்றிய இந்த என் கொள்கை டார்வின் சொன்னபடி குரங்குமட்டிலு மல்ல—குதிரை, ஆடு, சிங்கம், சிறுத்தை, பாம்பு, தேள் இத்தகைய எல்லா ஜந்துக்களும் அடங்கக் கொள்ளும். அந்த ஜந்துக்களுக்கு இந்தச் சகோதர உணர்ச்சி யிருக்க முடியாது. ஆனால் உணர்வு பெற்ற மனிதர்களாகிய நமக்கு இந்த 'அடங்கல் சகோதர உணர்ச்சி' கடமையாகும். இது என்னுடைய கொள்கை. என்னுடைய வாழ்க்கைக்கு இது அடிப்படையான தர்மம். எல்லாருமே இந்தத் தர்மத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. மனிதனுக்கு ஆண்டவன் ஞானம் தந்திருக்கிறான். மற்றப் பிராணிகளுக்கு அது இல்லை. ஞானஸ்வரூபியான கடவுளின் சிருஷ்டியில் மனிதனுக்குத் தான் அந்த ஞானஸ்வரூபத்தில் ஒரு பங்கு உடைமையாக இருக்கிறது. இப்படி ஞானம் பெற்ற மனிதன் சகல ஜந்துக்களிடமும் சகோதர மனப்பான்மை கொள்ள வேண்டும். சிலருக்கு இந்த ஞானம் இல்லாமலிருக்கலாம்: அல்லது இருந்து மழுங்கிப் போயிருக்கலாம். அவர்கள் கிடக்கட்டும். தன்னுடைய மேன்மையறிந்த ஒவ்வொரு மனிதனும் அந்த மேன்மையின் கடமையாகிய சர்வஜந்து சகோதரப் பான்மையைக் காப்பாற்ற வேண்டும்.

ஞானம் என்கிற தெய்விகப் பான்மையைத் தான் அடைந்திருப்பதை ஒருவன் அறியாமல் இருக்கலாம். ஆட்டு மந்தையில் ஆடுகளுடன் ஆடாக வளர்க்கப்பட்ட சிங்கக் குட்டி சில நாட்கள் வரையில் தன்னையும் ஆடாகவே பாவித்து நடந்து கொள்ளும். ஆனால் நாள் செல்லச் செல்ல தன் உண்மை சொரூபத்தை அது கண்டு கொண்டு விடும். தான் சிம்மம், ஆடு அல்ல என்று அறிந்து கொண்டு விடும். மனிதனும் தன் தெய்விகப் பான்மையை முதலில் அறியாவிடினும் பிறகு உண்மையைக் காண்பான். தெய்விக மனப் பான்மையை அடைவான்.

எல்லாருமே இவ்வாறு ஞானம் பெறாவிடினும், ஒருவன் அறிவை அடைந்தால் அது போதுமல்லவா? பிற மக்களுக்கு அது உரிமையாகும். இந்த சக்தி மனித ஜன்மத்துக்கு உண்டு என்பதை நிரூபிக்க உலகத்தில் பெரியோர்கள் பலர் ஞானிகளாக விளங்கித் தங்களுடைய தெய்விகப் பான்மையை நிரூபிக்கவில்லையா? நாம் ஏன் சந்தேகப்பட வேண்டும்? அனைவருக்கும் இந்தச் சக்தியுண்டு. உள்ளத்தில் விருப்பமும் மன உறுதியுமிருந்தால் முடியும்.

[யங் இந்தியா 8—7—26]

என்னைக் கேட்டால் ஒரு பாம்பைக் கொன்று அதன் உயிரை மாய்த்து என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்ப மாட்டேன். அதைக் கொல்வதைவிட அது என்னைக் கடிக்கப் பிரியப்பட்டால் கடிக்க விடவேண்டியதுதான். இதுவே தருமம் என்பதை நான் அறிவேன். ஆயினும், ஆண்டவன் இம்மாதிரி என்னைச் சோதித்தானானால் நான் அந்தச் சோதனையில் தோல்வி யடையலாம். என் உயிரைக் கொடுக்க எனக்குத் தைரியம் வராமற் போகலாம். நானும் தருமம் காணாத சாதாரண ஜந்துவைப் போல் நடந்து கொள்ளலாம். பாம்பைக் கொன்று என் உடலின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இப்படி நான் சோதனையில் தோற்றேனானாலும் என்னுடைய கொள்கை மாறுபடாது. என்னுடைய கொள்கையில் இன்னும் நான் ஆசைப்படும் உறுதி எனக்கு ஏற்படவில்லை. விஷப் பாம்புகளுடன் தைரியமாகவும் அன்புடனும் வாழ இன்னும் நான் கற்கவில்லை. பாம்பைக் கண்டால் பயம் போகவில்லை. அவ்வளவே. அதற்காக இன்னும் முயன்று கொண்டே இருப்பேன்.

நம்முடைய உள்ளங்களில் வேலை செய்யும் கெட்ட எண்ணங்களின் கணக்குக்கு வரம்பு இல்லை. அவற்றைவிட இந்தவிஷப் பாம்புகள் கொடியனவா? நம்முடைய உள்ளங்களில் மறைந்து கிடக்கும் விஷத்தை எடுத்துக் காட்டவே ஆண்டவன் இந்தப் பாம்புகளை நாம் காணும்படியாகத் தோற்றுவித்திருக்கிறான். நம்முடைய தீய கருத்துக்களைப் போலவே இந்தப் பாம்புகளும் புலிகளும். தீய வடிவங்கொண்ட நம்முடைய எண்ணங்களும் பாம்பு

களும் ஒரு குடும்பமாகும். நீங்களும் எங்களைப் போலவே விஷ ஜந்துக்கள் என்று இந்தப் பாம்பும் புலியும் நமக்குச் சொல்கின்றன. அந்த எச்சரிக்கையை உணர்ந்து நாம் நம்முடைய தீய எண்ணங்களை நீக்கிக் கொள்ள வேண்டும்.

விஷப் பாம்புகளையும் மிருகங்களையும் கொல்லுவதற்கு முன் மக்கள் சுகமாக வாழ்வதற்காக என்னுடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விஷக் கருத்துக்களைப் போக்க வேண்டும். என் ஆயுளை நீடித்துக் கொள்வதற்காக இந்த மிருகங்களையும் பாம்புகளையும் விஷ ஜந்துக்கள் என்று கருதி அவற்றைக் கொல்ல விரும்புகிற நான் எப்படி என்னுடைய உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிக் கொள்ள முடியும்? என் உயிரையே பெரிய பொருளாக மதித்து அதற்காகப் பிற ஜீவன்களை மாய்க்க விரும்பாமல் என் உயிரைத் தத்தம் செய்துவிட்டால், அதனால் பிறகு நல்ல ஜன்மத்தையே பெறுவேன். இவ்வாறு உறுதியான நம்பிக்கை அடைந்தேனானால் நான் எப்படி என் ஆருயிரைப் போலவே ஒரு உயிரைப் படைத்த பாம்பைக் கொல்வேன்? [யங் இந்தியா, 14-4-27]

சென்னை சர்வகலாசாலையில் சம்ஸ்கிருத ஆராய்ச்சி

டாக்டர் வே. ராகவன்

(சென்னை சர்வகலாசாலை சம்ஸ்கிருதப் பேராசிரியர்)

சம்ஸ்கிருத இலக்கிய வளர்ச்சியிலே சென்னைமா நகரம், பல்லவர் ஆட்சிக் காலத்திலிருந்தே பிரசித்திபெற்று விளங்கி வந்திருக்கிறதென்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. மயிலாப்பூரிலும், திருவல்லிக்கேணியிலும், திருவொற்றியூரிலும் சம்ஸ்கிருத விற்பன்னர்கள் பலர் வாழ்ந்து இலக்கிய சேவை செய்து வந்துள்ளனர்.

சென்னை சர்வகலாசாலை 1857-ல் தோற்றுவிக்கப்பட்டது. பழைய சம்பிரதாயப்படியும், தற்கால வழிகளிலும் சம்ஸ்கிருதப் படிப்புகளில் பரீட்சைகள் நடத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவை 1898-99-ல் முதலில் செனேட் கமிட்டியால் பரிசீலனை செய்யப்பட்டன. இவற்றுக்கான விதிமுறைகள் 1909-10-ல் அங்கீகரிக்கப்பட்டன. அந்தச் சமயத்தில்தான் திரு வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் சென்னை சம்ஸ்கிருதக் கல்லூரியை ஆரம்பித்தார். இந்தக் கல்லூரியில் காலஞ்சென்ற எஸ். குப்புசாமி சாஸ்திரியாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரோமணி பட்டப்படிப்புக்குச் சென்னை சர்வகலாசாலை அங்கீகாரம் அளித்தது.

சென்னை சர்வகலாசாலையின் நேரடியான ஆதரவின்கீழ் சம்ஸ்கிருத ஆராய்ச்சி துவங்கியது. டப்ளின் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் மார்க் காலின்ஸ் 1914 ஜூலையில் சென்னை சர்வகலாசாலையின் சம்ஸ்கிருதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டதிலிருந்து என்று சொல்லலாம். ஆயினும், ராஜதானிக் கல்லூரியில் பேராசிரியர் எம். ரெங்காச்சாரியாருக்குப் பிறகு, சம்ஸ்கிருதப் பேராசிரியராக எஸ். குப்புசாமி சாஸ்திரி 1914-ல் பதவி பெற்ற பிறகுதான் சம்ஸ்கிருத மேல் படிப்பிலும், ஆராய்ச்சியிலும் புதியதொரு உத்வேகம் ஏற்பட்டதென்று சொல்ல வேண்டும். சம்பிரதாய முறைகளிலும், தற்காலமுறைகளிலும் சிறப்புற்றுவிளங்கிய பேராசிரியர் குப்புசாமி சாஸ்திரி சம்ஸ்கிருதப் பேராசிரியர் பதவி, கீழ்த்திசை கையெழுத்துப் பிரதிகள் நிலையத்தின் க்யூரேடர் பதவி, சர்வகலாசாலையின் பாடத் திட்ட போர்டின் அக்கிராசனர் பதவி ஆகிய மூன்று பதவிகளையும் சுமார் கால் நூற்றாண்டு காலம் சிறப்புடன் வகித்து வந்து, சென்னையில் சம்ஸ்கிருதப் படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் உறுதியான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தார்.

சென்னை சர்வகலாசாலை வேதம், வியாகரணம், கோசம், மீமாம்சம், காவ்யம், அத்வைத வேதாந்தம் ஆகியவை போன்ற பல அரிய விஷயங்கள் பற்றிய இருபத்து மூன்று நூல்களை இதுவரை பதிப்பித்து வெளியிட்டிருக்கிறது.

சம்ஸ்கிருத ஆராய்ச்சித் துறையில் சென்னை சர்வகலாசாலை மேற்கொண்டுள்ள மிக முக்கியமான மற்றொரு வேலைத் திட்டம், இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பொது நூல் நிலையங்களிலும், தனி நபர்களுக்குச் சொந்தமான நூல் நிலையங்களிலும், காணப்படும் சம்ஸ்கிருத நூல்கள், அவற்றைச் சார்ந்த நூல்கள், அந்நூல்களின் ஆசிரியர்கள் ஆகியவை பற்றிய விரிவான ஜாபிதா ஒன்றைப் புதிதாகத் தயாரிப்பதாகும். இந்த வேலைக்கென, பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் தேர்ச்சிபெற்ற இரண்டு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுமார் நானூறு ஜாபிதாக்களும், பட்டியல்களும் ஆராய்ந்து வகைப்படுத்தப்பட வேண்டியுள்ளன என்பதிலிருந்தும், 1949-ல் வெளியிடப்பட்ட நானூறு பக்கங்கள் கொண்ட முதல் புத்தகத்தில் அகராதி வரிசையில் முதல் எழுத்து மாத்திரமே இடம் பெற்றுள்ளது என்பதிலிருந்தும் இந்த வேலை எவ்வளவு மகத்தானதென்பதை ஒருவாறு அனுமானித்துக் கொள்ளலாம்.

நான் சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து, சுமார் 20,000 கையெழுத்துப் பிரதிகள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வந்திருக்கிறேன். ஐரோப்பிய நூல் நிலையங்களிலுள்ள, தொகுக்கப்படாத கையெழுத்துப் பிரதிகளைப் பெரிய அளவில் ஆராய்ந்தறிவதற்கு இதுவே முதல் முயற்சியாகும். சம்ஸ்கிருத ஆராய்ச்சித் துறையிலே சென்னை சர்வகலாசாலையின் சம்ஸ்கிருதப் பிரிவு தலைசிறந்து விளங்குகிறது. வெளிநாடுகளிலிருந்து சம்ஸ்கிருத நிபுணர்கள் பலர் சமீப காலமாக இங்கு வந்து போவதே இதற்குப் போதிய சான்றாகும்.



கடல் கொண்ட கனவு

அத்தியாயம் 29

திருமண உறவு

"ஐந்தும் கலந்த மயக்கமான இந்த உலகில், நிலவைப் போன்று உள்ளத்தை மயக்கக் கூடிய மந்திர சக்தி வேறு எதற்கு உண்டு?" என்று கேட்டாள் தரங்கவல்லி. வாழ்வைத் துறந்த பிறகு அவள் இப்பொழுதுதான் இயற்கையின் அழகில் இத்தனை தூரம் மனம் ஈடுபட்டுப் பேசியிருக்கிறாள்!

வலம்புரித் தீவின் அரச மாளிகையிலே மேல் மாடியிலிருந்த நிலா முற்றத்தில், தரங்கவல்லியும் யாழ் நங்கையும் பளிங்குக் கட்டிலிலே அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது இன்பமான வைகாசிப் பௌர்ணமி.

"நங்கை! இந்த உலகில் தெளிந்த நீல வானமும், அழகையே அலைகளாக வீசும் நீலக் கடலும், அமுத தாரைகளைப் பொழிகிற பூர்ண நிலவும்போல், இந்த மனத்தை மயக்கக்கூடிய இன்ப சக்தி வேறு எதற்கும் இல்லையல்லவா?" என்று மீண்டும் கேட்டாள் துறவி அம்மையார்.

"ஏன் இல்லை? பேரியாழுக்கு அந்த அற்புதமான ஆற்றல் உண்டு! நிலவையும் நீல வானத்தையும், அழகுக் கடலையும் ஒருமித்து நரம்புகளிலே தருகிற மந்திர சக்தி பேரியாழுக்கு உண்டு! சந்தேகமில்லை. ஆனால் அந்த ஆற்றல் எளிதில் கை வந்து விடாது. அதற்குத் தவம் செய்ய வேண்டும்!" என்றாள் யாழ் நங்கை.

தான் எதிர்பார்த்த மறுமொழியை யாழ் நங்கை சொல்லி விட்டதாக எண்ணி ஒரு திருப்தி ஏற்பட்டது, தரங்கவல்லிக்கு!

"நங்கை! இப்படி நீ சொல்லுவாய் என்று எதிர்பார்த்தே நான் நிலவின் மந்திர சக்தியைப் பற்றி அவ்விதம் கூறினேன். உண்மையில் உன்னுடைய இப்பொழுதைய மன நிலை எப்படியிருக்கிறது என்று பார்க்கத்தான் அந்த வார்த்தைகளைச் சொன்னேன். மெய்யாகவே சொல்லுகிறேன்: நிலவின் குளுமை, தென்றலின் இன்பம், இளவேனிற் காலத்தின் மயக்கம், கடற்கரையிலே உள்ள தென்னஞ் சோலை அல்லது தடாகக் கரையிலே உள்ள நந்தவனம் — இத்தனையின் சுகமும் பேரியாழுக்கு உண்டு. அதைப்போலவே புத்த சரணங்களுக்கும் உண்டு. அப்பர் சுவாமிகளின் பாடலைக் கேட்டிருக்கிறாய் அல்லவா?

மாசில் வீணையும்
    மாலை மதியமும்
வீசு தென்றலும்
    வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை
    பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
    இணையடி நீழலே!"

என்று மெல்லிய குரலிலே பாடினாள் தரங்கவல்லியான துறவியம்மை. அவளுடைய குரலின் உருக்கமும், பாடலிலே கனிந்த உணர்ச்சியும் சேர்ந்து யாழ்நங்கையின் உள்ளத்தை ஊடுருவின.

சோமு

நீலக் கடலிலே காற்று தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. கடற் கரையிலே நின்ற சோலையின் தென்னை மரங்களிலே அவற்றின் கீற்றுகளுக்கு ஊடே நிலவு ஊடுருவி வந்து கொண்டிருந்தது! கலங்கிய கண்களோடு யாழ்நங்கை தரங்கவல்லியைப் பார்த்துக் கேட்டாள்:

"அம்மா! தங்களிடம் ஒரு முக்கியமான சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தாங்களோ சமண சமயத்தைச் சேர்ந்த ஒரு துறவி. ஆனால் அன்று நீங்கள் புத்தபெருமானுடைய பெருமையைப் பற்றி மனம் உருகிப் பேசினீர்கள். இன்றோ அப்பர்

சுவாமிகளின் தேவாரப்பாடலை உள்ளம் நெகிழும்படி எடுத்துச் சொல்லுகிறீர்கள். சித்தன்ன வாசல் துறவிகளைப் பற்றியும் இதே போலச் சந்தேகப்பட வேண்டிய நிலையில் இருக்கிறேன்! தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள். சமண சமயத் துறவிகளுக்கும், புத்த சமயத்துறவிகளுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சைவ சமயத்துக்கும் இந்தப் புறச்சமயங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். இந்த நிலையில் உங்களுடைய கொள்கைதான் என்ன?'' என்று கேட்டாள் யாழ்நங்கை.

புன்முறுவல் செய்து கொண்டே தரங்கவல்லி பேச ஆரம்பித்தார் :

'' நங்கை! தமிழ்நாட்டிலே நந்திவர்மனுடைய ஆட்சியில் ஒரு அற்புதமான சமய ஐக்கியம் ஏற்படப் போகிறது. ஒரு அற்புதமான மொழி ஐக்கியம் உண்டாகப் போகிறது. ஒரு அற்புதமான சமூக ஐக்கியமும் நிலைபெறப் போகிறது. எதிர் காலத்தில் நமது தமிழ் நாட்டின் சரித்திரத்தை எழுதப் போகிறவர்கள் நந்திவர்ம பல்லவன் எந்த மதத்தினரை ஆதரித்தான், எந்த மதத்தினரை வெறுத்தான் என்பதில் பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறப் போகிறார்கள். புகழ் பெற்ற வைஷ்ணவப் பெரியார்கள் தோன்றி எத்தனையோ பெரிய மகத்தான சாதனைகளைச் செய்யப் போகிறார்கள். சைவ சமய ஞானிகள் பலர் தோன்றித் தங்களுடைய சித்தாந்தத்தை நிலைநாட்டப் போகிறார்கள். அதே போலச் சாக்கியர்களும் சமணர்களும் தங்களுடைய அறத்தையும் பேணித் தமிழ் மொழியை வளர்க்கப் போகிறார்கள். எதிர்காலத்தில் அரசாங்க மொழி எதுவாக இருக்க வேண்டும் என்று ஒரு பெரிய சிக்கல் ஏற்படப் போகிறது. அந்தச் சிக்கலுக்குப் பல்லவ மன்னனே ஒரு தீர்வு காணப் போகிறான். அதற்கு ஒரு முன்னோட்டமான சூழ்நிலை இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது. சமயங்களும், சமயத் தலைவர்களும், மொழிகளும், மொழித் தலைவர்களும், இந்த நூற்றாண்டிலே தங்களுக்குள் மோதிச் சோர்வடைந்து பிறகு ஐக்கியப்படப் போகிறார்கள். அதன் பின்னர் தமிழ் என்று ஒரு மொழியல்ல, தமிழ் என்று ஒரு சமயமே எல்லாருக்கும் பொதுப்படையான சமயமாக நின்று நிலவப் போகிறது! அந்தச் சமயத்தில் புறச் சமய வேறுபாடுகள் எல்லாம் ஒழிந்து சமூக ஒருமைப்பாடு நிலை பெறும். அப்படிப்பட்ட பல்லவ விஜயத்தை என் கண்ணால் கண்டு களிக்கப் போகிறேனோ இல்லையோ, நிச்சயம் நமது பிற்காலச் சந்ததிகள் அந்தப் பல்லவ விஜயத்தைத் தரிசிப்பார்கள். அந்த ஐக்கிய வெற்றியிலே வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு என்ற வேற்றுமைகளும் சமணம், சாக்கியம், சைவம், வைஷ்ணவம் என்ற பேதங்களும் நீங்கித் தமிழ் என்ற ஒரு மகத்தான சித்தாந்தம் எல்லா மக்களுடைய இதயச் சிம்மாசனத்திலும் வீற்றிருந்து ஆட்சி செய்யும்! அப்போது எல்லாச் சமய நூல்களும், எல்லாக் கவிஞர்களின் காப்பியங்களும், எல்லா மக்களுடைய எண்ணங்களும் தமிழாகவே மலரும். செந்தமிழ் நாட்டின் சரித்திரம் கல்வெட்டுக்களிலும், கோவில் பட்டயங்களிலும் அமுதத் தமிழிலே பொறிக்கப்படும். அப்படிப்பட்ட பொன்னான காலத்தை எதிர்நோக்கி நிற்கும் திருக்கூட்டத்தார்தான் சித்தன்ன வாசலிலே இப்பொழுது வாழ்கிறார்கள். சமய வெறி என்பது மறைந்து ஒழிந்தது! இப்பொழுது யார் சாக்கியர், யார் சமணர் என்று எங்களுக்கே தெரியாது! இன்னும் சொல்லப் போனால், இந்தத் துறவிகளிலே யார் துறவி, யார் அமைச்சர், யார் சந்நியாசி, யார் போர் வீரர் என்றே சொல்ல முடியாதம்மா!

நாம் எல்லாரும் பல்லவ விஜயத்துக்காகப் பாடுபடும் தொண்டர்கள்! சிலர் காஷாயத்தில் இருக்கிறோம். சிலர் அரச உடையிலே இருக்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம்!''


இவ்வாறு சொன்னாள் தரங்கவல்லி! இதைக் கேட்டுவிட்டு ஒரே மௌனமாக இருந்தாள் யாழ்நங்கை. அவளுடைய மௌனத்தின் பொருளைப் புரிந்து கொண்ட துறவியம்மை மேலும் பேச ஆரம்பித்தார் :

''நங்கை! அப்படிப்பட்ட மகத்தான பல்லவ விஜயத்தோடு இந்த வலம்புரித் தீவின் எதிர்காலமும் இணைந்துவிட்டது. இந்தத் தீவின் எதிர்காலத்தோடு புனிதமான பேரியாழின் ஒலியும் இப்பொழுது சுருதி சேர்ந்துவிட்டது. உண்மையில் சித்திராங்க பூபதியும் நீயும் செய்கிற அற்புதமான இந்தத் தியாகம் பல்லவ விஜயத்துக்கே ஆதார சுருதியாக ஒலிக்கிறது! நாங்கள் எல்லாம் வாழ்விலே செய்கிற தவத்தை நீ யாழின் நரம்புகளிலே செய்யப் போகிறாய். எங்கள் எல்லாருடைய தவத்தைக் காட்டிலும் உன்னுடைய இசைத் தவத்துக்குத்தான் அதிக வல்லமை உண்டு!''

இப்படிச் சொல்லும்போது தரங்கவல்லியின் குரல் நெகிழ்ந்தது. இதைக் கவனித்த யாழ்நங்கை சொல்லுவாள்


கால்கேட் குளோரோபில்
ஈறுகளை பலப்படுத்துகிறது
வைத்திய சோதனை நிரூபிக்கிறது!
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை முறை தவறாமல் தேய்த்தால் குளோரோபிலின் நற்பலன்கள் உங்களுக்கு கிட்டுகின்றன. ஒவ்வொரு முறை கால்கேட் குளோரோபில் உபயோகிக்கும் போதும்,
● ஈறுகளைப் பலப்படுத்துகிறது!
● வாய்நாற்றத்தை அதி தீவிரமாக ஒழிக்கிறது!
● சொத்தையாக்கும் கிருமிகளை வாயினின்று ஒழிக்கிறது!
குழந்தைகள் அதன் அதி மதுரமான சுவையை விரும்புகின்றன!
COLGATE
CHLOROPHYLL TOOTH PASTE
வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில் இல்லை!
இதோ! பெரிய எகானமி சைஸில் கிடைக்கிறது!
• நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.
CTPA/G/6


தாமரையின் அழகை நீங்களும் பெறலாம்..
நேர்த்தியாயும், மிருதுவாயும், பட்டின் மென்மையுடன் கூடிய எழிலைப் பெற இந்திய மங்கையர்கள் ஆஷா முகப் பவுடரை உபயோகிக்கிறார்கள்.
உங்கள் விலைக்குகந்த
உங்களுக்குரிய பவுடர்
Asha
ஆஷா முகப் பவுடர்
Asha FACE POWDER
விநியோகஸ்தர்கள்:
ஜ்யாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ ப்ரைவேட் லிட்.,
பம்பாய்—கல்கத்தா—டில்லி—மதராஸ்.
GM/3 TAM



ஒரு இனிய விருந்து
ஐஸ்கிரீம்

"அம்மா! மன உறுதி யென்பது நம்மைப் பொறுத்த விஷயமே இல்லை. சம்பவங்களைப் பொறுத்ததுதான் அது! நம்மை நடத்துகிற சக்தி நமக்கு மன உறுதி தருவதற்காகவே, சிற்சில சம்பவங்களை நடத்திக் காட்டி அவற்றின் மூலம் நமக்கு இதய வலிமையைத் தருகிறது! உண்மையிலேயே பல்லவ விஜயத்துக்கு என்னுடைய ஒரு சிறு தொண்டும் பயன்பட போகிறது என்றால் அதைவிட நான் அடையக் கூடிய பாக்கியம் வேறு என்ன உண்டு. என்னுடைய எல்லையற்ற அன்புக்கு உரியவரான சித்திராங்கபூபதிக்கு நான் செய்யக் கூடிய சேவை இதைவிட வேறு என்ன உண்டு! இந்த நினைப்புத்தான் எனக்கு மனவலிமை தருகிறது! இந்த ஒரு இன்ப நினைவுதான் என்னுடைய கடமையில் எனக்கு ஊக்கம் உண்டாக்குகிறது! நாளைக் காலையிலிருந்து என்னுடைய திருப்பணி நாட்டு மக்களிடையேயில்லை. இந்த வலம்புரி அம்மனுடைய தெய்வ சந்நிதானத்திலேதான்! எந்த ஒப்பற்ற இசைக் கருவியினால் நமது முன்னோர்கள் தெய்வத்தை ஆவாகனம் செய்து, இந்த மாநிலத்துக்கு நல்வாழ்வு வழங்கினார்களோ, அந்த அற்புதமான பேரியாழினால் நான் இனித் தமிழ் குலத்தின் நல்வாழ்வுக்குப் பிரார்த்தனை செய்வேன்! வலம்புரி அரச குடும்பமும், முத்தரையர்களின் தமிழ்க் குலமும் ஐக்கியப்பட்டு அந்த அஸ்திவாரத்திலே பல்லவ விஜயம் ஸ்தாபிதம் ஆக வேண்டும் என்று, அல்லும் பகலும் யாழின் நரம்புகளிலே துதி செய்வேன். இது சத்தியம்!" என்றாள்.

நிலவின் அமுதத்தைப் பருகிய நீலக் கடலிலிருந்து, பெரிய அலை ஒன்று பேரின்பக் கோலாகலத்திலே பொங்கிப் புரண்டு குதித்துக் கொண்டு வந்து வலம்புரி அம்மனின் கோவிற் படிக்கட்டுகளிலே சாடியது! அதனின்று ஏழு ஸ்வரங்களும் இனிமையாக ஒலித்தன!

முப்பதாம் அத்தியாயம்

கனவின் ஒலி!

வலம்புரி அரண்மனையிலே அரச மன்றம் பெரிய விழா மன்றமாகக் காட்சி தந்தது. அரசப் பிரதானிகளும், மன்றத்தார்களும், நகரச் சுற்றமும், அமைச்சரும், சமயக் கணக்கரும், பெரியார்களும், விருதுச் சான்றோர்களுமாக அணி அணியாக அமர்ந்திருந்தார்கள். நடுநாயகமாக விளங்கிய அரச மேடையிலே பட்டம் சூடப்போகும் வேந்தன் அமர வேண்டிய ஆசனம் முத்துக்களும் ரத்தினங்களுமாகப் பதிக்கப்பட்டு ஒரே ஒளிக் கதிர்களை வீசிக் கொண்டிருந்தது! மங்கள வாத்தியங்கள் மனித இதயங்களின் ஆனந்தத்தையெல்லாம் ஒருமித்து இன்பஒலி அலைகளாகப்பொழிந்து கொண்டிருந்தன. திருச் சங்கத்தின் ஒலி அரச கம்பீரத்தோடு 'பம் பம்' என்றுஎழுந்தது. எல்லாரும் சித்திராங்க பூபதியின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். அப்பொழுது மாடியிலே என்ன நடந்தது?

மந்திரநாயகமும் தானுமாகச் சித்திராங்க பூபதி தன்னுடைய அந்தரங்க அறையிலிருந்து அரச மன்றத்துக்குப் புறப்படுகிற சமயம் அது. செங்கோல் பிடிக்க வேண்டிய கையிலே அவனுக்குக் கடகத்தை அணிந்து கொண்டிருந்தார் மந்திரநாயகம். அப்பொழுது மாடிப் படிகளிலே 'டக் டக்' என்று குமிழ்க் கட்டையின் ஓசை கேட்டது. ஒருவினாடி பூபதியின் நெஞ்சம் 'திக்' என்றது! அடுத்த வினாடி 'பளார் பளார்' என்று பிரம்பின் வீச்சு ஒலித்தது!



"என்னப்பா ராஜகுமாரா! அதாவது ராஜ அலங்காரா!" என்று குரல் கேட்டது! சித்தர் அறையின் உள்ளே நுழைந்தார்.

மந்திரநாயகம், பூபதி இருவருக்குமே உடல் பதறியது.

"என்ன அமைச்சர் பெருமானே! திகைத்துப் போய் நிற்கிறீர்கள்! இந்த வாலிபப் பிள்ளையை முன்னொரு நாள் ராஜகுமாரா என்று அழைத்தேன். எங்கே தெரியுமோ? மாமல்லபுரத்து வீதியிலே! அப்போது அங்கேயிருந்த பைத்தியங்கள் எல்லாம் சிரித்தன! இவனை ராஜகுமாரன் என்று சொல்லுவதற்காகச் சிரித்தன! இப்பொழுது என்னடா என்றால் சிரிப்பதை விட்டு விட்டு நீங்கள் திகைத்துப் போய் நிற்கிறீர்கள்! என்னையா விஷயம்! இந்தக் கட்டையைப் பார்த்தால் திகைப்பாக இருக்கிறதாக்கும்! அப்படித்தானா? சிவபூஜையில் கரடி வந்தது போல் இந்தப் பைத்தியம் இப்பொழுது எங்கே



இப்படி வந்தது என்று பார்க்கிறீர்கள்! இப்பொழுது வராமல் அரச மன்றத்திலே வந்து நின்றால் எப்படியிருக்கும்? நீங்களே சொல்லுங்கள்! அத்தனை பிரதானிகளும், அத்தனை அமைச்சர்களும் இந்தப் பைத்தியத்தைப் பார்த்துச் சிரிப்பார்கள்! சிரிப்போடு நின்றுவிட்டால் சரி. குற்றமில்லை. அப்படியில்லாமல் முதுகிலே இரண்டு சாத்துச் சாத்தி விட்டால்? அல்லது நீங்கள்தான் வந்து இந்தக் கட்டையின் முதுகைக் காப்பாற்றுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம்! அப்படியேயானாலும் இந்தக் கட்டை யார் என்ற கேள்விக்கு என்ன கூறுவீர்கள்! மரக்கட்டை என்பீர்களா? அல்லது குமிழ்க் கட்டை என்பீர்களா? அல்லது பிரம்புக் கட்டை என்று சொல்வீர்களா? அதெல்லாம் பெரிய தர்ம சங்கடம், பாருங்கள். அதனால்தான் இப்பொழுதே வந்துஇந்த அந்தரங்க அறையிலே உங்கள் இருவரையும் கண்டு பேசி விட்டுப் போய்விடலாம் என்று இந்தக் கட்டை இப்படியே வந்தது! புரிந்ததா? திகைக்காதீர்கள். திகைப்பெல்லாம் நீங்கி முப்பது நாழிகை நேரம் ஆகிறது. இப்பொழுது விடிந்து விட்டது! நீலக் கடலுக்கு மனம் என்று ஒன்று இருப்பதாகப் பூபதியிடம் யாரோ சொன்னார்களாம். அந்தக் கடலின் மனத்திலே கண்ட கனவுதான் பல்லவ விஜயம். கடல்கண்ட அந்தக் கனவு நனவாகி விட்டது என்று அரச மன்றத்திலே இந்தக் கட்டையின் சார்பாக அறிவிப்புச் செய்து விடுங்கள். உதயசந்திரனைத் தேடாதீர்கள். அவர் இப்பொழுது நேரே செந்தமிழ் நாட்டுக்குப் புறப்படுகிறார். அங்கே நந்திவர்ம பல்லவன் கோட்டையிலே அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறான். கவலைப்படாதீர்கள். வெளியே வந்து சிம்மாசனத்திலே ஏறி விடுவான்! அதுதான் சொன்னேனே, கனவு நனவாகி விட்டது என்று!" என்றார்.

இப்படிச் சொல்லி விட்டு ஒரு விநாடி கூட அங்கே தாமதிக்காமல் விறு விறு என்று நடந்தார் சித்தர். குமிழ்க் கட்டையின் ஓசையும் பிரம்பின் வீச்சும் பலமாக ஒலித்தன.

இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு வரக் கொஞ்ச நேரம் பிடித்தது பூபதிக்கு! மந்திரநாயகமோ சொல்லற்று நின்றார்!

சுய உலகுக்கு வந்த மறு விநாடி மந்திர நாயகம் பூபதியைப் பார்த்துக் கேட்டார்:


"விரைவாக ஓடிச் சென்று அந்தச் சித்தரை வழிமறிக்கட்டுமா? இவர் யாரென்று தெரிந்துகொள்ளாமல் இனிமேலும் சும்மா விடுவது பேதைமை!"

மின்னல் பாய்ந்து வருவதுபோலப் பளிச்சென்று மறுமொழி சொன்னான் சித்திராங்க பூபதி.

"வேண்டாம்! ஞானியின் செயல்களை ஆராயக் கூடாது என்பது நான் ஏற்கனவே கற்றுத் தெரிந்து கொண்ட பாடம்! இவர் யாரென்று இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையென்றால், உங்களுடைய அதிர்ச்சியிலிருந்து இன்னும் நீங்கள் மீளவில்லை என்றுதான் அர்த்தம்! தயவுசெய்து மேற்கொண்டு இங்கே நடக்கவேண்டிய காரியங்களைக் கவனியுங்கள்! உதயசந்திரனையும் இந்தச் சித்தரையும் இனிமேல் வலம்புரித் தீவிலே தேடாதீர்கள்!"

ஒரு வேந்தனுக்கு இருக்க வேண்டிய தன்னம்பிக்கையோடும் நிதானத்தோடும் பேசினான் பூபதி! அவனுடைய வார்த்தைகளிலே முன்பிருந்த தடுமாற்

இந்தியாவுக்குப் பணியாற்றும்
இறக்கைகள்



நாள்தோறும் உச்சிவேளையில்

50 ஐ. ஏ. ஸி. விமானங்கள் பறந்து கொண்டிருக்கும்!

இந்தியாவெங்கும் பறக்கும் இந்த விமானங்கள் வியாபாரிகள், டூரிஸ்டுகள், குடும்பமாகப் பிரயாணம் செய்பவர்கள் மற்றும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுகின்றன. இடத்திற்கு இடம் மிக துரிதமாயும் சுகமாயும் செல்ல ஜனங்களுக்கு உதவியாயிருப்பதுடன், இந்த விமானங்கள் இந்திய மக்களை நாளுக்கு நாள் நெருங்கி உறவாட உதவவும் செய்கின்றன.

இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் விமானங்கள் அன்றாடம் 132 ஸர்வீஸ்கள் மூலம், வருஷந்தோறும் 2 கோடி மைல்களுக்குமேல் பறக்கின்றன. மற்றும் துரிதமானதும், மிகவும் விரிவானதுமான போக்குவரத்திற்கான நம் நாட்டின் அதிகரித்துக் கொண்டுவரும் தேவையைப் பூர்த்தி செய்ய வருஷத்திற்கு வருஷம் இதன் விமானங்கள் அதிகரிக்கப்படுகின்றன.

இந்தியன் ஏர்லைன்ஸ்

கார்ப்பரேஷன்

5 & 6, மவுண்ட் ரோடு, சென்னை - போன்: 86433 (4 லைன்கள்)

IAC: 3907


பார்க்கத் தேவையில்லை . . .
ருசியிலிருந்து வித்தியாசம் தெரியலாம்!
முற்றிலும் புதியது!
கோலினாஸ்
ஸூப்பர்-வொய்ட்
KOLYNOS
TOOTHPASTE
பெப்பர்மின்டின் குளுமையும்,
இனிய வெற்றுமையுமுள்ள
முற்றிலும் புதிய ருசி
ஸூப்பர்-வொய்ட்
புன்னகையில் ஒளி வீசுகிறது!
பிடிக்க
சௌகரியமான
புதுவித மூடி.
GK. 3263

நம் இப்பொழுது இல்லை! அவனுடைய குரலிலே ஒலித்த உறுதியானது மத்திரநாயகத்தைப் பரவசப் படுத்திவிட்டது!

இதன் பிறகு வலம்புரித் தீவிலே என்ன நடந்தது என்பது வெளிப்படை! பட்டம் சூடப்போகும் இளவரசன் தன்னுடைய அன்புக்குப் பாத்திரமான அரசகுமாரி யார் என்று அரச மன்றத்திலே அறிவிக்கப் போவதாகச் சொன்னுன் அல்லவா? அதன் படியே முத்தரைய மன்னரின் புதல்வியையே தான் மணக்கப் போவதாக ஒரு மகத்தான அறிவிப்பை அரச மன்றத்திலே வெளியிட்டான் இளவரசன் சித்திராங்க பூபதி!



லண்டன் யுனிலிவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்தின் டைரக்டரான திரு ஏ. டி. போன்ஹாம் கார்டரும் அவரது மனைவியும் தங்கள் தூரக் கிழக்கு நாடுகளின் சுற்றுப் பிரயாணத்தின் போது சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அவர்களுடன் ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தலைவர் திரு ஏ.ஜே.வி. ஹார்ஸ்பெர்க் அப்ரஹாம், உதவித் தலைவர் திரு எஸ். எச். டர்னர் முதலியவர்களும் வந்திருந்தார்கள். இவர்களை மேற்படி ஸ்தாபனத்தின் சென்னைப் பிரதிநிதிகள் திரு எம். எம். மேனனும் திரு எஸ். வி. வேணுகோபாலும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றார்கள்.

வலம்புரித் தீவின் மக்கள் தங்களுடைய அரசி யார் என்று தெரிந்து கொண்டதிலே அளவு கடந்த ஆனந்தம் அடைந்தார்கள். வலம்புரி அன்னையான மகாராணி எல்லையற்ற மகிழ்ச்சியோடு திருமணத் திருநாளுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி மந்திரச் சுற்றத்தார்களுக்கு ஆணை விடுத்தார். இதைத் தொடர்ந்து அந்தத் தீவின் பரம்பரை வழக்கப்படி பேரியாழ் வாசிப்பதற்கான அரச திருமுகம் அனுப்பப்பட்டது! நீலமேக யாழ்ப்பாணர் செய்துவந்த அந்தப் புனிதமான திருப்பணியை மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் ஒருமித்த பரிசுத்தமான தெய்வ சிந்தனையோடு, இனியும் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு. இப்பொழுது வலம்புரி அம்மனுடைய சந்நிதியிலே யாழ்நங்கை காத்திருந்தாள்! அவளுடைய உள்ளத்துக்கு இதைவிட ஆனந்தம் தரக்கூடிய திருப்பணி வேறு என்ன உண்டு?

வலம்புரித் தீவிலிருந்து திருமண திருமுகம் தமிழ்நாட்டு முத்தரைய மன்னரிடம் சென்று, சீர் வரிசைகளோடு திரும்புவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டின் அரசியல் நிலை அப்படியிருந்தது! அப்பொழுது செந்தமிழ் நாட்டிலே சித்திரமாயனுடைய கட்சியில் பலம் அதிகரித்திருந்தது! பாண்டியர்களும் அவர்களைச் சேர்ந்த மண்டலாதிபதிகளும் ஒரே ஐக்கியத்தோடு நந்திபுரம் கோட்டையைத் தாக்கினார்கள். வீர விக்கிரமனுடைய தலைமையிலே வேளிர்களும் இந்தப் பெரும் போரிலே முன்னணியில் நின்று பொருதார்கள். கோட்டைக்குள்ளே சிக்கிய நந்திவர்மன் பெரும் கவலைக்கு உள்ளானுன்! வலம்புரியின் உறவை உறுதிப்படுத்திக் கொண்ட உதயசந்திரன், முத்தரையர்களின் பெரும்படையோடு வந்துதான் எதிரிகளை முறியடித்து நந்திவர்மனை மீட்க வேண்டியிருந்தது! இதன் பிறகு தான் பல்லவ விஜயத்தின் முதலாவது மங்களத் திருநாளாக வலம்புரித்

தீவிலே பூபதிக்கும் முத்தரையர் குமாரிக்கும் அரசத் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது!



அந்தச் சம்பவங்கள் எல்லாம் தமிழ் நாட்டின் சரித்திரம் விரிவாகக் கூறுகிற வரலாறு! நந்திவர்மன் நந்திபுரம் கோட்டையிலே சிக்கிக் கொண்ட போது உதயசந்திரன் தோன்றி, எப்படிச் சித்திரமாயனைக் கொன்று வீழ்த்தி, மீண்டும் நந்திவர்மனைப் பல்லவ அரச பீடத்தில் ஏற்றினான் என்பது சரித்திரப் புகழ் பெற்ற வீரக் கதை. தமிழனுடைய பெருமையையும் அறிவாற்றலையும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிற உன்னதமான நீண்ட வரலாறு அது. அந்த வரலாற்றின் விளைவாகவே கடல் கண்ட கனவும் பூபதியின் திருமணமும் நனவாக மலர்ந்தன! இதன் பின்னர் நந்திவர்மன் தமிழ் நாட்டிலே சாதித்த மகோன்னதமான செயல்கள் பலப்பல! அவன் பெற்ற வெற்றிகளும் அவன் புரிந்த திருப்பணிகளும் காஞ்சி மாநகரத்தின் கற்களிலும், சரித்திர ஏடுகளின் கவிதைகளிலும் நிரந்தரமாக நிற்கின்றன!

இத்தனை பெரிய சாதனைகளுக்கும் மத்தியிலே, மன நிம்மதிக்காகவும் உள்ளத்தின் களக்கத்திற்காகவும் சாந்தமயமான பௌர்ணமி இரவுகளிலே உதய சந்திரனும் நந்திவர்ம பல்லவனும் மாமல்லபுரம் கடற்கரை யோரமாகக் குதிரையிலே செல்லுவதுண்டு. அப்பொழுதெல்லாம் நந்திவர்மனுடைய கண்கள் அந்த எல்லையற்ற கடலின் பரப்பை நோக்கும். அந்த நீலப் பரப்பிலே, பல காதங்களுக்கு அப்பால் நிலவிலே குளித்துக் கொண்டு நிற்கிற வலம்புரித் தீவை நோக்கி, நந்திவர்மனின் உள்ளம் பறந்து செல்லும். தென்னை மரங்களும் அவற்றின் கீற்றுகளினூடே புகுந்து செல்லும் நிலவின் அமுதக் கரங்களுமாக, சுந்தரமயமான வலம்புரித் தீவு, நந்திவர்மனின் மனக் கண்களுக்கு முன்னால் தெரியும். தன் வயம் மீறிய எல்லையற்ற நன்றியோடு அந்தத் திசையை நோக்கி இரு கரங்களையும் கூப்பி வணங்குவான் நந்திவர்மன்! அப்பொழுது வலம்புரித் தீவின் கடற்கரையிலே பார்த்த அற்புதச் சிலை நினைவுக்கு வரும். வானத்தில் பொழிகின்ற நிலவின் இனிமையும், சந்திர வட்டத்தின் அழகும் ஒன்று சேர்ந்து வந்து, ஒரு பெண் உருவத்தில் சிலையாக வந்து நிற்கிறதோ என்று எண்ணும்படியான அந்தப் பெண்ணின் சிலையும் அந்தச் சிலைக்கு அருகில் வீணையின் வடிவத்திலே நிற்கும் சிறிய சிற்பமும் மனக் கண்களுக்கு முன்னால் தோன்றும். அவனுடைய செவிகளிலே பேரியாழின் இன்னொலி கடலின் அலைகளிலே தவழும் மெல்லிய காற்றிலே மிதந்து வருவது போலக் கேட்கும்! மனப் பிரமைதான். கனவுத் தோற்றந்தான். என்றாலும், அந்த இன்னொலி தேன் நிலவையும், தெளிந்த வானத்தையும், குளிர்ந்த காற்றையும் ஒன்று சேர்த்துக் குழைத்து இதயத்திலே கொண்டு அமுதமாகக் கொட்டுவதுபோல இருக்கும் நந்திவர்மனுக்கு! அப்பொழுதெல்லாம் உதயசந்திரன் நந்திவர்மனைப் பார்த்து, "பௌர்ணமி அல்லவா? கடல் கனவு கண்டு கொண்டிருக்கிறது!" என்று சொல்லுவார்.




மங்களம்

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

பூச்சிகள் உங்கள் வீட்டில்

உபத்திரவம்

செய்யாமல் தடுங்கள்!





லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து

அவைகளின் தொல்லையை ஒழியுங்கள்!

வீட்டில் நடமாடும் பூச்சிகள் ஒரு பெரிய தொல்லையாயிருப்பதோடு மட்டுமின்றி, பலவித வியாதிகளைப் பரப்பவும் செய்யலாம்! எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே இருங்கள். பூச்சிகளை க்ஷணப்பொழுதில் சீக்கிரமாகக் கொல்லும் சக்தி வாய்ந்த லின்டேன் கலந்த ப்ளிட்டைத் தவறாமல் உபயோகியுங்கள்! முன்னைவிட தீவிர சக்திவாய்ந்த இந்த பூச்சிகொல்லி அதிக துரிதமாக வேலை செய்கிறது. இதில் லின்டேனும், டி.டி.டி.யும் (D D T) ஒருங்கே சேர்ந்துள்ளதால், இதன் பலன் அதிக காலம் நீடித்து நிற்கிறது. லின்டேன் கலந்த ப்ளிட் புகழ் பெற்ற சிவப்பு, வெள்ளை மற்றும் நீலநிற டின்னில் கிடைக்கும்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

ஏ. 4502

REGISTERED No. M. 6393
Registered as a Newspaper in Ceylon